இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 123 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 16 புதன்கிழமை 29.03.2017



ரவிராஜ் படுகொலை:

## விடுதலைபெற்ற 3 கடற்படையினரையும் தேடிக் கண்டறிய சி.ஐ.டிக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் >> 04

## போரின்போது குற்றங்கள் நடந்தமை உண்மைதான்

ஒப்புக்கொள்கிறார் கோத்தபாய



கொழும்பு, மார்ச் 29
போரின்போது, ஆங்காங்கே சில குற்றச்செயல்கள் இடம்பெற்றன. ஆனாலும், போர்க்குற்ற விசாரணைகள் நடத்தினால், அது நல்லிணக்கமுயற்சிகளைப் பாதிக்கும். சமூகங்களுக்கு இடையிலான இடைவெளியையே அதிகரிக்கும்.
இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு >> 28

சாதாரண தர பெறுபேறு

## வேம்படி அதிக 9ஏயுடன் வடக்கில் முன்னணி

யாழ்ப்பாணம், மார்ச் 29
ஜீ.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 52 மாணவிகள் 9ஏ பெறுபேறு பெற்றுச் சாதனை படைத்தனர்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 36 மாணவர்கள் 9ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட் >> 28

# ஆட்சி மாறினால் சாட்சி சொன்ன அனைவரையும் அடைப்போம்!

கடற்படையின் முன்னாள் தளபதி வீரசேகர லண்டனில் இருந்து கொதிப்புப் பேட்டி



கொழும்பு, மார்ச் 29
இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் சாட்சியமளித்த அனைவரையும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் சிறையில் தள்ளுவோம் என்று அச்சுறுத்தியிருக்கிறார் கடற்படையின் முன்னாள் தளபதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர. ஜெனிவாவில் அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தவர்களைப் பெயர் குறிப்பிட்டு அவர்களையெல்லாம் சிறையில் அடைப் >> 28

## யாழ். இந்து மாணவன் தமிழ்மொழி மூலத்தில் தேசிய ரீதியில் முதலிடம்



யாழ்ப்பாணம், மார்ச் 29
ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில், மும்மொழிகளில் ஐந்தாம் இடத்தையும், தமிழ்மொழி >> 28

## கொழும்பு விசாகா மாணவி தேசிய மட்டத்தில் முதலிடம்

கொழும்பு, மார்ச் 29
ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் கொழும்பு விசாகா கல்லூரி மாணவி முத லிடத்தையும் கண்டி மஹாமாய கல்லூரியைச் சேர்ந்த மாணவி இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்தனர்.
கொழும்பு ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் மற்றும் >> 28

முச்சந்தி முரளி



மொத்தத் தமிழரையும் அடைக்கச் சிறைகளில இடம் இருக்குமோ?

## காணாமற்போனோர் விவகாரத்துக்கு அரச தலைமைகளுடன் பேசித் தீர்வு

வடக்கு முதல்வர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 29
"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அல்லது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி காணாமற்போனோர் விவகாரத்துக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், காணாமற்போனோரின் உறவினர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளன"
இவ்வாறு வடக்கு மாகாண >> 04

## அச்சுவேலி முக்கொலை வழக்கில் பொலிஸ் சாட்சியம் நேற்றுப் பதிவு

விசாரணைகள் இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 29
அச்சுவேலி முக்கொலை வழக்கில் பொலிஸ் சாட்சியப் பதிவுகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று இடம்பெற்றன. தொடர் விசாரணைகள் மூன்றாவது நாளாக இன்று தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.
அச்சுவேலி கதிரிப்பாயில் நடைபெற்ற முக்கொலை வழக்கின் சாட்சியப் பதிவுகள்யாழ்ப்பாணம் >> 28

## காணி விடுவிப்பு மைத்திரி கையில்

கூறுகிறார் ஜோன் அமரதுங்க

கொழும்பு, மார்ச் 29
வடக்கு கிழக்குக் காணி விடுவிப்பு அரச தலைவரின் கைகளிலேயே உள்ளது. எவ்வாறாயினும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் படையினர் வசமுள்ள காணிகள் >> 28

## யாழ். மாவட்டத்துக்கு இந்த ஆண்டும் கல் வீடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கடந்த ஆண்டில் மீள்குடி யேற்ற அமைச்சால் வழங்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் இந்த ஆண்டும் வழங்குமாறு, தலைமை அமைச்சர் அலுவலகத்தால் மீள்குடி யேற்ற அமைச்சுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக 8 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் கல் வீடுகளை நிர்மாணிப்பதற்கான அனுமதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குத் தற்போது >> 28

## இறுதிப் போரில் இடம்பெற்றவை போர்க்குற்றமா?

நீதிமன்றமே தீர்மானிக்க முடியும் என்கிறார் மங்கள



கொழும்பு, மார்ச் 29
"இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்கள், போர்க் >> 04

## உள்ளக நீதி விசாரணைக்கு தமிழர் ஆதரவு கிடைக்கும்!

அரசின் நம்பிக்கை இது

கொழும்பு, மார்ச் 29
"வடக்கில் உள்ள அடிப்படைவாதிகள்தான் பன்னாட்டு விசாரணையைக் கோருகின்றனர். அங்குள்ள சாதாரண மக்கள் அதனைக் கோரவில்லை. உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு தமிழ் மக்கள் முழு >> 04

## காணி விடுவிப்புக் குறித்து மைத்திரி – சம்பந்தன் பேச்சு

முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை

கொழும்பு, மார்ச் 29
காணிகள் விடுவிப்புத் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையே அரச தலைவர் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. எனினும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிய வருகின் >> 27



# சாடியில் கஞ்சா வளர்த்த குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 29

மலையகம், வட்டவளை சிங்கள வித்தியாலயத்துக்கு அண்மித்த பகுதியில் வீட்டு வளாகத்தில் சட்ட விரோதமாக கஞ்சாச் செடிகளை வளர்த்து வந்தனர் என்ற குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். "பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து. மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போது இவ்வாறு கஞ்சாச் செடிகள் வளர்ப்பது கண்டறியப்பட்டது. இதன்போது 5 கஞ்சாச் செடிகள் பொலிஸாரால் மீட்கப் பட்டன.

சந்தேகநபர்கள் தமது வீட்டு முற்றத்தில் கஞ்சாச் செடிகளை வளர்த்தனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் நடத்திய பழக்கடையை மூடிவிட உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

சுகாதார விதிமுறைகளை பின்பற்றாமல் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பழக்கடையொன்றை உடனடியாக மூடுமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை சாலையில்வைத்தியசாலை பக்கமாக கழிவுநீர் வாய்க்காலுக்கு அருகில் பழக்கடையொன்று சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்தது. அந்தக் கடையைநடத்துவதற்குரிய அனுமதியையும் மாநகர சபையிடமிருந்து அதன் உரிமையாளர் பெற்றிருக்கவில்லை. அந்தப் பழக் கடை சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த போதும் சுகாதார பரிசோதகர்கள் அதனைகண்காணிப்பதற்கோ அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ முன்வரவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சி. சதீஸ்தரன் குறித்த பழக்கடையை சோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அருகே இயங்கிய பழக்கடைக்கு சுகாதார பரிசோதகர்களுடன் சென்ற உப பொலிஸ் பரிசோதகர் ஜனந்தன் மற்றும் பொலிஸ் சார்ஜன் நந்தகுமார் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் கடையை சோதனைக்கு உட்படுத்தியதுடன் அங்கு காணப்பட்ட பழுதடைந்த பழங்களையும் கைப்பற்றினர். அத்துடன் கடையில் நின்ற விற்பனையாளரையும் கைது செய்து பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவித்த நீதிவான் சி. சதீஸ்தரன் உடனடியாக பழக்கடையை மூடுமாறு உத்தரவிட்டார். இந்த வழக்கை எதிர்வரும் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மன்று கட்டளையிட்டது. (வ-103)

# இங்கிருந்து சென்றாலும் காணிகள் விடுவிப்பில் கரிசனை காட்டவேண்டும்

## யாழ்.தளபதியிடம் மாவை எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 29.

"யாழ்ப்பாண பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றலாகிச் செல்லும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க வாக்குறுதியளித்ததன் பிரகாரம் வலி. வடக்கு மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

"யாழ்.குடாநாட்டில் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றி பதவி உயர்வுடன் இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றலாகிச் செல்லும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க வாக்குறுதியளித்ததன் பிரகாரம் வலி. வடக்கின் வடக்கு நிலங்களை இராணுவம் விடுவிப்பதற்கு தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும் . அத்தோடு குடாநாட்டின் அடுத்த கட்டளைத் தளபதியாக வருபவரும் இந்த விடயத்தில் கரிசனை கொண்டவராக இருக்க வேண்டும். இதுவரை காலமும் இராணுவத் தலைமையகத்தில் யார் என்ன செய்கின்றனர் என்ற நிலை தெரியாது. இங்கு இருந்து நிலமைகளைப் பார்வையிட்டுப் புரிந்து கொண்ட தளபதி மகேஸ் சேனாநயக்க தலைமையகத்துக்குச் சென்று காணி விடுவிப்புக்கான நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (வ-101)

# மகிந்த உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

"2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலின் போது இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் பரப்புரைகளுக்கு பயன்டுத்தப் பட்டன. ஆனால் அதற்கான வாடகையை மகிந்தவோ அவரைச் சார்ந்தவர்களோ இதுவரை செலுத்தவில்லை. அவ்வாறு செலுத்த வேண்டிய 142 மில்லியன் ரூபாவை செலுத்துமாறு பலதடவைகள் கோரிக்கைகள்விடப்பட்டன. இன்னும் அந்தக் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை. அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றும் அவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது" என்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம், பிரதிவாதிகளின் பதிலியை முன்வைப்பதற்கான கட்டளையை வழங்கியது. (வ-4)

# ஓட்டோ சாரதி மீது கும்பல் தாக்குதல்

## கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம் மார்ச் 29

யாழ்ப்பாணம், கொக்குவில் முதலி கோவிலடியில் இனந்தெரியாத கும்பலால் முச்சக்கர வண்டிச் சாரதி தாக்கப்பட்டதுடன், அவரது முச்சக்கர வண்டியும் அடித்து நொறுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

"மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல், முச்சக்கரவண்டி சாரதி மீது தாக்குதல் நடத்தியதுடன் அவரது முச்சக்கரவண்டியையும் சேதப்படுத்தியது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற போதும் அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# கோண்டாவில் இரட்டைக் கொலை வழக்கு விசாரணை ஏப். 2 ஆரம்பம்

## சந்தேகநபர் மீளவும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

இரட்டைக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. சந்தேகநபர் மீதான இரட்டைக் கொலைக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணைகள் ஆரம்பமாக இருப்பதனாலேயே அவர் மீளவும் விளக்கமறியில் வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி வீரசிங்கம் சுரேஸ்குமார் சுரேஸ்குமார் பிரதீபா என்ற இளம் தம்பதியரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கிருஷ்ணன் ஓம்சிவா என்பவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டார்.

சந்தேகநபருக்கு எதிரான குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாண மேல் நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டது. யாழப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முன்னிலையாகியிருந்தார். வழக்கின் விசாரணைகள் நடைபெற இருப்பதனால் சந்தேநபரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-ரி)

# பணிப்பெண்ணாக சவூதிக்குச் சென்ற மலையகப் பெண் கொடூரக் கொலை

## கொழும்பில் நடந்த உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாக சென்று உயிரிழந்த மலையகப் பெண், கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாகியே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மஸ்கெலியா ஸ்டெர்ஸ்பி சூரியகந்த (லேட்புரூக்) தோட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டி கற்பகவள்ளி (வயது 41) மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டார்.

அவர் உயிரிழந்து 5 மாதங்களுக்கு பின்னர் அவரது சடலம் இலங்கைக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டது. அவரது இறப்புக் குறித்துச் சந்தேகம் கொண்ட உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். அவரது உடல் நீதிமன்றின் உத்தரவில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போதே சித்திரவதைக்குள்ளாகியே அவர் கொலை செய்யப்பட்டார் என்று தெரியவந்தது.

மஸ்கெலியாவிலிருந்து தனது குடும்ப வாழ்வாதாரத்துக்காகக் கொழும்பில் உள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக அவர் சவூதி அரேபியாவுக்குச் சென்றார். அங்கு றியாத் பிரதேசத்தில் செல்வந்தர் ஒருவரின் வீட்டில் அவர் பணிப்பெண்ணாக கடமையாற்றினார்.

2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையிலிருந்து பணிப்பெண்ணாக சென்ற இவர் சவூதி அரேபியா றியாத் ஒலேய்யா பபா என்ற தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று அங்கிருந்து உறவினர்களுக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த நவம்பர் முதலாம் திகதியன்று கற்பகவள்ளி உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது. உறவினர்கள் குறித்த வேலைவாய்ப்பு நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தி உடனடியாக அவரது உடலத்தை இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்து தரும்படி கேட்டுள்ளனர்.

இதனையடுத்து பல்வேறுப்பட்ட இடங்களில் உடலத்தை இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் கற்பகவள்ளியின் உறவினர்கள் உதவிகளை நாடியுள்ளனர். இருந்தும் 5 மாதங்கள் கடந்த பின் அவரது உடலம் கடந்த 25ஆம் திகதி தான் இலங்கைக்கு கொண்டுவரப் பட்டது. நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில் வைத்து அவரது உடலம் உறவினர்களிடம் கையளிக்க பட்டது.

சவூதி அரேபியா றியாத் ஒலேய்யா பபா என்ற தடுப்பு முகாமில் தடுத்து வைத்த நிலையில் மாரடைப்பு காரணமாகவே கற்பகவள்ளி உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனைச் சான்றிதழை சவூதி அரேபியா நாட்டு அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

எனினும் உறவினர்களுக்கு சந்தேகம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் உடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை செய்யவேண்டும் என்று அவர்கள் கோரினர். கொழும்பில் உடலம் மீண்டும் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது உயிரிழந்த பெண்ணின் இடுப்பு பகுதி மற்றும் கழுத்து பகுதி ஆகிய இடங்களில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

அவரைச் சித்திரவதைக் குள்ளாக்கியே கொலை செய்துள்ளனர் என்று இலங்கையின் மருத்துவ அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

எனவே, இந்த பெண்ணின் கொலை குறித்து இலங்கை வெளிநாட்டு பிரதிநிதிகளும், மலையக அரசியல் தலைமைகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-4)

# பொது அமைப்புகளுக்குக் காணி வழங்குவது தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி, மார்ச்29

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பொது அமைப்புகளுக்குக் காணிகள் வழங்குவது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்றுக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், மாகாணக் காணி ஆணையாளர் மகேஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், பளை பிரதேச செயலாளர் ப.ஜெயராணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, காணித் தேவையுடைய பொது அமைப்புகள் இதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது.

இதேவேளை, தற்போது திருவையாறு மேற்கில் அமைந்துள்ள பத்து ஏக்கர் காணியை எஸ்.கே. அறிவுச்சோலை அமைப்புக்கு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வலியுறுத்தினார். (த-ய)



# கிழக்கு மாகாண சபை நேற்று முற்றுகை

## வேலை தேடும் பட்டதாரிகள் உரிய தீர்வை உடன் வழங்க கோரிக்கை

மூதூர், மார்ச் 29

திருகோணமலை மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் நேற்றுக் கிழக்கு மாகாணசபையின் இரண்டு பிரதான வாயில்களையும் முற்றுகை யிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுடன் 27ஆவது நாளாக மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுப் பகல் ஊர்வலமாகச் சென்று மாகாண சபை வாயிலை முற்றுகையிட்டுப் போராட்டத்தை நடத்தினர்.

மாகாண சபைக்குள் நுழைய எத்தனித்த பட்டதாரிகளைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் 4பேரை மட்டும் உள்ளே வந்து பேசுமாறு கூறினர். எனினும் இதனை மறுத்த பட்டதாரிகள் சம்பந்தப்பட்ட அதிகாரி இவ்விடத்தில் வந்து பதில் வழங்கவேண்டும் எனக் கோரி பிரதான வாயில்களுக்கு முன் அமர்ந்தனர். மதிய நேரம் என்பதால் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் வெளியே செல்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. சுமார் ஒரு மணிநேரம் இந்த நிலை நீடித்தது.

இந்தச் சமயத்தில் அங்கு வருகை தந்த திருகோண மலை தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பட்டதாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டார். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இல்லாததால் நாளை வந்து பேசுமாறு பொலிஸார் தெரிவித்தனர். சில நிமிடங்கள்பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் பின்னர் கலைந்து சென்றனர். (த-ய-45)

## மருந்துக் கூட்டுத்தாபனத்தில் 11 கோடி ரூபா மருந்துகள் நாசம்

கொழும்பு, மார்ச் 29

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ள மருந்துகளில் 11 கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் ஏற்கனவே காலாவதியாகிவிட்டதாகவும், மேலும் 53 வகையான மருந்துகள் விரைவில் காலாவதியாகும் நிலையில் இருப்பதாகவும் சுகாதார அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 53 வகையான மருந்துகளும் இவ்வருடம் மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் காலாவதியாகவுள்ளதாகவும், அந்தக் கால எல்லைக்குள் குறித்த மருந்துகளை விற்பனை செய்வதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளதாகவும் தெரியவருகின்றது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பலவீனமான முகாமைத்துவம் காரணமாகவே இத்தகைய இழப்புகள் ஏற்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டி யுள்ளன. (த)

## வில்பத்து குறித்த வர்த்தமானியால் முசலி மக்களுக்கு பெரும் பாதிப்பு

### அரச தலைவருக்கு அமைச்சர் ரிசாத் கடிதம்

மன்னார், மார்ச் 29

வில்பத்துத் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல், முசலிப் பிரதேச மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் அதனை உடனடியாக இரத்துச் செய்யவேண்டுமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அரச தலைவருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கால் நூற்றாண்டு கால அகதி வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து விட்டு, மீண்டும் கஷ்டங்களின் மத்தியிலே தமது பூர்வீகக் காணிகளில் குடியேறியிருக்கும் முசலிப் பிரதேச மக்களுக்குப் புதிய வர்த்தமானி அறிவித்தலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளும், மேய்ச்சல் தரை நிலங்களும், குடியிருப்புக் காணிகளில் ஒரு பகுதியும் பாதுகாக்கப்பட்ட வனத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமை பிழையானது.

கடந்த அரசின் இனவாத நடவடிக்கையினாலேயே தங்களின் தலைமையிலான புதிய அரசைக் கொண்டுவருவதற்கு முஸ்லிம்கள் முழுப்பங்களிப்பையும் நல்கினர்.

ஆட்சி மாற்றத்தை வேண்டி தங்களது உயிரையும் துச்சமென மதித்து எதையுமே பொருட்படுத்தாது முன்னின்று உழைத்த இந்த முஸ்லிம் சமூகத்தை இனவாதிகள் தொடர்ந்தும் கொடுமைப்படுத்துவதற்கு இந்த அரசு அனுமதிக்கக் கூடாது.

முஸ்லிம் சமூகத்தைக் காடழிக்கும் சமூகமாகக் காட்டி இனவாதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பிழையான நடவடிக்கைகளுக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் அரசின் இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை நாம் பார்க்கின்றோம். அதுவும் தாங்கள் ரஷ்யாவில் இருக்கும்போது இந்த வர்த்தமானிப் பிரகடனம் வெளியிடப்பட்டமை எமக்குக் கவலை தருகின்றது.

வில்பத்து இயற்கை சரணாலயத்தில் ஓர் அங்குல நிலத்தையேனும் அபகரிக்காத முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டமான பழிகளை சுமத்தி வரும் இனவாதிகளுக்குப் புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தீனி கிடைத்துள்ளது என்பதையும் தங்களின் மேலான கவனத்தில் கொள்ள வேண்டும்என்றுள்ளது.

இதே வேளை, புதிய வர்த்தமானி அறிவித்தலால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தெரிவித்த அமைச்சர் ரிசாத், அரசு உரிய நடவடிக்கை எடுத்து வர்த்தமானிஅறிவித்தலைஇரத்துச்செய்ய உதவ வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (த-56)

## அடுத்த மாத ஓய்வூதியம் ஏப்ரல் 7ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அனைத்து ஓய்வூதியங்களும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதியே வழங்கப்படுமென ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக ஒவ்வொரு மாதமும் 8 ஆம் அல்லது 10ஆம் திகதிகளில் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவு இம்முறை 7ஆம் திகதியே வழங்கப்படவுள்ளதாகவும், அதற்கேற்ப சகல பிரதேச செயலாளர் காரியாலயங்களும் முன்கூட்டியே ஆயத்தங்களைச் செய்து வருவதாகவும் ஓய்வூதியத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த ஆறு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதிபெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

## நோயாளர்களால் நிரம்பி வழியும் தெல்லிப்பழை வைத்தியசாலை

### இக்கட்டான நிலையில் பொதுமக்களை ஒத்துழைக்குமாறு நிர்வாகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

அதிகமாகப் பரவி வரும் டெங்கு, இன்புளுவென்சா மற்றும் ஏனைய வைரஸ் காய்ச்சல்களினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைப் போன்று மாவட்டத்தின் இரண்டாவது பெரிய வைத்தியசாலையான தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது.

"நோயாளர்களின் நலன்கருதி எம்மிடமுள்ள வளங்களை உச்ச அளவில் பயன்படுத்திச் சிறப்பான சேவையை வழங்க முடியும். நோயாளர்களும் பொதுமக்களும் வைத்தியசாலையின் இக்கட்டான நிலையை உணர்ந்து தங்களின் மேலான ஒத்துழைப்பை வழங்குங்கள்" தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் யோ.திவாகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாளாந்த விடுதி அனுமதிகள் இருநூறைத் தொட்டுள்ளதுடன் வெளிநோயாளர் பகுதியும் எந்த நேரமும் நிரம்பி வழிகின்றது. ஏற்கனவே மிகக் கடுமையான ஆளணி மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறைகளால் திணறி வந்த வைத்தியசாலைக்கு இது கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவ மற்றும் குழந்தைகள் விடுதிகள் எந்நேரமும் 30 முதல் 50 வரையான நோயாளர்களைக் கொண்டுள்ளன. விடுதிகளின் பருமன் மற்றும் கட்டில் வசதிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதால் அரைவாசி நோயாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் பாய்களில் படுத்து உறங்குகின்றனர்.

வைத்தியசாலைக்குத் தேவையான போதுமான ஆளணியோ மிகவும் ஆபத்தான நோயாளர்களைக் கண்காணிப்பதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களோ மற்றும் அத்தியாவசிய ஆய்வுகூட வசதிகளோ மிகக் குறைந்தளவிலேயே வழங்கப்பட்டுள்ளபோதும் வைத்தியசாலை தனக்கேயுரித்தான பாணியில் மிகச் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சுமையைப் படிப்படியாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையும் தாங்கி வருகின்றபோதிலும் அதற்குத் தேவையான ஆளணி மற்றும் பௌதிக வளப் பங்கீடுகள் குறைந்தளவேனும் ஏற்படுத்தப்படாமை தொடர்பில் நோயாளர்கள் கடுமையான விசனத்தை வெளிப்படுத்தி வருகின்றார்கள். அத்தோடு அவர்கள் அது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தோடும் வைத்தியசாலை ஊழியர்களுடனும் முரண்படுவது சாதாரண நிகழ்வாயுள்ளது. இது நெருக்கடிகளின் மத்தியிலும் அர்ப்பணிப்போடு சேவையாற்றும் ஊழியர்களிடையே மேலதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையைப் பொறுத்த வரை மேலதிக ஆளணி மற்றும் பௌதிக வளங்களை ஏற்படுத்தும் அதிகாரமோ மற்றும் வாய்ப்புக்களோ அதன் நிர்வாகத்திற்குக் கிடையாது. எம்மால் கோரிக்கைகளை மேலதிகாரிகளுக்கு அனுப்ப மாத்திரமே முடியும். நோயாளர்களின் நலன்கருதி எம்மிடமுள்ள வளங்களை உச்ச அளவில் பயன்படுத்திச் சிறப்பான சேவையை வழங்க முடியும். நோயாளர்களும் பொது மக்களும் வைத்தியசாலையின் இக்கட்டான நிலையை உணர்ந்து தங்களின் மேலான ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகிறோம் என்றுள்ளது. (த-5)

# இலங்கைக் கடற்படையின் 'மரைன்' பற்றாலியனுடன் அமெ. கடற்படை பயிற்சி

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'மரைன்' பற்றாலியனுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்கே அமெரிக்க கடற்படையின் 'மரைன்' படைப்பிரிவினருடன், 'யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக்' என்ற தரையிறக்கக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்குச் சென்றுள்ளது என்று அமெரிக்க கடற்படை அறிவித்துள்ளது.

அமெரிக்க கடற்படையின் 'யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக்' என்ற தரையிறக்கக்கப்பல்நான்கு நாட்கள் பயணமாக நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தந்தது. அதில் வந்த 11 'மரைன்' விரைவுப் படைப்பிரிவைச் சேர்ந்த 375 'மரைன்' படையினர் மற்றும் மாலுமிகள், இலங்கைக் கடற்படையின் 175 'மரைன்' படையினர் மற்றும் மாலுமிகளுடன் இணைந்து, கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

"மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்பு நடவடிக்கைகளின் போது, வெற்றிகரமான நகர்வு மற்றும் விநியோக நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்தே இந்தக் கூட்டுப் பயிற்சியில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இலங்கைக் கடற்படையுடன் 11 'மரைன்' விரைவுப் படைப்பிரிவு மேற்கொள்ளும் இராணுவத்தினருக்கு இடையேயான இரண்டாவது பயிற்சிப் பரிமாற்ற நடவடிக்கை இதுவாகும்" என்று அமெரிக்க கடற்படையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (வ)

# வடக்கு சுகாதார நிலைமைகள் குறித்து ஆராய வருகிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், மார்ச் 29

சுகாதார நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்கு மாகாணத்துக்கு எதிர்வரும் சனிக்கிழமை வருகை தருகிறார்.



"வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் நிதிப்பற்றாக்குறை, ஆளணிப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இவை தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சருடன் ஆராயப்படும்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் அழைப்பின்பேரிலேயே அவர் வடக்குக்கு வருகை தருகிறார். கொழும்பு சுகாதார அமைச்சர் எதிர்வரும் 2 மற்றும் 3ஆம் திகதிகளில் வடக்கில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்" என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

(வ-101)

# தற்போதுள்ள முறைமையிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

## மைத்திரி தெரிவிப்பு

"தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், வடமத்திய, சப்பிரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித் தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதலமைச்சர்கள் ஏழு பேரையும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துப் பேசினார். இதன் போதே அவர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

"எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் கூட்டு அரசின் அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்படும். இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் தேர்தல்களில் வெற்றியீட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். இங்குள்ள ஒரு தொகுதி முதலமைச்சர்களும் அமைச்சர்களும் எனக்கு நேரடியாக ஆதரவளிக்கின்றனர். இருப்பினும் ஒரு சில முதலமைச்சர்களும், அமைச்சர்களும் ஆதரவளிக்கவில்லை. மேலும் ஒரு தரப்பினர் இந்தப் பக்கமும் இல்லாமல் அந்தப் பக்கமும் இல்லாமல் நடுவில் இருக்கின்றார்கள்" என்று அரச தலைவர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார். (வ-5)

# சுவிஸ் தூதுவருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் வழி முறைகள் உள்ளிட்ட தற்போதைய நிலமைகள் தொடர்பில் சுவிஸ் தூதுவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொழும்புக்கான சுவிஸ் தூதுவருக்கும் இடையே யாழ். நகரிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றிரவு சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் , சி.சிறிதரன் , இ.சாள்ஸ் நிர்மலநாதன் , சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ-101)

## உள்ளக...

மையான ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது"

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கையில்லை. பன்னாட்டு விசாரணையே வேண்டும் என்று தமிழ் மக்கள் கோருகின்றனர். எப்படி அரசின் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவார்கள்' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு.

"வடக்கிலுள்ள அடிப்படைவாதிகளே பன்னாட்டு விசாரணை தேவை என்று கோருகின்றனர். மிதவாதிகள் அவ்வாறு கேட்கவில்லை.

இலங்கையின் நீதி விசாரணைப் பொறிமுறையில் வடக்கு மக்களை உள்வாங்கிக் கொள்ள முடியும். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் அந்த மக்களை அரசின் நடவடிக்கைகளில் பங்கேற்கச் செய்ய முடியும்.

இலங்கை இறைமையுள்ள நாடு என்ற அடிப்படையில் தீர்மானம் எடுக்க முடியும். பரிந்துரைகளை யாரும் முன்வைக்கலாம். எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை இலங்கையே தீர்மானிக்கும். இதனை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் இலங்கை அரசு தெளிவாக வலியுறுத்தியுள்ளது " என்று அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

(வ-5)

## காணாமற்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவினர்களின் சங்கத் தலைவிகளுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையே, கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் வடக்கின் மன்னார் மாவட்டத்தின் பிரதிநிதி கலந்து கொள்ளவில்லை. திருகோணமலை மாவட்ட பிரதிநிதி கலந்து கொண்டார்.

சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், "காணாமற்போனோரின் உறவினர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகச் சந்திப்பு நடைபெற்றது. கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்திருந்தும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர். ஆணைக்குழு முன்பாக அளிக்கப்பட்ட சாட்சியங்களுக்கு அமைவாக என்ன நடந்தது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். தமது பிள்ளைகள் காணாமற்போனதாகச் சொல்லப்பட்ட திகதியின் பின்னரும் கண்டமைக்கான சாட்சியங்கள் உள்ளன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனோரின் உறவினர்களில் பலர், தமது பிள்ளைகளை ஜோசப் முகாம் மற்றும் இரகசிய தடுப்பு முகாம்களில் வைத்திருப்பதாகத் தெரிவித்தனர். தாம் இவ்வாறு கூறுவதால் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்து விடுமோ என்றும் அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தமைக்கு அமைவாக சில விடயங்களை நாம் கேட்கவுள்ளோம். ஜோசப் தடுப்பு முகாமில் காணாமற்போனவர்கள் உள்ளனரா ? முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தவர்களுக்கு நிவாரணம் என்ன? இது போன்ற விடயங்களை அரச தலைவருடன் அல்லது தலைமை அமைச்சருடன் பேச உள்ளோம்" என்றார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள வந்த காணாமற்போனோரின் உறவினர்களின் உடைமைகள் முதலமைச்சர் அலுவலகத்தில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகளால் சோதிக்கப்பட்ட பின்னரே அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

(வ-5,101)

## இறுதிப்...

குற்றங்களா? இல்லையா? என்பது தொடர்பில் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றமே தீர்மானிக்கமுடியும். குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். ரஷ்யாவில் அரச தலைவர் மைத்திரிக்கு அதியுன்னத வரவேற்பளிக்கப்பட்டிருந்தது. மறுபுறத்தில் ஜெனிவாவில் 47 நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து புதிய தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தன. இலங்கையின் நல்லிணக்க வேலைத்திட்டத்தை மனித உரிமைகள் சபையின் 47 நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இது போன்றதொரு ஆதரவு இதற்கு முன்னர் ஜெனிவாவில் இலங்கைக்கு கிடைக்கவில்லை. சுமார் ஒரு பத்தாண்டு காலமாக பன்னாட்டு ஆதரவு இருளடைந்து காணப்பட்டது. மீண்டும் 2015ஆம் ஆண்டு பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவை நாம் பெற்றுக்கொண்டோம். வரலாற்றில் எதிர் எதிர் திசையில் பயணித்த ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒன்றிணைந்தன்.

எமது நாட்டில் 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்புக்கே பன்னாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. பல நாடுகள் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கு அழைப்பு விடுக்கின்றன.

நட்புடன் பயணிக்கும் போதே பன்னாட்டுச் சமூகம் எமக்கு ஆதரவுத் தெரிவிக்கும். அமெரிக்க, பிரிட்டன் மாத்திரமல்ல அனைத்து நாட்டுத் தலைவர்களும் எமது அருகில் உள்ளனர். அதுதான் ஜெனிவாவில் நடந்தது. சிலர் மேற்குலக நாடுகள் மாத்திரமே எம்முடன் உள்ளதாகக் கூறுகின்றனர். அமெரிக்காவின் புதிய அரச தலைவர், ஜெனிவாவில் இலங்கையுடன் பேசுவதற்கு கோட் புட் வோல் என்று ஒருவரை அனுப்பியிருந்தார் என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கைக்கு மேலும் இரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் எப்போது விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

"போர்க்குற்றங்கள் என்று எவ்வாறு கூறுகின்றீர்கள். ஜெனிவாத் தீர்மானத்தை போர்க்குற்றம் பற்றிய வேலைத்திட்டம் என்று சிந்திக்க வேண்டாம். இலங்கை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பட்டிருந்தாலும் உலகில் எமது இராணுவம் மிகவும் ஒழுக்கம் கூடிய இராணுவம். இறுதிப் போரில் இடம்பெற்றவை போர்க்குற்றமா, இல்லையா என்பதை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றமே தீர்மானிக்க முடியும். எவரேனும் குற்றமிழைத்திருப்பின் விசாரித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (வ-5)

## விடுதலை...

விடுதலை செய்யப்பட்ட 3 கடற்படைப் புலனாய்வாளர்களையும் தேடிக் கண்டறியுமாறு குற்றப்புலனாய்வுப்பிரிவினருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பாக, கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, திருமதி சசிகலா ரவிராஜ் தாக்கல் செய்த சீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எச்.சி.ஏ.மடவல, எல்.ரி.பி. டெகின்டெனியா அடங்கிய குழாம் நேற்று மேற்கண்டவாறு உத்தரவிட்டது.

ரவிராஜ் படுகொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவர் உயிரிழந்துவிட்டார். இரண்டு பேர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அவர்கள் வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றில் இடம்பெற்ற ரவிராஜ் படுகொலை வழக்கு விசாரணையில் ஏனைய கடற்படைப் புலனாய்வாளர்கள் மூவரும் முன்னிலையாகினர். அவர்கள் 3 பேரும் குற்றமிழைக்கவில்லை என்று கொழும்பு மேல் நீதிமன்றில் இடம்பெற்ற அறம்கூறல் அவை தீர்ப்பு வழங்கியது.

இந்தநிலையில் கொழும்பு மேல் நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் முன்வைத்த சீராய்வு மனு மீதான விசாரணை கொழும்பு மேன்முறையீட்டு நேற்று இடம்பெற்றது.

குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட கடற்படைப் புலனாய்வாளர்கள் மூவரும் வழங்கிய முகவரிக்குரிய இடங்களில் இருந்து வெளியேறிவிட்டதால், வழக்கு தொடர்பான அறிவிப்புக் கடிதத்தை அவர்களிடம் சேர்க்க முடியாமல்போயுள்ளது" என்று சசிகலா ரவிராஜின் தரப்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

அவர்களைத் தேடிக் கண்டறிந்து நீதிமன்றில் முற்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்ட மேன்முறையீட்டுநீதிமன்றம் வழக்கை எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

(வ5)

## பன்னிரண்டாவது ஆண்டு நினைவு

மலர்வு
23.01.1926

உதிர்வு
25.03.2005





மலர்வு
01.11.1939

உதிர்வு
19.09.2004

**அமரர் க.வேலாயுதபிள்ளை**
(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)

**அமரர் வே. கனகம்மா**

வார்த்தைகள் இல்லாத வடிவங்கள்!
சுயநலம் இல்லாத இதயங்கள்!
அளவுகோல் இல்லாத அன்பு வடிவங்கள்!
வெறுப்பே காட்டாத முகங்கள்!

இல.60, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

திருமதி மல்லிகாமலர் - புவனேஸ்வரன்
(மகள் - லண்டன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.02.2017
சிவபதமடைந்த

**அமரர்**

**வேலுப்பிள்ளை செல்வரத்தினம்**

**தோற்றம்**
**06.09.1928**

**மறைவு**
**28.02.2017**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(30.03.2017) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கல்லூரி வீதி தாமரைக் குளத்தடியிலுள்ள மடத்தில் இடம்பெறும் என்பதனையும் அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் மதியம் 12 மணியளவில் இடம் பெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
அத்துடன் அவரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓடக்கரை,**
**பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்.**
**077 529 6241/ 077 108 1232**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி கந்தசாமி



**பிறப்பு**
**09.02.1933**

**இறப்பு**
**26.03.2017**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கந்தசாமி 26.03.2017 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு ம்னைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், துரை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தர்மரட்ணம், மோகனதாஸ் மற்றும் மன்மதராசா, விஜயகுமாரி, ஜெயக்குமாரி, சூரியகுமாரி, ராஜினி, ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, நாகலோசினி, நாகேஸ்வரி, ஜெயக்குமரன் காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் அன்னலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சதீஸ், பிரதீஸ், வாகீஸ், திலீபா, சோபியா, கயீதா, மதிவேணி, கமலதீபன், கஜேந்திரன், நகுலா, சுதர்சினி, சுதர்சன், சுமிதா, ரவிக்குமார், சந்தியா, றம்மியா, மதுரிக்கா ஆகியோரின் பேர்த்தியும் அஷ்மியா, அகீபன், சதுர்ஷா, அஷாயினி, இவன்யா, ஜனேஸ், மோறீஸ் ஶ்ரீசரன், கார்த்திகேயன், தாட்சாயினி, டனுஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(30.03.2017) வியாழக்கிழமை அன்னா ரின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பால்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தலங்காவற் பிள்ளையார் கோயில் வீதி,**
**திருநெல்வேலி மேற்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 697 2293/ 075 675 2440**

# மரண அறிவித்தல்

## பிறவுண் கிறிஸ்ரியன் அன்ரன் பரிதிமாறன்
## (Staff - All Ceylon Distributors)



**பிறப்பு**
**08.12.1970**

**இறப்பு**
**23.03.2017**

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல.03 மூளாய்லேன், குருசோ வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பிறவுண் கிறிஸ்ரியன் அன்ரன் பரிதிமாறன் 23.03.2017 வியாழக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிறவுண் கிறிஸ்ரியன் மற்றும் சூரியகுமாரி தம்பதியரின் அன்பு மகனும் ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், மரீனா மாலினியின் பாசமிகு கணவரும், ஸ்ராவினின் அன்புத் தந்தையும் தனக்குமார் (லாவண்யா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), தர்சன்(பெல்ஜியம்), மனோசுதன்(Soft Logic Life பிராந்திய முகாமையாளர்), ஜனகன்(Finland), திலகன்(சூரியா ஹொட்டல்), லாவண்யா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார்(Germany), சந்திரகுமார் (London), வசந்தகுமார் (அஞ்சலகம் - வசாவிளான்), சதீஸ்குமார்(கனடா), அனுஷா, மாலினி (பெல்ஜியம்), சுஜிவினி(அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுமதி, நிக்சன்(கனடா), புனிதம்(ஜேர்மனி), சுசி(லண்டன்), அனோஜா(கியூடெக் - யாழ்ப்பா ணம்), சியாமிளா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் அபிசா, அகிரா, எனுசா, எனுஸ் ஆகியோரின் பெரியப்பாவும் அஞ்சலோ, வெரோனா, வில்ரன், ஏய்மி, ஏய்ரன், றொஷேல், றொஷான், றொஷ்னி ஆகியோரின் மாமனாரும் இம்மனுவேல்பிள்ளை சோதிமலர் (All Ceylon Distributors ), அன்ரன் இம்மனுவேல், இந்திரா(கொழும்பு) ஆகியோரின் நேசமிகு பெறாமகனும், காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் கிறேஸ்வயிலா(லண்டன்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (29.03.2017) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் குருசோ வீதி, இல.03 மூளாய் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.மாரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருப்பலியின் பின்னர் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கெள்ளவும்

தகவல்
**குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| மரீனா மாலினி (மனைவி) | - | 0094212220225 |
| சூரியகுமாரி | - | 0094212222841 |
| மனோ (சகோதரன்) | - | 0094773396441 |
| வசந்தன் (மைத்துனன்) | - | 0094779905347 |

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
கௌரி செந்தூரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்
**தனபாலசிங்கம்**

அவர்களின் மறைவுகுறித்து
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆசிரியர் கழகம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**எஸ்.ஜே. செல்லத்துரை**
(முன்னாள் கிராம சேவை அலுவலர் - அதி விசேட தரம் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

எங்களில் ஒருவனாய் அன்போடு
வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பாய்
என்றிருக்க
கண்ணீரைத் தந்து விட்டு விண்ணோடு நீ
போனாய்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி
ஓடுதையா
உன் ஆத்மா சாந்தியடைய உள்ளத்தால்
வேண்டுகின்றோம்

தோற்றம்
06.02.1951

மறைவு
29.03.2007

**குடும்பத்தினர்.**
45, நக்கா ஒழுங்கை,
சுன்னாகுளி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**திருமதி விசாலாட்சி இராஜதுரை**



தோற்றம்
16.03.1935

மறைவு
27.02.2017

அன்பால் எமை அரவணைத்து - இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட தங்கள்
நினைவுகள் என்றும் எமைவிட்டு மறையாதுமாமி
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (29.03.2017) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

88, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## 24 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கந்தையா தம்பிப்பிள்ளை (J.P)**
(முன்னாள் உரிமையாளர் லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடி, கைதடி நாவற்குழி கிராம சபைத்தலைவர்)

தோற்றம்
09.09.1919

மறைவு
12.04.1993

திதி : வளர்பக்க துதியை
29.03.2017 புதன்கிழமை

இருபத்திநான்கு ஆண்டுகள் நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை அர்ப்பணித்த பாசத்தின் தீபமே
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்துவாழும்

உங்கள் பிரிவால் துயருறும்
மகன் -த.புஸ்பராசா ராஜிகா - ஸ்ரோர்ஸ்,
மகள் மார், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

"இராஜேஸ்வரிபவனம்"
கைதடி தெற்கு, கைதடி.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி. கவிதா தினேஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
**வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்**
**நல்லூர் பிரதேசசபை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
**சி.சஞ்சீவ்**
பஞ்சாப் நஷனல் வங்கி (U.K)
அவர்களின் தந்தையார்
**Lion வேலுப்பிள்ளை சிவசம்பு**
அவர்கள் இயற்கை யெய்திய செய்தி
கேட்டு துயருறுவதுடன் அவரது
பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் இந்துக்கல்லூரி**
**A/L 1992 அணியினர்.**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 . 02 . 1947

மறைவு
07 . 04 . 2008

**அமரர் சுப்பையா கணேசு**

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் இன்னும்
ஓயவில்லை உங்கள் நினைவலைகள்
பாசக்கயிற்றையே பிடித்து தந்தீர்கள்
பயணம் யாவும் வழி தவறாது பயணிக்க....

டச்சுவீதி,
மானிப்பாய்.

என்றும் எங்கள் அப்பாவின் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற இலிகிதர் - CTB)



மாவிட்டபுரம், மதவடியைப் பிறப்பிடமாகவும் வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (26.03.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேசசபை), சிவரூபன் (பொறியியலாளர்-அவுஸ்ரேலியா), கௌரி (ஆசிரியை-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), பாலரூபன் (பொறியியலாளர்-அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சாவித்திரி மற்றும் ராணி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் சிவலிங்கம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், தினேஸ் (கள உத்தியோகத்தர்-SOND நிறுவனம்), அனுசா (பொறியியலாளர்-அவுஸ்ரே லியா), செந்தூரன் (மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்-மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தன்யஸ்ரீ, துளசிகன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2017) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுணாவத்தை,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 205 9850**


## ஓய்வூதியர் நிதியத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

தென்மராட்சி, மார்ச் 29

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிப் பிரிவின் பொதுக் கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கிளைத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் திருமதி வ.மனோகரனும் சிறப்பு விருந்தினராக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட தலைவர் கமலநாதனும் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக செ. சுப்பிரமணியமும் உப தலைவராக ப.செல்லத்துரையும் செயலாளராக இ. கிருஷ்ணபிள்ளையும் உதவிச் செயலாளராக சி.பாலசுப்பிரமணியமும் பொருளாளராக கு.விஜயநாதனும் நிர்வாக உறுப்பினர்களாக க.பாலசிங்கம், திருமதி சா.கந்தசுவாமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## வீமன்காமம் விநாயகருக்கு குடமுழுக்கு

வலி. வடக்கில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பகுதியில் சீரமைக்கப்பட்ட காங்கேசன் துறை பளை வீமன்காமம் கூத்தியாவத்தை மருதடிப் பிள்ளையார் ஆலய குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குடமுழுக்குக் கிரியைகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் மறுநாள் சனிக்கிழமை மு.ப.9 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம், கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி மற்றும் வெல்டிங் பயிற்சி நெறி ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் பொது ஆங்கில பாடம் உட்பட சாதரண சித்தியடைந்தவர்கள் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கும், தரம் 10 வரை கல்வி கற்றவர்கள் வெல்டிங் பயிற்சி நெறிக்கும் விண்ணப்பிக்கலாம்.

கற்கைகளுக்கான விண்ணப்பிக்க விரும்புவோர் கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் அலுவலருடன் தொடர்பு கொண்டு இணைந்து கொள்ள முடியும் " என்று கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் கெ.சங்கர்குமார் தெரிவித்தார். (வ)

## மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அச்சுவேலி லங்கா மடத் தலைவி அருட்சகோதரி மரிய எலிசபெத் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-422)

## வேதவிநாயகருக்கு இன்று கொடியேற்றம்

தாவடி சிறி அம்பலவாண வேதவிநாயகர் கோயில் வருடாந்தத் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 29
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்றஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. பாடசாலைகள் ரீதியாக கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
9ஏ (தமிழ் மொழி மூலம்)
அ.அபிநந்தன், பா.அஞ்சுதன், பா.வெஸ்லி பத்மநிறோசன், ஜெ.கிருஷிகன், க.லிதுர்சன், ம.அஜய், மு.நிதுஜன், நா.தேனுஜன், ந.பானுஜென், ப.நிருத்திகன், ப.ரஜீவ், பி.சனுஜன், ர.ஆதிரையன்,ரா.விதுர்சன், இ.பவிராம், இ.அபிசாதன், ர.கிருசாந்தன், ச.பிரவீனன், சி.தர்சிகன், சி.விஸ்னுஜன், சி.சஜீவன், தா.நிதுசிகன், உ.விதுஷன், வ.பவிதரன்.

(ஆங்கில மொழி மூலம்)
ஆ.ஜனுசன், அ.கரிஷாந், இ.இளங்கீதன், ஜெ.சஜீபன், க.ஜனார்த்தன், ப.கோபிநாத், ர.கனிஷ்கர், ர.ஜதுசன், ச.பிருந்தாபன், ஸ்ரீ.நதீஸ்கர், சி.பவித்திரன், சி.தர்மதாசன்.

**8ஏ**
அ.சுயானஸ்ரீசயன், கோ.துவாரகன், க.சஜீவரன், இ.அரண், ஜெ.தர்ஷாந், ஜெ.வேணுஜன், க.பிரபன், க.சுஜன், கி.வனசியன்,கி.மதுராங்கன், கு.குணடிலக்சன், ம.கீர்த்தனன், நா.தமிழின்பன், ந.பிரியங்கன், நி.ஆதவன், ப.நக்கீனன், பி.யாதவன், பி.நிசாங்கன், பி.கஜீயந்தன், ர.பானுஜன், செ. ரவீந்திரன், சி.நிஜன், சி.அபிசாதன், சி.பிரணவன், சி.குகேசன், சு.காருண்யன், த.ஹபிசாந்,த.மதுமிலன், தெ.அபிஷாந், வி.அபிநயன், வி.டினோஜன், வி.மால்மருகன், வ.சேதுபவன்.

**7ஏ**
சி.கஜவதனன், பு.பிரவீன், சி.ரகுராஜ், ந.துஷியந்தன், ம.சுவேதன், கி.கோபிசன், ம.ஜெயராம், மோ.பிரசாந், யோ.சாத்வீகன், சி.சிவகஜன், து.அச்சுதன், ஸ்ரீ.அருள்ராஜ், ந.சுமுகன், கு.கார்த்திகன், ச.கவிவர்ணன், கோ.மலரவன், த.நிசன், ந.நிதர்சன், ப.பானுஜன், க.ஸ்ரீநிகேதன்,சு.திருக்குமரன், ஞா.தூரியன், க.விதுசன், இ.சிந்துஜன், ஸ்ரீ.சுபாஸ், வ.வத்சலயன், ர.விஷ்சன், அ.அபிராம், அ.கஜானன், வ.கம்சானந், பா.நரேன், கோ.ஸ்ரீபதி அதிகாரம், கே.சுதானந்.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**
பி.சஞ்சிகாயினி - 9ஏ, ஜே.டிலக்சன் - 7ஏ2பி, எஸ். திகழ்நிலவன் 3ஏ4பிசிஎஸ், ஆர்.சஞ்சயன் - 7ஏபிஎஸ், சி.பகிர்சன் - 4ஏ3பிசிஎஸ்.

**இடைக்காடு ம.வி.**
கோ.சுயானி(ஆங்கில மொழி மூலம் )8ஏபி, சி.நிவேதிகா 8ஏபி, கி.நிவேதிதா 7ஏபிசி, ம.மகேந்தினி 7ஏபிஎஸ், ச.விதுசன் 4ஏபி2சி2எஸ், ஜெ.ஜெநிவேதிகன் 3ஏ2பி 3 எஸ், பா.பரணிகா 4ஏ2பி சி, எஸ் .ரம்சா 5ஏ2பிசி எஸ். கரன் 4ஏபி2சி2எஸ்.

**வேலணை மத்திய கல்லூரி**
இ.இதர்சினி8எ, யோ.ஜெறின் 7எ1பி, த.சந்தியா 4எ3பி சி, ஜெ.ஜெயறொஷானி 4எ 2பி 2சி, க.கஜாந் 3எபி3சிஎஸ், க.பிரியந்தன் 3எபிசி 3எஸ், சி.நர்மதா 3எ3பி 2சி, ந.தனுசன் 3எகி4சி, ரி.சானுகன் 3எ 3பி2சி, ப.கனிமொழி 3எ3பி2 சிஎஸ்.

**கோண்டாவில் இந்துக் கல்லூரி**
ச.சிவசக்தி7எபி.

**நெல்லியடிமத்தியகல்லூரி**
தமிழ் மொழி மூலம்
பி.கேதாரணி 9 ஏ, அ.தனஞ்சயன் 9 ஏ, ஜெ.நிலாந்தி 9ஏ, ச.தர்சிகன் 8ஏபி, உ.உஷாயினி 7ஏ2பி, நா.அனற் அஜித்ரா 7ஏபிசி, கி.ஆதனா 7ஏபிசி, சி.அபிநயா 5ஏ4பி, நா.அஜிதன் 5ஏ3பிசி, மோ.பவித்ரா 5ஏ3பிஎஸ், வி.ரேகா 5ஏ3பிஎஸ், சு.சங்கீர்த்தனன் 5ஏபி2சிஎஸ், ஜெ.லக்ஸ்மன் 4ஏ4பிசி, பா.பிரதாப் 4ஏ3பி2சி, கி.ராகுலன் 4ஏ3பிசிஎஸ், சி.சபேசன் 4ஏபி4சி, த.தர்ஷா 4ஏபி4சி, தே.சுபாங்கி 4ஏபி. 2சி2எஸ், ரா.பிரணவன் 4ஏபிசி 3எஸ்.

(ஆங்கில மொழி மூலம்)
செ.சசீபன் 8ஏபி, லி.சிவகாந் 8ஏசி, செ.கஜந்திகா 7ஏ2சி, வ.தேனுகா 6ஏ2பிசி, சி.அனிருத்தன் 6ஏ2பிசி, சு.தீவ்சிகா 6ஏ2பிசி, ப.கிஷாணி 5ஏ3பிசி, ப.வைஸ்ணவி 4ஏ3பிசிஎஸ்.

**வேம்படிமகளிர்உயர்தரப்பாடசாலை**
(தமிழ் மொழி மூலம்)
**9ஏ**
த.டிலக்சனா, இ.லதாங்கி, ஜெ.ஜெனுசியா,சு. பூர்வஜா, சி.லக்சிகா,ச. சதுர்சிகா, ர.லக்சிகா, சோ.ஸ்ரீவர்சினி, ர.மாதங்கி, பா.சுகிரா, க.நிதுர்சிகா,மா. சுபதா, இ.சங்கவி, ஜெ.சுவேதிகா, வி.தர்சனா, கு.ஆரணி, ஸ்ரீ.துஷாரா, க. லிந்துஜா, ம.டினோஜா, த.நிதர்சனா, பா.காருண்யா, க.சங்கவி, ச.கார்த்திகா, ச. சாருமதி, ம.மயூரிகா, அ.சோபிகா, த.பைரவி, சி. பவித்திரா, ஜெ.சபீனா, லோ.பிரவீணா, சு.கரிணி, ர.பிரியங்கா, ஜெ.கார்த்திகா , கோ.சாகிர்த்தியா.

(ஆங்கிலமொழி மூலம்)
**9ஏ**
சி.அபர்ணா, இ.ஜரணியா,தே.அபிராமி, ம.ஜெசூரிகா,கே.அபிராமி , க.நாராயணி,ச.அட்சயா,ம.நிவேதா,கே.பவித்திரா,சு.சிரோமி,சு.பிலகரி, ந.சினோகா,அ.டிவோன் வேர்ஜினியா, வா. தபோதினி, சி.காயத்திரி,பா.தாரணி,ச.கோபிகா , ர.வித்தியராகவி.

(தமிழ் மொழி மூலம்)
**8ஏபி**
அ.மேரிபிரிசில்டா, தே.நிவேதிகா, ச.மதுசிகா, சி.தேனுகா , ஸ்ரீ.அஜந்தனா, ஸ்ரீ.திபிஸ்னா ,ம.டிறோஜா, இ.ஞானமாதுரி ,ஞா.ஞானியா, சு.கயல்விழி,ம.கம்சிகா, ம.மதுஷா, அ.ஐஸ்வினி , சி.சரணியா, ச.குகாயினி, லோ.தர்சிகா ,உ.சதுர்ஜினி, எ.துவாரகா,செ.தேனுஜா,கு.அபர்ணா, ச.வைஷாலினி ,கு. கௌசிகா,ச.அபிராமி, ச.நீபஜா, அ.டனிசியா , இ.சங்கவி ,தே.கம்சா ,ஆ.சினேகா, இ.கிருஷாணி.

(ஆங்கிலமொழி மூலம்)
8ஏபி
சி.அம்சவி, பா.பிரார்த்தனா, உ.அப்சரா.கி.சஜித்திரா,அ.ஆதித்தியா,ஜெ. சாகித்தியா, த.கௌசிகா, வி.சாத்விகா,ஜெ.ஜெகதீபிகா, பு.தேவாயினி.

(தமிழ் மொழி மூலம்)
**8ஏசி**
ஜோ.கீர்த்திகா, த. தர்சிகா,ஸ்ரீ. மாதுளா, மோ.திவ்யா, தே.துஷாரா, ஜெ.பிரணவி, வி.சுதர்சனா, சி.அரண்யா, சி. அபிநயா, செ. நளாயினி, ஸ்ரீ.ஜெயவைஷாலி, இ.சங்கவி , கி.சுரேண்யா.

(ஆங்கிலமொழி மூலம்)
**8ஏசி**
ம.கௌசிகா, இ.குகவேணி ,ர.துஷானி.

(தமிழ் மொழி மூலம்)
சி.மதிவதனா **8 ஏஎஸ்.**

(தமிழ் மொழி மூலம்)
**7ஏ2பி**
பா.ஐஸ்வரியா, அ.துஷாரா, மு.கயார்த்தனி,சி.அஜிந்தா,ச.கவிதாஞ்சி, சி.பானுஷா ,சி.தர்மசாயினி, ம.ரசிக்கா, ஜெ.கஸ்தூரி , க.தினுஷா ,ச.ஆரபிகா , கு.சகஸ்ரா,தி.சுகிர்தா.

(ஆங்கிலமொழி மூலம்)
**7ஏ2பி**
ந.கிருத்திகா ,சு.கிசானி ,மூ.துளசிகா.

(தமிழ் மொழி மூலம்)
**7ஏபிசி**
உ.டிலுக்சிகா ,பா.சுருதி ,சி.சிவவாசினி, வி.ஜெருபி,பி.சுபிகா,ஜீ.ஜம்சிகா,த.ஆயிழை, கு.கஜனி ,கி.அபிராமி, இ.லக்சிகா.

(ஆங்கிலமொழி மூலம்)
**7ஏபிசி** கு. கலைவாணி.

(தமிழ் மொழி மூலம்)
**7ஏ2எஸ்**
ப.ஜனகா ,பா.அஸ்வினா.

**(தமிழ் மொழி மூலம்)**
**7ஏபிசி**
த.சாருஜா , சி.நிதுஜா , சி.விதுர்சனா. (422,108)

**வர்த்தக நிலையத்திற்கு வேலையாள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் மொத்த சில்லறை பல்பொருள் வாணிப நிலையத்திற்கு ஆண் வேலையாள் தேவை.
**தொடர்பு: 077 728 3811**

**தவறிவிட்டது**
சின்னத்துரை சுந்தரலிங்கம் ஆகிய எனது சைக்கிளுடன் கறுப்பு நிற பாக், குறிப்புகள், பஞ்சாங்க புத்தகங்கள் . போட்டோ அடங்கிய பாக் கொக்குவில் சந்தியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு: 077 990 6328**

**வேலையாள்கள் தேவை**
சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள புடைவையகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. நேரில் வரவும். (சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
**தர்ஷனா ரெக்ஸ்ரையில்**
நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.

**வெளிவந்துள்ளது!**
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு புதியதோர் வரவு
**விவேக கணித வழிகாட்டி**
பகுதி I, பகுதி IIல் மொத்தமாக 130 புள்ளிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள 2624 கணித வினாக்கள் விடைகளோடு அடங்கிய பரீட்சை வழிகாட்டி
தொடர்பு :
S. உசேந்திரன் (B.com, National Dip in Teach.)
Mrs. வசந்தி உசேந்திரன் (National Dip in Teach.)

600/=
கிடைக்கும் இடம் : **அன்னை புத்தகசாலை**
இல.7, நவீன சந்தை வெளிப்புறம்,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2229881

**பணியாளர் தேவை**
கட்டட வேலைத்தளம் ஒன்றுக்கு இரவு பகல் காவலாளி தேவை.
Medical Clinic இற்கு
1. வரவேற்பாளர் (பெண்)
2. கணக்காளர் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
நேர்முகத்தேர்வு: 01.04.2017 (சனிக்கிழமை)
காலை 8.30மணி - 10.30 மணிவரை
இடம்: சன்றைஸ் மெடிகிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக)
**021 222 6069**

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)


மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## மரண அறிவித்தல்கள்



### சின்னப்பு நவரத்தினம்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் அப்பிளானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு நவரத்தினம் 28.03.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அம்மாக்குட்டியின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை சிவகாமிப்பிள்ளையின் அன்பு மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் இந்திரவேணி (கொலன்ட்), அன்பரசி (வைத்தியர், சித்த வைத்தியசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவேந்திரன்(கொலன்ட்), கேதீஸ்வரன் (வைத்தியர், மாவட்ட சித்த வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விபூஷனா, அக்ஷனா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மங்கயர்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, தெய்வேந்திரம், இந்திரா, இராஜலக்ஷ்மி நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2017) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அப்பிளானை,**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**
தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 223 0055**

### திருமதி அரியமலர் அரியரட்ணம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் அரியரட்ணம் (முன்னாள் அதிபர் சிவ ஞானோதயா வித்தியாசாலை . காரைநகர்) 27.03.2017 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கனகசபையின் புதல்வியும் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையாவின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா அரிய ரட்ணத்தின் அன்பு மனைவியும் Prof.திருமதி அரியராணி ஞானதாசன் (கொழும்பு பல்கலைக்கழகம்), திருமதி அரியவதனா கருணைரஞ்சன் (ஆசிரியை கொழும்பு பிஷப் கல்லூரி), திருமதி ஷிராணி ஜீவனேசன் (ஆசிரியை , கனடா) மற்றும் காலஞ்சென்ற அரியதீபன், அரியரட்ணம் ஆகியோரின் அன்பு தாயாரும் திரு. ஐ. ஞானதாசன், திரு. க. கருணைரஞ்சன் மற்றும் திரு.ரிச்சர்ட் ஜீவனேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr. திருமதி ருக்ஷிக்கா நவரத்தினம், திருமதி ரோஷிக்கா வாமனன், செல்வி ரூத் கருணைரஞ்சன் , திரு. யோசுவா ஜீவனேசன் (கனடா) மற்றும் செல்வி நியோமி ஜீவனேசன் (கனடா) ஆகி யோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஏ.எப் ரேமண்ட மலர்சாலையில் இன்று (29.03.2017) புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரைக்கும் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரைக்கும் வைக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு நடைபெறும். நல்லடக்க ஆராதனையின் பின்னர் நல்லடக்கத்துக்காக பொராளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**98/3, மன்னிங் பிளேஸ்,**
**கொழும்பு - 06**
தகவல்
க. கருணைரஞ்சன்

**011 236 4837**

## University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies & Commerce

### Master of Business Administration (MBA)
### Intake III – 2016/2017

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2016/2017 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.maco.jfn.ac.lk/***

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:
- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Structure | - | Semester based Course Unit System |
| Semester duration | - | Each semester extends for 20 weeks |
| Duration | - | Two years |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee would be LKRThree hundredand fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

* Application Fees: LKR 2000/=

**CLOSING DATE: 28.04.2017**

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at *http://www.maco.jfn.ac.lk/* or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna. Duly completed applicationsshould be forwarded to "Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "Application for MBA Programme" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through **021 221 6394**.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**




# காரை. அபிவிருத்திச் சபைக்கு புதிய நிர்வாகம் தெரிவு

காரைநகர், மார்ச் 29

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தில் நடைபெற்றது.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவரும் ஓய்வுநிலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காரைநகர் அபிவிருத்தி தொடர்பான கருத்துப் பகிர்வுகளும் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

சபையின் புதிய தலைவராக சிவா தி.மகேசன், உப தலைவராக ஓய்வுநிலை வடமாகாணக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், செயலாளராக பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஆ.யோகலிங்கம், உப செயலாளராக ஓய்வுநிலை நீதிமன்ற உத்தியோகத்தர் க.நாகராசா, பொருளாளராக ஓய்வுநிலை காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஓய்வு நிலை கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஆ.சிவசோதி, மருத்துவர் சு.நடராசா, காரைநகர் பிரதேச சபை முன்னாள் தலைவர் வே.ஆனைமுகன் மற்றும் ந.பாரதி, சி.குமாரசேகரம், க.கிருஸ்ணகுமார், க.பாலச்சந்திரன், தி.செந்தூரன், மு.பரம்தில்லைராசா, ந.பாலகிருஸ்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சபையின் காப்பாளர்களாக சுப்பிரமணியம் கதிர்காமநாதன், தியாகராசா பரமேஸ்வரன், விசுவலிங்கம் பரமானந்தம் ஆகியோர் சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளகக் கணக்காய்வாளர்களாக கனகசுந்தரம் உமைநேசன் ,சுந்தரலிங்கம் அகிலன் ஆகியோரும் தெரிவாகினர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)



Mrs. P. Balendra
Former teacher of
Chundikuli Girls' College
passed away in Canada
on 20.3.2017.
Our deepest sympathies to
the family members.
May her soul rest in peace.
*Teachers' Guild*
*Chundikuli Girls' College*

# உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"பௌதிகவியல் பாடத்துக்கான கருத்தரங்கு யாழ் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையிலும், இரசாயனவியல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30மணி வரை நடைபெறும்.

பொருளியல் பாடத்துக்கான கருத்தரங்கு யாழ். வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையிலும், வணிகக் கல்வி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறும்.

மூத்த சட்டத்தரணி தேவசேனாதிபதியின் நிதி அனுசரணையில் இச் செயலமர்வும் வினா - விடைத் தொகுப்பு வழிகாட்டலும் நடைபெறவுள்ளது. செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் பொறுப்பாசிரியர்களுடன் பாடசாலை சீருடையுடன்வருகை தரவேண்டும்" என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-422)


## Vacancy for an Economic Development Research Officer

Institute of Regional Development and Governance (IRDG) is a civil society organisation that is actively involved in the development of Northern and Eastern Provinces.

There is a need to analyse vast amount of data and information to understand, track and monitor budget proposals and other announcements of the Government of Sri Lanka and report to the key stakeholders of progress of development in these provinces.

We require an experienced Economic Development Research Officer to start work in their Kilinochchi and Jaffna Offices from February 2017, to work with very senior international Professionals who will provide guidance and support.

The applicant must have previous experience in similar work particularly in performing research on public expenditure, working knowledge in excel spreadsheet, and have ability to report the finding in English or Tamil.

An excellent opportunity to work with leading professionals in development and an attractive salary package.

**Application close on the 8th April 2017**
**Applications giving relevant details must be sent to operationsirdg@gmail.com**
**For more details on the Institute visit irdg.org.lk**

## வவு. வீரபுரம் கிராம மக்களின் காணிகளை வழங்க இணக்கம்

வவுனியா, மார்ச் 29

``வவுனியா, வீரபுரத்தில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 400 ஏக்கர் காணிகளையும் அவர்களுக்கே வழங்க அனைத்துத் தரப்பினரும் இணங்கியுள்ளனர்".

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் வீரபுரம் எல்லைக் கிராமம். ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில் 400 தமிழ்க் குடும்பங்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் வாழ்வாதாரத்துக்காகக் காணிகள் வழங்கப்பட்டன. அவற்றில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் 1990 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

தற்போது அந்தக் காணிகளை ஊர்காவல் படையினர் முகாம் அமைப்பதற்காகவும், பெரும்பான்மையினரின் குடியேற்றத்துக்காகவும் அபகரித்து வைத்துள்ளனர் என்று காணி உரிமையாளர்கள் என்னிடம் தெரிவித்தனர். அந்தப் பகுதி வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி என்று தெரிவிக்கப்பட்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா தெற்கு பிரதேச செயலருடன் கலந்துரையாடினேன். 400 தமிழ்க் குடும்பங்களுக்கும் காணி உரிமைப் பத்திரம் உண்டு என்பதைச் சுட்டிக் காட்டியதுடன், அந்தப் பகுதி செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்டபட்டது என்பதையும் கூறினேன். இது தொடர்பில் ஆராயப்படும் என்று அவர் தெரிவித்தார். செட்டிகுளம் பிரதேச செயலரின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் வரை அந்தப் பகுதிகளில் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று அவர் உத்தரவிட்டார்.

வவுனியா மாவட்டச் செயலர் தலைமையில் வவுனியா தெற்கு மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலர்கள், காணி உத்தியோகத்தர் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதில் நானும் கலந்து கொண்டேன்.

அந்த 400 ஏக்கர் நிலப்பகுதி வீரபுரம் கிராமத்துக்கு உட்பட்ட பகுதி என்பதையும், செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டது என்பதையும் காணி உத்தியோகத்தர் உறுதி செய்தார். அதை வவுனியா, தெற்குப் பிரதேச செயலரும் ஏற்றுக் கொண்டார்.

இந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் மாவட்டச் செயலரிடம் கோரினேன். காணி உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை அவர் கேட்டார். அந்தப் பகுதி 400 குடும்பங்களுக்கு உரியது என்றபோதும் உடனடியாக 182 பேருக்கான அனுமதிப் பத்திரங்கள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டன. அவை பரிசீலிக்கப்பட்டு உண்மை என்று கண்டறியப்பட்டது. 400 ஏக்கர் நிலத்தையும் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுப்பார் என்று மாவட்டச் செயலாளர் உத்தரவாதம் அளித்தார்.

தற்போது 350 ஏக்கரை உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊர்காவற் படையினர் 50 ஏக்கர் நிலத்தில் முகாமிட்டுள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்றி நிலத்தை மக்களிடம் வழங்க வேண்டும் என்று பொலிஸாருடன் தொடர்பு கொண்டு பணிப்புரை விடுத்துள்ளார்- என்றார். (ற-101)

# ஒருமாதம் கடந்தும் தீர்வு கிட்டவில்லை

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை: போராட்டத்தைக் கைவிடோம் எனவும் உறுதி



யாழ்ப்பாணம், மார்ச் 29

ஒரு மாதம் கடந்தும் எமது போராட்டம் தொடர்கின்றது. எமக்குத்தீர்வுபெற்றுத்தருவதற்கு எவரும் முயற்சிக்கவில்லை.

இவ்வாறு தெரிவித்தனர் காணாமல்ஆக்கப்பட்டதமது உறவுகளின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி தொடர் போராட்டத்தில்ஈடுபட்டுவரும்மக்கள். காணாமல்ஆக்கப்பட்டதமது உறவுகளின் நிலையை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருமலையிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமக்கு உறுதியான தீர்வு கிடைக்கும்வரைதமதுபோராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்று காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச்சந்தித்துக் கலந்துரையாடினர். எனினும் போராட்டங்கள் தொடர்ந்து நடந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று 37ஆவதுநாளாகப்போராட்டம்தொடர்ந்தது. வவுனியாவில் 33ஆவதுநாளாகத் தொடர்ந்தது. முல்லைத்தீவுமாவட்டசெயலகத்துக்குமுன்பாகநடத்தப்பட்டுவரும் போராட்டம் 21ஆவதுநாளாகத்தொடர்ந்தது. யாழ்ப்பாணம், மருதங்கேணியில் நடத்தப்படும்போராட்டமும்தொடர்ந்தது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் நடத்தப்படும் போராட்டமும் நேற்றுத்தொடர்ச்சியாகநடைபெற்றது.

தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்தும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள்தெரிவித்தனர். தமதுபோராட்டத்துக்குஅனைத்துமக்களும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-5,6,7,26)



தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலையால் மக்கள் இயற்கைப் பானங்களைத் தேடி அலைவதை அவதானிக்க முடிகின்றது. வவுனியாவில் மக்கள் வெப்பத்தைத் தணிப்பதற்கு இளநீர், வத்தகைப் பழத்தை அதிகம் நாடுகின்றனர். ஒரு இளநீர் 80 ரூபா முதல் 100 ரூபா வரையில்விற்கப்படுகின்றது. வத்தகைப்பழம் ஒரு கிலோ 80 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

## கைவிடப்பட்டது சிமெந்துப் பொதி வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

"வீட்டுப் பூச்சு வேலைகளுக்காக வழங்கப்பட்ட சிமெந்தை உரிய முறையில் பயன்படுத்தாததால் நாடளாவிய ரீதியாக இந்தத் திட்டம் இந்த ஆண்டு கைவிடப்பட்டுள்ளது. அமைச்சின் ஊடாக எமக்கு இதுதொடர்பானஅறிக்கைகிடைத்துள்ளது".

இவ்வாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்டப் பணிப்பாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் இலவசமாக நாடளாவிய ரீதியில் வீட்டுப் பூச்சு வேலைகளுக்காக ஒவ்வொரு வீட்டுக்கும் 10 சிமெந்துப் பொதிகள் வழங்கப்பட்டன. சிமெந்தைப் பெற்றுக்கொண்ட நபர்களில் சிலர் அதனை விற்றுள்ளனர், பயன்படுத்தாது விட்டுள்ளனர். அதனால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மூன்று பகுதிகளாக 3 ஆயிரத்து 18 குடும்பங்களுக்கு சிமெந்துப் பொதிகள் வழங்கப்பட்டன. அவற்றில் 2 ஆயிரத்து 768 குடும்பங்கள் மாத்திரமே வழங்கப்பட்ட சிமெந்தை உரிய முறையில் பயன்படுத்தி உள்ளனர். 250 குடும்பங்கள் உரிய முறையில் பயன்படுத்தத் தவறியுள்ளனர். யாழ் மாவட்டம் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலும் இந்த நிலைமையே காணப்படுகின்றது.

இந்தத் திட்டம் கடந்த ஆண்டுகளில் வெற்றியளிக்கவில்லை. அதைக் கைவிட்டு மக்களுக்குப் பயனுள்ள விதத்தில் வீட்டுச் சீரமைப்புவேலைக்குக்கான கட்டடப் பொருள்களை மானிய முறையில் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன -என்றார். (ற-4)

## பெரியதம்பனைக் கிராமத்துக்கு போக்குவரத்து வசதி இல்லை

### வீதிகளைத் திருத்தியமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை



வவுனியா, மார்ச் 29

``வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்ட பெரியதம்பனைக் கிராமத்துக்கான போக்குவரத்து சீரற்றுள்ளது. அன்றாடக் கடமைகளை மேற்கொள்வது பெரும் சிரமாக வுள்ளது".

இவ்வாறு அந்தக் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

"பெரியதம்பனைக்கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஓரிரு மாதங்களில் வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. காணி இல்லாதவர்களுக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டன. வீட்டுத் திட்டங்களும் வழங்கப்பட்டன.

அங்குள்ள ஏழு வீட்டுத் திட்டம் என்று அழைக்கப்படும் பகுதிக்கான இரு வீதிகள் தற்போது வரையில் திருத்தப்படவில்லை. வீதியின் நடுவே வெட்டப்பட்ட மரங்களின் அடிக்கட்டைகள் கூட அகற்றப்படாதுள்ளன. மழை காலங்களில் அந்தவீதிகளின் ஊடாகப் பயணம் செய்ய முடியாது. வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேசெயலர் பிரிவுக்குட்பட்ட இந்த வீதிகளைத் திருத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு வருகின்றன" என்று வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் முகுந்தன் தெரிவித்தார். (ற-21)

## வடக்கு அமைச்சர்கள் விசாரணை அறிக்கை விரைவில் முதல்வரிடம்

வவுனியா, மார்ச் 29

வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்து அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை விரைவில் வடக்கு முதலமைச்சரிடம் கையளிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

வடக்கு அமைச்சர் ஒருவர் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் சகல அமைச்சர்கள் தொடர்பாகவும் விசாரணை செய்யும் குழு முதலமைச்சரால் பரிந்துரைக்கப்பட்டு 4 அமைச்சர்கள் தொடர்பிலும் முறையிடக் கூடிய வகையில் குழு நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவில் ஓய்வு பெற்ற இரு நீதிபதிகளும், முன்னாள் அரச அதிபர் ஒருவரும் நியமிக்கப்பட்டனர். இந்தக் குழுவிடம் 4 அமைச்சர்கள் தொடர்பாகவும் முறையிடப்பட்டிருந்தது. அவை தொடர்பாக குழு நேரடி விசாரணைகளில் ஈடுபட்டது.

விசாரணைகள் நிறைவடைந்து அறிக்கையிடும் நடவடிக்கையும் தற்போது நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது. அந்த அறிக்கை அடுத்த மாதமளவில் முதலமைச்சரிடம் கையளிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-101)

# அரசமைப்பைத் திருத்தியே தேர்தலை நடத்த வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதற்கு முன்னர் அரசமைப்பைத் திருத்தி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும். அவ்வாறு செய்யாது ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது.

இவ்வாறு தெரிவித்தது மக்கள் விடுதலை முன்னணி.

அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல் உயர்பீட உறுப்பினருமான லால் காந்த தெரிவித்ததாவது

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்ததன் காரணமாகவே மக்கள் மைத்திரி பாலசிறிசேனவை ஜனாதிபதியாக்கினர். வாக்குறுதியை நிறைவேற்றாது மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் முயற்சி செய்கிறார் என்று தெரிகின்றது.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் இன்று மைத்திரி மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கூறி வருகின்றனர். மிகவும்திட்டமிட்ட அடிப்படையில் மைத்திரி மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு முயற்சி செய்கின்றார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி தீர்மானமெடுத்துள்ளது, மக்கள் விரும்புகின்றனர் என்று கூறிக்கொண்டு அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போகின்றார். அதற்கான ஏற்பாடுகளைத்தான் அத்துரலிய ரத்ன தேரரும் செய்கின்றார்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்காமல் அவரால் தேர்தலில் போட்டியிட முடியாது. அரசமைப்பைத் திருத்தி அதை நீக்கிவிட்டுத்தான் அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் அவரால் ஒருபோதும்தேர்தலுக்குச் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர். (ந - 3)

# பொன்சேகாவை உடன் கைது செய்ய வேண்டும்

## வலியுறுத்துகின்றார் கம்மன்பில

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் இராணுவத் தளபதி, அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில .

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பிலான தகவல்கள் தெரிந்திருந்தும், சரத் பொன்சேகா நீண்ட காலமாக அவற்றை மூடி மறைத்துள்ளார்.

தகவல்களை மூடி மறைத்தமைக்காக சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டும்.

கொலையை தாம் மேற்கொள்ளவில்லை. கபில ஹெந்தவிதாரண தலைமையிலான குழுவே இதனை மேற்கொண்டது என சரத் பொன்சேகா புலனாய்வுப் பிரிவிடம் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறியதன் மூலம் தாம் குற்றமிழைக்கவில்லை. குற்றவாளிகள் விவரங்கள் தெரிந்தும் அதனை மறைத்தேன் என்று சரத் பொன்சேகாவே ஒப்புக்கொண்டுள்ளார்.

கொலை தொடர்பான தகவல்களை மூடிமறைத்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க கடந்த ஓராண்டு காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அனுர சேனாநாயக்க, இந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளுவில்லை. சரத் பொன்சேகா, தகவல்கள் தெரிந்தும் தாம் அதனை வெளிப்படுத்தவில்லை என ஒப்புக்கொண்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டும். என்றார். (ந - 5)

# நீதிமன்றங்களின் பாதுகாப்புக் கட்டமைப்புகள் சீரமைப்பு

## கவனம் செலுத்துகின்றது நீதி அமைச்சு

கொழும்பு, மார்ச் 29

நீதிமன்றங்களின் பாதுகாப்புக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் நீதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அத்தகைய குறைப்பாடுகளை மறுசீரமைப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நீதியமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன குறிப்பிட்டுள்ளார்.

பலபிட்டிய மேல் நீதிமன்றத்தின் ஆவணக் களஞ்சியத்தினுள் திருடர்கள் நுழைந்தமை தொடர்பில் வினவியபோதே, நீதியமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

பலபிட்டிய மேல் நீதிமன்ற ஆவணக் களஞ்சியத்துக்குள் திருடர்கள் நுழைந்த சம்பவம் தொடர்பாக விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்டு வரும் விசாரணைகளின் அறிக்கை கிடைத்த பின்னர், நீதிமன்றங்களின் பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

பலபிட்டிய மேல் நீதிமன்ற ஆவணக் களஞ்சிய அறை திருடர்களால் உடைக்கப்பட்ட போதிலும் அங்கிருந்த ஆவணக் கோவைகள் எதுவும் காணாமற் போகவில்லை என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நீதிமன்ற ஆவணக் களஞ்சிய அறைக்குப் பொறுப்பான அதிகாரி அதை உறுதி செய்துள்ளார் என்றும் பொலிஸாரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந - 5)

யாழ்ப்பாணம் நாவற்குழி கிழக்கு

அருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்



முதலாவது வருட சங்காபிஷேக சிறப்பிதழ்-2017

வைரவர் பெருமான் மெய்யடியார்களே!

சீரும் திருவும் பொலிந்திருக்கும் இவ் இலங்கை திருநாட்டிலே சைவமும் தமிழும் செழித்து நிலவும் யாழ்ப்பாணம் நாவற்குழி கிழக்கு பதியிலே எழுந்தருளி அருள்பாலிக்கும் ஞான வைரவர் பெருமானிற்கு நிகழும் துர்முகி வருடம் பங்குனித் திங்கள் 27 ஆம் நாள் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரம் ஒரு வருட பூர்த்தி உற்சவமாக 108 சங்காபிஷேகம் நடைபெற திருவருளும் குருவருளும் கூடியுள்ளது. 29.03.2017 புதன்கிழமை முதல் தொடர்ச்சியாக மண்டல அபிஷேகப் பூசைகள் நடைபெற்று 12 ஆம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு வைரவப் பெருமானின் அருளைப் பெற்றுய்வோமாக.

**கிரியாகால விவரம்:**

| | | |
|---|---|---|
| விசேட அபிஷேகம் | - | காலை 9.00 மணி |
| விசேட பூஜை | - | முற்பகல் 10.30 மணி |
| சுவாமி வீதியுலா | - | 11.30 மணி |
| அன்னதானம் | - | ஒரு மணி |

சங்காபிஷேக உற்சவகுருக்கள்

கிரியாகிரமஜோதி சிவஸ்ரீ இலக்ஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் J.P,M.A. BCA (Hons), DIT

(சங்கத்தானை சாவகச்சேரி. பிரதம குரு கந்தசுவாமி கோயில், பாணந்துறை)

கிரியா ரத்தன சிவஸ்ரீ. இலக்ஷ்மிகாந்த சத்யோஜாத குருக்கள் (திருநெல்வேலி)

ஆலய ஸ்தானிக குரு - ஸ்ரீபவன் ஐயா, கோண்டாவில்

ஆலய மங்கல வாத்தியம்
கலியமூர்த்தி குழுவினர்

ஒலி ஒளி அமைப்பு
செ.தர்ஷன் - நாவற்குழி

அடியார்கள் விழாக்காலங்களில் பூசைக்கு தேவையான பால், தயிர், இளநீர், பழவகைகள், பூ மாலை, பூ என்பனவற்றை குறைவில்லாது தந்து வைரப்பெருமானின் உற்சவத்தை பூரணமாக நடத்துவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை.**

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கு கூட்டமைப்பினரே காரணம்

## தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு



கொழும்பு,மார்ச் 29
"அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவை பொது வேட்பாளராகக் கொண்டு வந்து, நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணிகளாக செயற்பட்டவர்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பினரே."

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

சித்தாண்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் இப்போது ஒரு நல்லதொரு சூழ்நிலையில் இருக்கின்றோம் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

முன்பெல்லாம் வெள்ளைவான் பிரச்சினை, ஆள்கடத்தல்கள், பொலிஸ், இராணுவத்தின் கெடுபிடி இவ்வாறான நிலமைகள் இருந்தன. தற்போது அந்த நிலைமைகள் எல்லாம் இல்லாமல் போய்விட்டன.

இந்த நாட்டில் முன்னைய அரச தலைவர் இந்த நாட்டைத் தானும் தன்னுடைய குடும்பத்தினரும் தொடர்ச்சியாக ஆளக்கூடிய விதத்திலே மிக இறுக்கமான, நுணுக்கமான பல்வேறு திட்டங்களை வைத்திருந்தார். ஆனால் அந்தத் திட்டங்களையெல்லாம் முறியடிக்கக் கூடிய விதத்தில், ஒரு பொதுவான வேட்பாளர் ஒருவரைக் கொண்டு வரவேண்டும் என்கின்ற விடயத்தில் தலைவர் சம்பந்தன் ஐயாவும், தென்தரப்புத் தலைவர்களும் மிக மிக நுணுக்கமாக வேலைகளைச் செய்தார்கள். யாரோ ஒருவரை வேட்பாளராகக் கொண்டு வரவேண்டும் என்று அல்ல. வெல்லக் கூடிய ஒருவரை வேட்பாளராகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே அவர்கள் செயற்பட்டார்கள்.

மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராகக் கொண்டு வருவதற்கு மிகமிக நுணுக்கமாக ஆராய்ந்தவர் எமது தலைவர் என்பதை நாங்கள் உறுதியாகச் சொல்லுவோம்.

எமது தலைவரின் அப்போதைய தீர்மானத்தின் பிரகாரம், எத்தகைய மாற்றம் வந்திருக்கின்றது என்பதைப் பாருங்கள்.

எனவே மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராகக் கொண்டு வந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தொடர்பான, இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு வருவதில் முழுச் சூத்திரதாரியாக இருந்தவர் எமது தலைவர் சம்பந்தன் ஐயாதான். அவரின் இராஜதந்திரத்தின் வெற்றி தான் அங்கு தீர்மானங்களாக வந்தன.

ஆனால் அந்தத் தீர்மானங்கள் எல்லாம் வந்ததன் பின்னர், எங்களோடு இருந்த சிலர் அங்கு சென்று, சில சில அறைகளில் இருந்து விட்டு, பத்திரிகையாளர் மாநாடுகளை மேற்கொண்டு விட்டு ஏதோ மண்ணைக் கயிறாகத் திரிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் மிக நிதானமாக எம்முடைய தலைவர் யார் என்பதைக் கவனமாக ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது இருக்கின்ற நிலைமையை உருவாக்கியது முழுக்க முழுக்க எமது தலைவரே. இந்த நிலைமையை வைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு வெற்றியையும், மீட்சியையும் பெற்றுத் தர விருப்பம் கொண்டுள்ளவர் எமது தலைவர் தான். எனவே அவருக்குக் கைகொடுக்கக் கூடிய விதத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லா அங்கத்தவர்களும் உழைத்திட வேண்டும்.

எங்கள் தமிழ்த் தலைமை எவ்வாறு சிந்திக்கின்றதோ அந்தச் சிந்தனையின் ஊடாகச் செல்ல வேண்டும். ஊசியின் பின்னே செல்லுகின்ற நூலாகத் தொடர்ந்து செல்வது தான் உண்மையான தொண்டரின் கடமை. அவர்களாலேதான் சமுதாயத்துக்கு நன்மை உண்டாகும். பழமையை அங்கீகரித்துக் கொண்டு பழமையின் வழியிலே செல்லுகின்ற தொண்டர்களால் மட்டும் தான் அந்தத் தலைவன் காட்டுகின்ற இலக்கை அடைய முடியும்.

எமது தலைமைக்கு நாங்கள் கரம் கொடுத்திட வேண்டும். அந்த வகையில் இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய எல்லா உறுப்பினர்களும் நிதானமாகச் சிந்தியுங்கள். என்றார். (ஐ)

# போரின் போர்வையில் மக்களைக் கொன்றவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்

## படையினர் மத்தியில் சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 29
"போரின் போர்வையில் அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்தவர்கள் எவராக இருந்தாலும், கட்டாயம் அதற்குப் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும்."

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க படையினர் மத்தியில் தெரிவித்தார்.

இலங்கை அரசின் தற்போதைய அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக படை அதிகாரிகள் மற்றும் படையினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு பலாலியிலுள்ள படையினரின் தலைமையகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொறுப்புக்கூறல் வழிமுறையானது, போரில் மோதல்களில் ஈடுபட்ட இரண்டு தரப்பினருக்கும் நியாயமானதாக இருக்கும். போரின் போர்வையில் நடந்த பொதுமக்களின் கொலைகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. அவ்வாறான தவறை இழைத்த எவராக இருந்தாலும் கட்டாயம் அதற்குப் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும்- என்றார். இந்தக் கலந்துரையாடலில் யாழ். படைகளின் தலைமையகத் தளபதி மேஜர்ஜெனரல் மகேஸ்சேனநாயக்க மற்றும் கட்டளை அதிகாரிகள் மற்றும் படையினர் கலந்து கொண்டனர்.

இதேவேளை அன்றைய தினம் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், " போரில்லாமல் பொதுமக்களைக் காரணமின்றிக் கொலை செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டைப் பாதுகாப்பதற்குப் போராடிய எமது ராணுவ வீரர்களுக்கு எதிராகக் காரணமின்றிச் செயற்படுவதற்கு நாம் தயாராக இல்லை.



போர்க் காலத்தில் இராணுவம் பொதுமக்களின் காணிகளைக் கைப்பற்றிக் கொண்டது. கைப்பற்றிய காணிகளை இராணுவம் மீளவும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். இவை எல்லாவற்றுடன் இந்தப் பிரதேசங்களின் கல்வி, சுகாதாரம் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் போன்றவற்றை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்லவேண்டிய தேவை இருக்கின்றது.

காணாமற்போனவர்களின் விடயம் தொடர்பாக அவர்களின் உறவுகள் நாளாந்தம் எனது செயலணிக்கு வந்து அழுது புலம்பிச் செல்கின்றனர். இது தொடர்பாக நேர்மையாக நடவடிக்கை எடுப்பதாக அரசு, மக்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வாக்குறுதி கொடுத்துள்ளது. அதன் காரணமாகப் பாதுகாப்புத் தரப்புடனும், பொலிஸாருடனும் கலந்துரையாடி ஒரு செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ளோம். சட்டவரைவு நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டவரைவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டு அதனை நடைமுறைப்படுத்தும் பணி மட்டுமே மிகுதியாகக் காணப்படுகின்றது. இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக இலங்கையில் உள்ள எல்லா இராணுவத்தையும் தூக்கு மேடைக்குக் கூட்டிச் செல்வதாக அர்த்தமில்லை" என்று அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கபில ஹெந்தவிதாரணவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

ஊடகவியலாளர் கீத் நொயார் மீதான தாக்குதல் குறித்து தேசியப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண நேற்று முன்தினம் புலனாய்வுப்பிரிவுக்குஅழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அண்மையில் அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா முக்கிய விடயங்களைப் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த கடத்தல் சம்பவம் மட்டுமன்றி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், தாக்குதல்கள், கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் கபில ஹெந்தவிதாரண தலைமையிலான ஒரு குழுவால் மேற்கொள்ளப்பட்டன என்று சரத் பொன்சேகா கூறியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தும் நோக்கிலேயே ஹெந்தவிதாரண புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணி முதல் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் மூத்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் படையதிகாரிகளிடமும் கடந்த கால குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது எனவும் தெரிய வருகிறது. (ஐ)

வளம் பெற வைக்க அயராது உழைத்து உங்கள் வாழ்வின்
பயனை அடையாது எம்மை விட்டு பிரிந்த எங்கள் அன்புள்ளத்தின்
ஈராறாம் ஆண்டு நினைவுத்துளிகள் சில...

அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா
(வள்ளல் வரதன்)
(நகரசபை சாவக்சேரி)
திதி: துதியை

அன்னை மகிழ
02.06.1953



அன்னை தவிக்க
10.04.2005

மண்ணுலகை விட்டு பிரிந்தாலும் காலங்கள் பல கடந்து சென்றாலும்
துன்பம் எனும் தோணியிலே துடுப்பின்றி அலைமோதும் படகு போல்
என்ன செய்வது எங்கு போவது என்று திசை தெரியாமல் உங்களைப் பிரிந்து
பன்னீராண்டுகள் வந்ததுவோ?
எத்தனை உறவுகள் இருந்தாலும் கரம் பிடித்த அம்மாவுடன் பக்க பலமாய் இருக்காது
தோள் சாய அப்பா இல்லையே என கதறும் முப்பிஞ்சுகளை அரவணைத்து அனாதரவராய்
தவிக்க விட்டு விரைந்தோடி வழி தெரியா தூரம் சென்றதேனோ?

வானம் கைகளால் பிடிக்க முடியாத தூரத்தில் இருந்தாலும்
நிலவை அன்னத்தில் கதையாக்கி ஊட்டி நெஞ்சில்
நம்பிக்கை எனும் விதையை விதைத்த
முதல் கடவுள் எம் ஆருயிர் அப்பாவே மறைந்து போனாலும் மறந்து போகாத
அன்பைக் காட்டி சென்றதேனோ?

நீங்காத நினைவுகளோடும் ஆறாத துயரோடும்
நாங்கள் வாழ்கின்றோம் நாளும் நினைந்தபடி
பன்னீராண்டுகள் நகர்ந்தது ஆறமுடியவில்லை மீண்டும் வந்திங்கு வாழ வழிவராதா?

நினைவெல்லாம் நீங்கள் தான் அப்பா - எம் துணையிருப்பும் நீங்கள் தான்
இன்று அன்பு மிகு தந்தையைத் தேடி நாம் வாடுகின்றோம்
அன்னையும் நாங்களும் அன்பு முகம் தேடுகின்றோம்.

காலமது தோற்றதனால் காலனவன் வென்றுவிட்டான்
ஆண்டவன் அடியில் அழுது புலம்புகின்றோம்
அப்பா என்ற பெருமகனை உம்மகனாய் ஏற்றிடுவீர்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி! ......

என்றென்றும் உங்கள் அடியில்
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

"சந்நிதி இல்லம்"
கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

# கொழும்பு அரசு பிளவடைந்தால் மைத்திரிக்கு ஒத்துழைப்போம்

## மகிந்த அணியினர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு, அரசு பிளவடையுமாயின் , மகிந்த அணியினர் மைத்திரிபாலவின் பக்கம் இருந்து ஒத்துழைப்பு வழங்குவர்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த அரசு தற்போது இருக்கும் நிலமையைப் பார்க்கும் போது, அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கிடையில் பனிப்போர் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது என்று விக்டர் ஐவன் தெரிவித்திருக்கின்றார். இந்தப் போர் தற்போது வெடிக்கும் நிலையை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அது எமக்கு மகழ்ச்சிக்குரிய செய்தியே. விக்டர் ஐவனுக்கு அது வேதனையளிக்கும் விடயமே. எனினும் எமக்கு மகிழ்ச்சிக்குரிய விடயம். ரணிலுக்கும், மைத்திரிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு அரசு பிளவடையும்நிலையை அடையுமாயின், மைத்திரியின் பக்கம் இருந்து அரசு பிளவடை வதற்கு மகிந்த அணியினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்பதே எனதுகருத்து. மோதல்வெடித்து அரசு பிளவடையுமாயின், அந்தப் பிளவுக்காக மைத்திரியின்பக்கம்இருந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்." என்றார். (ஐ)

# ஐ.மு.வங்கியின் உயர் குழுவினர் இவ்வாரம் இலங்கைக்கு

கொழும்பு,மார்ச் 29

உலகின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான, ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உயர்மட்டக் குழுவொன்று இந்த வாரம் இலங்கைக்குப் பயணிக்கவுள்ளது. . இந்தக் குழுவினர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மூத்த அமைச்சர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், இராஜதந்திர சமூகத்தினர், உள்நாட்டு, வெளிநாட்டு நிதி அமைப்புகள் ஆகியவற்றைச் சந்தித்து, இப்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால முதலீடுகள் குறித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உதவித் தலைவர் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையைக் கண்காணிக்கும் பன்னாட்டு நிபுணர் குழுவின் செயற்பாட்டுக்கு கால நீடிப்பு

## வழங்கியது நாடு கடந்த தமிழீழ அரசு

கொழும்பு,மார்ச் 29



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையைக் கண்காணித்து வந்த பன்னாட்டு நிபுணர் குழுவின் செயற்பாட்டுக்கு, நாடு கடந்த தமிழீழ அரசு காலநீடிப்பை வழங்கியுள்ளது. அதேவேளை உலகளாவிய மேலுரிமையின்படி இலங்கையின் அரசியல், படையியல் நிறுவன அமைப்பின் தலைவர்களுக்கும் எதிராக வெளிநாடுகளில் வழக்குகளைத் தொடுப்பதற்கான வல்லுநர் குழு ஒன்றையும் நியமித்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதிப்புற்ற தமிழ் மக்கள் அடுத்த இரு வருடங்கள் நிலைமாற்ற நீதிச் செயல்வழியைக் கைகட்டி வாய் பொத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. அதனைக் கையிலெடுக்க அவர்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள். முகிழ்த்து வரும் பன்னாட்டு உறவுகளும், பன்னாட்டுச் சட்டமும் இன்று அதற்கான வெளிகளைத் தோற்றுவிப்பதாக நாடுகடந்த தமிழீழ அரசு உறுதியாக நம்புகிறது. இலங்கைக்கு இரண்டு வருடங்கள் கால நீட்டிப்பு வழங்கியிருப்பதன் பொருள் குற்றவாளிகளைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதில் மனித உரிமை மன்றமும் உடந்தையாகி விட்டது என்பதை, இந்தச் செயல் மீண்டும் ஒரு முறை மெய்ப்பிக்கிறது. ஐ.நா. பொதுப்பேரவை, சிரியாவுக்கான நடுநிலைத் தற்சார்புப் பன்னாட்டுப் பொறிமுறையை நிறுவியது. இவ்வாறு, சாட்சியங்களை அழியாது காக்கவும், பன்னாட்டுக் குற்றங்களைப் புலனாய்வு செய்யவும் ஒரு பன்னாட்டுப் பொறிமுறை உருவாக்கப்பட்டது. மனித உரிமை மன்றம் இதேபோன்ற நடவடிக்கை எடுத்து, இலங்கை அரசுக்கும், தமிழ் மக்களுக்குமான ஆயுத மோதலின் போது அந்த நாட்டில் இடம் பெற்ற குற்றங்களுக்கான சான்றுகள் தொடர்ந்து அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதி மன்றில் முன்னிறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளுடன், கடந்த 2015ஆம்ஆண்டு நாடு கடந்த தமிழீழ அரசு பத்து இலட்சம் கையொப்ப இயக்கம் நடத்திய போது, உலகெங்கும் 16 இலட்சம் மக்கள் அதில் பங்கேற்றார்கள். இலங்கைப் பாதுகாப்புப் படைகள் 99 வீதம் சிங்களவர்களைக் கொண்டவை. ஆனால் பாதிப்புற்றவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இந்த நிலையில் இருவருடங்களோ, இருபது வருடங்களோ நீடிப்பைத் தருவது, அனைத்து வகையிலும் தொழில்நுட்ப உதவியும் நிதி உதவியும் வழங்குவது, சாலச் சிறந்த அரசதந்திர நுணுக்கங்கள் எல்லாமே இலங்கைக்கு ஒன்றுதான்.

இரு வருடங்கள்கால நீடிப்புக் குறித்து எங்களுக்குள்ள உடனடிக் கவலை , இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தமிழர்களுக்கு எதிராக மேலும் பன்னாட்டுக் குற்றம் புரியவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடவும், அது துணிச்சலும் ஊக்கமும் கொடுக்கும் என்பதே. ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கில் தமக்கான அலுவலகங்கள் அமைத்து, மனித உரிமைக் கண்காணிப்பாளர்களைக் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். - என்றுள்ளது. (ஐ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
உயர்பட்டப்படிப்புகள் பீடம்
புதியஅனுமதிகள்

1. நூலகமற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா 2017/18 (அணிIV)
2. பண்பாட்டியல் முதுகலைமாணிக் கற்கைநெறி - 2017/2018 (அணிIII)

மேற்படிசுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நூலகமற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா 2017/18(அணிIV)

அனுமதிக்குரிய தகைமைகள்

1. அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒருகற்கை நெறியில் பட்டம்
2. ஆங்கிலத்தில் திருப்திகரமாக தொழில் செய்வதற்கான அறிவு
3. கணனிப் பிரயோகத்தில் திருப்திகரமான அறிவு (முன்னுரிமை)

தற்போது நூலகவேலையுடன் தொடர்புடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கற்கைநெறிக் காலம்:ஒருவருடம்
மொழி மூலம் :தமிழ்
தெரிவுமுறைமை: நேர்முகத்தேர்வு
கற்கைநெறிக்கட்டணம் :85,000/-

பண்பாட்டியல் முதுகலைமாணிக் கற்கைநெறி - 2017/2018 (அணிIII)

அனுமதிக்கானதகைமைகள்

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒருகற்கை நெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம்.

அல்லது

- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடியவேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கற்கைநெறிக் காலம்:ஒருவருடம்.
மொழி மூலம் :தமிழ்
தெரிவுமுறைமை: நேர்முகத்தேர்வு
கற்கைநெறிக்கட்டணம் : 100,000/-

விண்ணப்பப் படிவம் பெறும் முறை:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடஅலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்றுமக்கள் வங்கி,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு 1000/= கட்டணத்தை செலுத்தி உயர்பட்டப் படிப்புகள் பீடஅலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர்நிதியாளர்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடிதஉறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குஅனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லதுநேரில் 30.04.2017 ஆம் திகதிக்கு முன்னர்கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்றமுகவரிக்குஅனுப்புதல் வேண்டும்.

உரியவிண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

# தண்ணீரை மட்டுமே பருகுவதால் விமலின் உடலுக்குப் பெரும் பாதிப்பு

## சிறைச்சாலை மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 29



உண்வு ஒறுப்புப் போராட்டதை முன்னெடுத்துள்ள விமல் வீரவன்ச, தண்ணீரை மட்டுமே பருகினால் அவருடைய சிறுநீரகங்கள் மற்றும் குடல் ஆகியவை குணப்படுத்த முடியாத அளவுக்குப் பாதிப்படைந்து விடும்.

இவ்வாறு வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

தண்ணீரை மட்டும் பருகிக்கொண்டு, உடல் ஆரோக்கியத்தை நான்கு நாள்களுக்கு மட்டுமே பேணமுடியும். அதன் பின்னர், ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டு விடும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், உணவு ஒறுப்பில் இருக்கும் விமல் வீரவன்ச, மெதுவாகப் பேசுகின்றார் என்றும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகின்ற விமல் வீரவன்சவின், குருதி மாதிரி, வெளிநபரின் கைகளுக்குச் சென்றமை எவ்வாறு என்பது தொடர்பில், சிறைச்சாலைகள் புலனாய்வுப் பிரிவு சிறப்பு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

விமலின், குருதி மாதிரியை, வெளியில் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு, சிறைச்சாலை மருத்துவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகும் இவ்வாறான நிலையில், எவ்வாறு வெளியில் பரிசோதனை நடத்தப்பட்டது என்பது தொடர்பிலும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. சிறைச்சாலை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கைதிகள், தங்களுடைய குருதி மாதிரியைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதாயின், அதனை அரச மருத்துவமனைகளிலேயே மேற்கொள்ள வேண்டும். அதேபோல, சிறைச்சாலை அதிகாரிகளினால் தான் கட்டாயமாக அந்தக் குருதி மாதிரியும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். எனினும், விமல் வீரவன்சவின் குருதி மாதிரி வெளிநபரொருவரால் வெளியில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. அவர், விமல் வீரவன்சவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றும் அறிய முடிகின்றது என்றும் சிறைச்சாலைகள் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் இந்த சம்பவம் தொடர்பில், உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷாந்த தனசிங்கவால், சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில், சுகாதார அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஐ)

# காணி விடுவிப்புப் பிரச்சினையை இழுத்தடிக்க முடியாது ராணுவம்

## இப்படிச் சொல்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், மார்ச் 29
"மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் மக்களுக்குப் பதில் கூறாமல் வருடக்கணக்கில் பிரச்சினையை இழுத்தடிக்க முடியாது."
இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.





கடற்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள தமது பூர்வீக நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். நேற்று ஆறாவது நாளாகவும் .போராட்டம் தொடர்ந்தது.
போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்றார்.
ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான சி. பாஸ்கரா, மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ்,நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் றீகன் ஆகியோரும் சென்றிருந்தனர்.
அங்கு மக்களுடன் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது :ளள
இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.அதற்கு எங்களால் முடிந்த முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றோம்.
மக்களின் தொடர் போராட்டங்களின் மத்தியிலே கேப்பாபிலவுப் பகுதியில் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் தமது நிலங்களைமீட்கபோராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. முள்ளிக்குளம் மக்கள் தமது காணிகள் விடுவிக்கப்படும் வரைபோராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.
தமது போராட்டத்துக்கு எதிர்க்கட்சித்தலைவர், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள்,மாகாண அமைச்சர்கள், உள்ளிட்டோர் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-56)

# காணிகளை விடுவிக்காவிட்டால் பைத்தியமாக அலைய நேரிடும்

## கேப்பாபிலவில் போராட்டம் நடத்தும் மக்கள் விரக்தி



முல்லைத்தீவு, மார்ச் 29
"கொடிய போரில் நாம் பட்ட துன்பங்கள் அனைத்துக்கும் நிரந்தரத் தீர்வு, நாம் எமது பூர்வீகக் காணிகளுக்குள் செல்வதே. அது நடைபெறாது போனால் நாம் பைத்தியம் பிடித்து வீதியில் அலைய நேரிடும்."
இவ்வாறு விரக்தியுடன் தெரிவித்தனர் கேப்பாபிலவில் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வற்புறுத்தி அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மக்கள்.
கேப்பாபிலவில் 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும் என்றும் - தமது மீள்குடியமர்வை வலியுறுத்தியும் கடந்த 28 நாள்களாக போராட்டம் நடத்தப்படுகின்றது.
"இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட நாம் எமது உடலில் எறிகணைச் சிதறல்களையும், சன்னங்களையும் சுமந்து வாழ்கின்றோம். வெயிலிலும், பனியிலும் இந்தத் தகரக் கொட்டகைக்குள் இருந்து போராடும் நாம், உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளோம். அரசு தொடர்ந்து எம்மைக் கவனிக்காது விட்டால் நாம் பைத்தியம் பிடித்து வீதியில் அலையும் நிலையே ஏற்படும். நாங்கள் அகதிகளாவும், பைத்தியமாகவும் அலைவதையா இந்த அரசு விரும்புகின்றது.
இன்று நல்ல முடிவு வரும், நாளை நல்ல முடிவு வரும் என்ற எதிர்பார்ப்புடன் நாள்கள் நகர்கின்றன. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது நிலத்தில் நாம் காலடி வைத்தாலே நாட்டில் ஜனநாயகம் உள்ளது என்பதை நம்ப முடியும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.
(ற-7)

## ஆத்துமாவில் கவனம் வை

அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்! (ஏசா 55:3)
பெரியவெங்காயம் பார்த்திருக்கிறீர்களா? அதைப் பம்பாய் வெங்காயம் என்று அழைப்பர். பெரியவெங்காயத்துக்கு பல தோல்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் உரித்துக்கொண்டு போனால் கடைசியில் ஒரு முளை இருப்பதைக் காணலாம். இந்த வெங்காயத்தில் பல தோல்களை உரித்த பின்பும் அதை மண்ணில் புதைத்து வைத்தால் அது முளைத்து விடும். ஆனால் வெளியில் இருக்கும் பல தோல்களை உரித்தாலும் உரிக்காவிட்டாலும் நடுவில் இருக்கும் முளையைக் கிள்ளி விட்டால் அது முளைக்காது. அது போலவே மனிதனுக்கும் பல தோல்கள் இருக்கின்றன. அவனது குடும்பம் ஒரு தோல். அவன் அந்தஸ்து ஒரு தோல். அவனது கல்வியறிவு ஒரு தோல். அவனது வேலை ஒரு தோல். அவனது நோய் ஒரு தோல். அவர் நடைஉடை பாவனைகள் எல்லாம் தோல்கள் தான். ஆனால் இவை எல்லாவற்றையும் விட அவனுக்குள் விலையேறப் பெற்ற ஒரு முளை இருக்கிறது. அதுதான் அவனுடைய ஆத்துமா. ஆகவே இயேசு கேட்டார். மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனிதன் தன் ஆத்துமாக்கீடாக எதைக் கொடுப்பான். அன்பு மகனே! உன் ஆத்துமாவில் கவனம் வை. சரீர சுகமோ செல்வாக்கோ போனாலும் கூட திரும்பச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் உன் ஆத்துமாவை இழந்து போனால் உயிருள்ளவன் என்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாய் இருப்பாய்.




இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே தேவகுமாரன் வந்திருக்கிறார் என்றார். உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு. இன்று எமது சமூகத்தில் போதை வஸ்து பாவனை. கொலை, களவு குடிவெறி, பாலியல் துஷ்பிரயோகம், கலாசார சீரழிவு, ஒழுக்கமின்மை என்பன அதிகரித்துள்ளன. இவையெல்லாம் தோல்களே. மாமிசத்தின் படி நடவாமல் தூய ஆவியின் படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை.
அ.றெக்ஸ் றூபபதி
ஈச்சமோட்டை

# மாடுகள் கடத்தும், திருடும் மாபியா கும்பல் போரின் பின்னர் வன்னிப் பிராந்தியத்தில் தீவிரம்



வவுனியா, மார்ச் 29
போரின் பின்னர் வன்னிப் பிராந்தியத்தில் மாடுகளைத் திருடும், கடத்தும் மாபியாக் கும்பல் செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வன்னி பல லட்சக்கணக்கான கால் நடைகளைக் கொண்ட ஒரு பிரதேசமாக 2009 ஆம் ஆண்டு காணப்பட்டது. இடப்பெயர்வு போன்ற பல காரணங்களால் பெரும் தொகையான கால்நடைகள் ஏதிலிகளாக விடப்பட்டன. அவற்றுக்கு என்ன நடந்தது என்று தெரியாத விதத்தில் அழிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளை அழிப்பதை ஒரு சட்ட வரையறைக்குள் கொண்டு வராவிட்டால் எமது வன்னிப் பிரதேசத்தின் கால் நடை வளம் ஒட்டுமொத்தமாக அழிந்துவிடும். வன்னிப் பிரதேசத்தில் முக்கிய வருமான வளமாக இருப்பது கால் நடை வளம். அது திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றது. தடுக்க நாம் பல நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தோம். அனைத்தும் தோல்வியில் தான் முடிந்துள்ளன. உயர் அதிகார வர்க்கத்தின் பலம் மக்களின் வளங்களைச் சூறையாடி விட்டது. இனியும் இதைச் சூறையாடவிட முடியாது.
மாபியா கும்பல் வன்னிப் பகுதிக்குள் ஊடுருவி ஒவ்வெரு மாவட்டத்திலும் எங்களது கால்நடை வளங்களை அழிக்கின்றது. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசியுள்ளோம். வன்னிப் பிரதேசத்தின் கால் நடைவளம் அழிக்கப்படுகின்றது. இதை உடன் இடைநிறுத்த உரியநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
அரச ஊழியர்கள் நியாயமாக தங்களது மனச்சாட்சிக்கு உட்பட்டு செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் யாழ்ப்பாணத்தில் இறுக்கமான நடைமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது.
இறைச்சிக்கு வெட்டப்படும் பசுமாடு 12 வயதை அடைந்திருப்பதை கால்நடை வைத்திய அதிகாரி உறுதிப்படுத்த வேண்டும். ஒரு வாகனத்தில் எத்தனை மாடுகள் கொண்டு செல்லப்படலாம் என்பதற்குரிய நடைமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றனவா என்பது ஆராயப்பட வேண்டும்.
வவுனியாவில் இறைச்சிக்குரிய கொல்களம் தவறாக அமைக்கப்பட்டுள்ளது. கொல்களத்தில் உள்ள மாடுகளைப் பார்வையிடுவதற்கு, அரைச் சுவர் அமைக்கப்பட்டு அதற்கு மேல் கம்பியிலான நெற் அமைக்கப்பட வேண்டும். திருடப்பட்ட மாடுகள் இருக்கின்றதா என்பதை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அப்படி திருடப்பட்ட மாடு இருந்தால், உரிமையாளர் உடனேயே நகர சபைக்கு அறிவிக்க முடியும். மாடு கொல்களத்துக்குக் கொண்டு வரப்படும்போது சகல ஆவணங்களும் கொண்டு வரப்பட வேண்டும். இது சாதாரண நடைமுறை. இதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.
வவுனியாவில் தேவைக்கு மாடுகள் வெட்டப்படுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. முல்லைத்தீவில் களவாடப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு வரப்படுவதுதான் பிரச்சினை. வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்ட 50, 60 திருட்டு மாடுகள் ஒரே நாளில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. எதுவித சுகாதார நடைமுறையும் பின்பற்றப்படுவதில்லை. இது விடயத்தில் வடக்கு மாகாண சபை கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கொல்களத்தில் அந்தந்த மாவட்டத்தின் மாடுகள்தான் வெட்டப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட ஏற்பாடுகளை மாகாண சபை செய்ய வேண்டும் - என்றார். (ற-5)





இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் சேற்று விழா ஓட்டப்பந்தயம் அண்மையில் இடம்பெற்றது. 13 கிலோ மீற்றர் தூரமுடைய இந்தப் பந்தயத்தில் பள்ளம், மேடு போன்ற தடைகளைத் தாண்டிச் சென்று எவர் இலக்கை அடைகிறாரோ அவரே சம்பியன். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இதில் ஆர்வத்துடன் பங்குகொண்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# இராணுவ வானூர்தி வெடித்துச் சிதறியது

## 5 பேர் உயிரிழப்பு உக்ரைனில் சம்பவம்

கெய்வ், மார்ச் 29

உக்ரைன் நாட்டில் இராணுவ உலங்குவானூர்தி ஒன்று வெடித்துச் சிதறியதில் அதில் பயணித்த ஐவர் சாவடைந்தனர்.

உலங்குவானூர்தி மின்கம்பமொன்றில் உரசியதாலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும், இது உத்தியோகபூர்வ அறிவிப்பாக அமையவில்லை. விபத்து தொடர்பில் உக்ரைன் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

# ஜப்பானில் பனிச்சரிவு எண்மர் பரிதாபச் சாவு

டோக்கியோ, மார்ச் 29

ஜப்பானின் நாசு என்ற பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பனிச்சரிவை அடுத்து பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் உயிரிழந்தனர் என்று ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நாசு உயர்நிலைப் பள்ளியில் கல்விபயிலும் மாணவர்கள் 52 பேர் மற்றும் சில ஆசிரியர்கள் மலையேற்றப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். சிலர் மீட்கப்பட்டுள்ளனர்.

வேறுசிலர் நேற்று மதியம் வரை மீட்கப்படவில்லை. அவர்களைத் தேடும்பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்களின் நிலை தொடர்பில் கவலையும் வெளியிடப்பட்டது. (ம)

# விரைவில் கைதாவார் பார்க் கியூன்

சியோல், மார்ச் 29

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள தென்கொரிய முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை, விரைவில் கைதுசெய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் ஈடுபட்டார். அவரது நெருங்கிய நண்பியான சோய் சூன் சில் என்பவர் அரச விவகாரங்களில் தலையிட்டு முக்கிய கோப்புக்களை ஆராய்ந்தார் என்று எதிர்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன. இதனையடுத்து தலைநகர் சியோலில் பல லட்சம் மக்களின் பங்குபற்றலுடன் எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்பட்டன. இதனால் பார்க் கியூன் ஹை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரைப் பதவியில் இருந்து நீக்கியது நாடாளுமன்றம். தென்கொரிய அரசமைப்புச் சட்டமும் பார்கின் விலகலை உறுதிப்படுத்தியது.

தென்கொரியாவின் ஊழல் ஒழிப்பு கண்காணிப்பகம், பார்க் நேரில் வந்து விளக்கம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பார்க் கியூன் ஹை லஞ்சம் பெற்றதும், அரச விடயங்களை தனது சுய லாபத்துக்காக அம்பலப்படுத்தியதும் இதுவரையிலுமான விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. இதையடுத்தே பார்க் விரைவில் கைதுசெய்யப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# ட்ரம்புக்கு ஆதரவாகப் பேரணிகள் கலிபோர்ணியாவில் அரங்கேற்றம்



வொஷிங்டன், மார்ச் 29

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ஆதரவு தெரிவித்து அந்த நாட்டின் கலிபோர்ணியா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் சில பேரணிகள் நடத்தப்பட்டன.

அமெரிக்க அதிபராகத் தேர்தெடுக்கப்பட்ட ட்ரம்ப், தனது தேர்தல் பரப்புரைகளில் தான் எடுத்துரைத்த பல சர்ச்சைக்குரிய திட்டங்களை தற்போது மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறார்.

அவரது திட்டங்களுக்கு எதிர்ப்புக்கள் வந்து குவிந்துள்ளன. குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்குத் தடை, அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர், ட்ரம்பின் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கு பெரும் எதிர்ப்புக்கள் உள்ளன.

அவரது செயற்பாடுகளை அவ்வப்பொழுது அந்த நாட்டின் நீதித்துறை கட்டுப்படுத்தி வருகிறது. ட்ரம்ப்புக்கு எதிராக உலக அளவில் எதிர்ப்புக்கள் குவிந்துவரும் நிலையில் ட்ரம்புக்கு ஆதரவு தெரிவித்து கலிபோர்னியா மாகாணத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து பேரணிகளை நடத்தினர்.

ட்ரம்பின் நகர்வுகள் சரியானவை, 'அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பாதாகைகளை ஏந்தியவாறு ட்ரம்பின் ஆதரவாளர்கள் பேரணிகளில் கலந்துகொண்டனர். (ம)

# 100 கிலோ தங்க நாணயம் கொள்ளை ஜேர்மன் பொலிஸார் தேடுதல் வேட்டை

பெர்லின், மார்ச் 29

பெர்லினில் உள்ள போட் அருங்காட்சியகத்தில் இருந்து 100 கிலோ எடை கொண்ட அரிய தங்க நாணயம் களவாடப்பட்டது.



இந்த நாணயத்தின் மதிப்பு ஒரு மில்லியன் டொலர்களாகும், இது 53 சென்ரிமீற்றர் விட்டமும், 3 சென்ரிமீற்றர் கனதியும் கொண்டது, இதில் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபத்தின் படம் பொறிக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்துக்கு அருகில் இருக்கும் ரயில்வே இரும்புப் பாதை அருகே இருந்த ஏணியைப் பயன்படுத்தி திருடர்கள் உள்ளே நுழைந்து கொள்ளையிட்டுச் சென்றிருக்கலாம் என்று ஜேர்மன் பொலிஸார் தெரிவித்தனர்.

போட் அருங்காட்சியகம் உலகின் மிகப்பெரிய நாணய சேகரிப்பு இடமாகும். இங்கு பண்டைய கிரேக்க நாகரிகத்தைச் சேர்ந்த ஒரு லட்சத்து 2 ஆயிரம் நாணயங்களும், பழைய உரோமன் நாணயங்கள் ஐம்பதாயிரமும் உள்ளன. (ம)

# தமிழ்மொழி விழா ஏற்

சிங்கப்பூர், மார்ச் 29



சிங்கப்பூரில் தமிழ் மொழி திருவிழா ஏப்ரல் முதலாம் திகதி தொடங்கி 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது அங்கு மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

சிங்கப்பூரின் 4 அதிகாரபூர்வ மொழிகளில் தமிழும் ஒன்று. அந்த நாட்டில் தமிழ் செழித் தோங்க அரசு ஆதரவுடன் கடந்த 2000 ஆம் ஆண்டில் 'வளர் தமிழ் இயக்கம்' தொடங்கப்பட்டது. அந்த அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முழுவதும் தமிழ் மொழித் திருவிழா நடத்தப்

# ஓ.பி.எஸ்ஸின் வியூகத்துக்கு தினகரன் கண்டனம்

இரட்டை விளக்குகள் கொண்ட மின் கம்பத்தை இரட்டை இலைச்சின்னம் போன்று மாற்றியமைக்காக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தார் அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் ஆர்.கே. நகர வேட்பாளர்களில் ஒருவருமான தினகரன்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சாவடைந்த பின்னர் அவர் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்தப்படவுள்ளது. அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்துள்ளதால் அந்தக் கழகத்தின் பெயரையும் கட்சிச் சின்னமான இரட்டை இலையையும் எவரும் பயன்படுத்தக்கூடாது என்று இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஓ.பி.எஸ்.




தரப்பினருக்கு இரட்டை விளக்குகள் கொண்ட மின்கம்பமும் தினகரனுக்கு தொப்பியும் சின்னமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இரட்டை விளக்குகள் கொண்ட மின்கம்பத்தில் உள்ள ஓர் விளக்கு ஜெயலலிதா மற்றொரு விளக்குஎம்.ஜி.ஆர். என்றுதனதுதேர்தல் பரப்புரையை ஆரம்பித்திருந்தார் ஓ.பி.எஸ். தற்போது அ.தி.மு. கழகத்தின் இரட்டை இலைச் சின்னத்தை மாதிரியாகக் கொண்டு இரட்டை விளக்குகள் கொண்ட மின்கம்பத்தை தமது சின்னமாக வடிவமமைத்து ஓ.பி.எஸ். தரப்பினர் தேர்தல் பரப்புரையில்ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் இந்த வியூகத்துக்கு தினகரன் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் இரட்டை இலையை முடக்கி உத்தரவிட்டுள்ள நிலையில் ஒ.பன்னீர்செல்வம் தரப்பினர் இரட்டை இலையை மாதிரியாகப் பயன்படுத்துவது தேர்தல் ஆணையத்தின் விதிமுறையை மீறும் செயல் என்று தினகரன் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார். (ம)



# 5 லட்சம் மக்கள் மீண்டனர்

## ஐ.எஸ்ஸின் பிடியிலிருந்து

பக்தாத், மார்ச் 29

ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து இதுவரை 5 லட்சம் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரியா நாடுகளின் சிலபகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூலும் இருந்தது. மோசூல் நகரின் கிழக்குப் பகுதி ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் கடந்த ஒருமாத காலமாக நடைபெற்று வருகிறது.

மேற்கு மோசூலில் உள்ள முக்கிய அரச அலுவலகங்கள், ஆளுநர் மாளிகை, சிறைச்சாலை, பல்கலைக் கழகம், முக்கிய மசூதிகள் ஆகியன ஏற்கனவே மீட்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை 5 லட்சம் மக்கள் மீட்கப்பட்டுவிட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

**மனித வெடிகுண்டுகளாக சிறுவர்கள்**

மேற்கு மோசூலில் இதுவரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதை அந்த அமைப்பின் தலைவர் பக்தாதியே சில தினங்களுக்கு முன்னர் ஏற்றிருந்தார். தமது பின்னடைவைச் சந்திப்பதற்காக மிருகங்களை வெடிகுண்டுகளாகப் பயன்படுத்தி வந்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, தற்போது சிறுவர்களையும் வெடிகுண்டுகளாகப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது என்று ஈராக் இராணுவம் எச்சரித்துள்ளது. (ம)

# ஈரானை மிரட்டும் ஐ.எஸ்.

தெஹ்ரான், மார்ச் 29

ஈரானில் தமது தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அங்கிருந்து ஈரான், துருக்கி போன்ற அயல்நாடுகளில் வேரூன்றுவதற்கு எத்தனிக்கின்ற போதிலும் ஈரானும், துருக்கியும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக மிகவும் அவதானமாக உள்ளன. முன்னதாக துருக்கியை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு எச்சரித்தது. தற்போது ஈரானுக்கும் அந்த அமைப்பு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம)

# ஆப்கான் எல்லையில் சுவர்கள் கட்டுகிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், மார்ச் 29

ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளை தடுத்து நிறுத்த எல்லையில் வேலி அமைக்கும் திட்டத்தை, பாகிஸ்தான் அரசு தொடங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லை வழியாக தீவிரவாதிகள் பாகிஸ்தான் நாட்டிற்குள் நுழைந்து அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர். சமீபகாலமாக இந்த தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

மேலும், பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதாக இரு நாடுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளை தடுத்து நிறுத்த எல்லையில் வேலி அமைக்கும் திட்டத்தை பாகிஸ்தான் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவ தலைமையதிகாரி தெரிவிக்கையில், ஆப்கான் தீவிரவாதிகள் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் சுமார் 2 ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூரத்துக்கு எல்லை அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளோம். இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மொத்தத் தூரத்திற்கும் எல்லையமைக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. எனினும், பாகிஸ்தானின் இந்த முயற்சி தொடர்பாக ஆப்கானிஸ்தான் அரசு இதுவரை எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆஸியை புரட்டுகிறது டெபி உச்சக்கட்டப் பதற்ற நிலை

கான்பெரா, மார்ச் 29

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியில் மையம் கொண்டிருக்கும் டெபி புயல் அங்கு தனது கோரத் தாண்டவத்தை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது.

குவீன்ஸ்லாந்தில் உள்ள புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான விட்சன்டே நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) டெபி தாக்கியது. ஏர்லி கடற்கரையை நேற்றுக் காலை புயல் கடந்தது. அப்போது மணிக்கு 270 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது என்றுபன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பல மரங்கள் வேருடன் சாய்ந்தன. குடியிருப்புக்களின் கூரைகள் காற்றில் பறந்தன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குயின்ஸ்லாந்தின் பல இடங்களிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

டெபி புயலின் கோரத்தன்மையை சரியாகக்கணித்துமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டதால் உயிரிழப்புக்கள் குறைக்கப்பட்டன. நேற்றுமதியம் வரையிலான நிலவரத்தின்படி பெண் ஒருவர் சாவடைந்திருந்தார்.

புயல்கரையைக் கடந்த பின்னரும் அனர்த்தங்கள் இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டதால் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. (ம)



# பாடுகள் சிங்கப்பூரில் மிகத் தீவிரம்



படுகிறது. நடப்பு வருடத்துக்கான விழாவை சிங்கப்பூர் தொழில் துறை அமைச்சர் ஈஸ்வரன் தொடங்கி வைக்கவுள்ளார்.

'தமிழை நேசிப்போம், தமிழில் பேசுவோம்' என்ற கருத்தை முன்வைத்து நடத்தப்படும் தமிழ் மொழித் திருவிழாவில் தமிழகம், இலங்கை உட்பட உலகம் முழுவதும் இருந்தும் பல்வேறு தமிழ் கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

தமிழ்மொழி விழாவை முன்னிட்டு சிங்கப்பூரில் கண்கவர் ஒளிவிளக்குகளால் நகரம் மேலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புலத்தவரின் வகிபாகம்

தமிழர்களின்விடுதலைப்போராட்டத்திலும்அரசியல்போராட்டத்திலும்புலம்பெயர்தமிழர்களின்வகிபாகம்என்னஎன்பது தொடர்பிலானசர்ச்சைக்குரிய விவாதம்திடீரெனஇந்தவாரத்தில் ஏற்பட்டது. மிகவும் கவனத்துக்குரியதாக இந்த விவாதம் இருந்தது. ஈழத்தமிழர்களின்அரசியல் எதிர்காலப் போக்குக்குக்கட்டியம் கூறுவதாகவும் இது இருப்பதால் அதனைக் கூர்ந்து அவதானிப்பது அவசியம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, நிலைமாறுகால நீதி, நல்லிணக்க நடவடிக்கைகள்என்பவற்றில்புலம்பெயர்தமிழர்களையும்இணைத்துக்கொள்ளவேண்டும் என்று வடமாகா ணமுதலமைச்சர் அறைகூவல்விடுத்துஇரண்டுநாள்களுக்குள்ளே, புலம்பெயர்தமிழ் வர்த்தகப் புள்ளி ஒருவரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண்ம் வர இருந்த தமிழக நடிகர் ரஜனிகாந்த்தின் பயணம் கைவிடப்பட்டமையை எதிர்த்துநடந்தபோராட்டத்துக்குஅந்தஇடத்திலும், சமூகவலைத்தளங்களிலும் கடுமையான எதிர்ப்புக் காட்டப்பட்டது.

ஒருபுறத்தில் புலம்பெயர்தமிழர்களுக்கு எமது அரசியலில் வகிபாகம் வேண்டும் என்ற அழைப்பு, மறுபுறத்தில்எமதுவாழ்க்கையில், அரசியலில்புலம்பெயர்தமிழர்களின்தலையீடு ஆபத்தானது என்கிற எச்சரிக்கை. இது ஒரு முக்கிய அக முரண்பாடு.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் முன்பாகவே, நல்லிணக்க முயற்சிகளில் புலம்பெயர் தமிழர்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்கிற பகிரங்க அழைப்பை விடுத்தார் வடமர்காண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திலும் அதன்பின்னரான அரசியல் போராட்டத்திலும் புலம்பெயர்தமிழர்களின்அரசியல் வகிபாகம்மிகமுக்கியமானது. ஆயுதப்போராட்டம்இடம்பெற்ற காலத்தில்அதன்பொருளாதாரமுதுகெலும்பாக, அதனைத்தாங்கி நின்ற சக்தியாகப்புலம்பெயர் தமிழ்ச்சமூகம் இருந்தது. தனிநாடு ஒன்றை அடைந்துவிட்டால் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் அறிவும் ஆற்றலும் வரப்பிரசாதமாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்புக்கூட விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்தது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்துதமிழர்கள்தோல்வி மனோபாவத்திற்குள் சிக்கித் தவித்த காலப்பகுதியில்கூட ஈழத் தமிழர்களின் குரலாக உலக அரங்கில் ஓங்கி ஒலித்தது புலம்பெயர் தமிழர்களின் குரல்தான். ஈழத் தமிழர்களின் கொழுகொம்பாக, அச்சாணியாக புலம்பெயர் தமிழர்கள் இருந்தார்கள் என்பதில் எவருக்கும் கேள்வியிருக்க முடியாது.

இருக்கும் கேள்வியெல்லாம், அதற்காக - ஈழத் தமிழர்களின் அரசியல் பலமாகப் புலம்பெயர்தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக - தாயகத் தமிழர்களின் வாழ்க்கையை அவர்கள் தீர்மானிக்க முடியுமா? இங்கிருப்பவர்களுக்காக வெளியே இருப்பவர்கள் முடிவெடுக்க முடியுமா? என்பதுதான்.

ரஜனியின் வருகை நிறுத்தப்பட்டதற்கான எதிர்ப்புப் போராட்டத்தின்மீது எழுந்தகட்டுக்கடங்காத கண்டனங்கள் இதனையே வெளிப்படுத்தி நிற்கின்றன. ஏனெனில் ரஜனியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர முயன்றது, புலம்பெயர் தமிழரும், முல்லைத்தீவின் மைந்தனுமான சுபாஸ்கரனின் 'லைகா' என்கிற படத் தயாரிப்பு நிறுவனம்தான்.

சுபாஸ்கரனின் ஞானம் அறக்கட்டளை வ்வுனியாவில் போரால் பாதிக்கப்பட்ட 150 பேருக்கு வீடுகளைக்கட்டிக்கொடுக்கிறது. அவற்றின் திறப்புகளைக் கொடுப்பதற்காக ரஜனி அந்த நிகழ்வுக்கு அழைத்து வரப்படவிருந்தார். தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பைத் தொடர்ந்து அந்தப்பயணத்தைரஜனி கைவிட்டார். இதற்கு எதிராகவே நல்லூரில் நேற்றுமுன்தினம் போராட்டம் இடம்பெற்றது. இதன்பின்னணியில் 'லைகா' இருந்தது என்கிறசந்தேகத்தின் அடிப்படையில் சமூக வலைத் தளங்களில் கட்டுக்கடங்காத எதிர்ப்புப் பதிவேற்றப்பட்டது.

புலத்தமிழர்களின் அரசியல் பங்கேற்பை வரவேற்கும், ஒருபடி மேலேபோய் மெச்சும் தரப்பினரே 'லைகா'வின் அரசியலைக் கடுமையாகச்சாடினார்கள். இது ஒருஅகமுரண்நிலையைக்காட்டுகிறது. புலம்பெயர்தமிழர்களின்அரசியல்பங்களிப்பு வேண்டும் என்றாலும், அவர்களின்பொருளாதாரப்பங்களிப்பு தேவையற்றது என்கிறவெளிப்பாடு இதில்தொனிக்கிறது. விடுதலைப்புலிகளின் மறைவுக்குப் பின்னர் இருந்தே இந்த விவாதம் உள்ளது என்றாலும், அதுதீவிரமானஒருகட்டத்தைஅடைந்திருப்பதையே இந்தச்சம்பவங்களும் வாதங்களும்காட்டுகின்றன. புலம்பெயர் தமிழர்களின் வகிபங்கு எப்படி அமையவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சந்தியில் நிற்கிறது ஈழத் தமிழ்ச் சமூகம்.

# அமைச்சரவையை மாற்றி அமைப்பதில் அரச தலைவர் மைத்திரிபால தீவிர கவனம்

## தலைமை அமைச்சர் ரணிலுடன் பல சுற்றுக்கள் ஆலோசனை

## புதியமுகங்களா? பழையவர்களுக்கே புதியபொறுப்புகளா?

## விவரம் விரைவில் தெரியவரும்

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

ரஷ்யாவுக்குச் சென்றுவிட்டு சனிக்கிழமை நாடுதிரும்பியுள்ள அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முதல் முக்கிய பணிகளில் ஒன்று, அமைச்சரவையை மாற்றி அமைப்பதாகவே இருக்கப் போகின்றது. ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொள்ளமுன்னரே பல தடவைகளில் அவர் இது குறித்து தலைமை தலைமைஅமைச்சருக்கு அப்பால் 27 அமைச்சர்கள் ஐ.தே.க. தரப்பில் அமைச்சரவையில் இருக்கிறார்கள். இவர்களில் செயற்றிறனற்றவர்கள், சர்ச்சைக்குரிய செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டுள்ளவர்கள் தொடர்பாக தலைமை அமைச்சரிடம் சிறிசேன கேள்வி எழுப்பியிருப்பதாகத் தெரிகின்றது. முதலில் தமது அமைச்சர்களில் மாற்றம் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்த தலைமை அமைச்சர், பின்னர் அதற்குச்சம்மதம்தெரிவித்திருப்பதாகத்தெரிய வந்துள்ளது.


இதேசமயம், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்தும் மைத்திரிபால சிறிசேன மதிப்பீடுகளைச்செய்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவர்களில் சிலரை மாற்றி அமைக்கத் தீர்மானித்திருக்கும் அரசதலைவர், சிறிய அமைச்சுக்களைக் கவனித்துவரும் சிலருக்கு அதிக பொறுப்புகளை வழங்கவும் தீர்மானித்திருக்கின்றார். அமைச்சர்களை மாற்றி அமைக்கும் அதேசமயம், தேர்தல்கால வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படாமலிருப்பவைகளை விரைந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளிலும் அரசதலைவர் இறங்குவதற்கு உத்தேசித்துள்ளார். அவ்வாறு நிறைவேற்றப்படாமல் இருப்பவைகளில் உயர் மட்ட கைலஞ்சம், ஊழல்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. ஏற்கனவே சில புலனாய்வுப் பிரிவுகள் மிக வேகமாகச் செயற்பட்டு முக்கிய கைதுகளைச்செய்திருப்பதுடன், அவைகளை வெளிப்படுத்தியுமுள்ளன. இவை பொதுவான அச்சு ஊடகங்களில் மட்டுமல்ல, சமூக வலைத்தளங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டுவருடகாலம் கடந்துவிட்டாலும் விசாரணைப் பொறிமுறை இன்னமும் துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. விசாரணைகளுக்குத்தான் கால அவகாசம் தேவைப்படுகிறது என்பதைவெளிப்படுத்துவதேஇதன் நோக்கமாகும். சில கூட்டுத்தாபனங்களினதும், சட்ட ரீதியிலான நிறுவனங்களினதும், தலைவர்களும் மாற்றப்படவிருப்பதாகத் தெரிகின்றது. புதிதாக நிறுவப்படவிருக்கும் அமைச்சரவை உறுப்பினர்களும் நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கும்படி அறிவுறுத்தப்படவிருக்கிறார்கள். குறிப்பாக எதிர்நோக்கப்படும் கடன் சுமையிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளில் வெளிநாட்டு மூலதனத்தின் இருப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக நிதிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியது முக்கியத்துவம் பெற்றுள்ளது. மூலதனக் கையிருப்பு 8.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இப்போது 5.2 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் இன்னமும் மூன்று மாதகாலத்துக்கே இறக்குமதிகள் சாத்தியமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

### அரசதலைவர் இல்லத்தில் முக்கிய ஆலோசனை

இந்த வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டியிருப்பதன் காரணமாகவே கடந்த வாரம் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தமது இல்லத்தில்



அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். ஐ.தே. கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகளுக்கான விடயங்களைத் தாம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தலைமை அமைச்சருக்குத் தெரிவித்துள்ள அரசதலைவர், ஆனால் மாற்றம் செய்யும் வகையில் அவர் இனங்கண்டுள்ள அமைச்சர்களின்விவரத்தைத்தமக்குத்தெரிவிக்குமாறு மாத்திரம் கோரியிருப்பதாகக்கூறப்படுகின்றது.



உயர்மட்டக்கூட்டம்ஒன்றைநடத்தியிருந்தார். மிக அவசரமான செயற்பாடுகள் ஒன்றையாவது மேற்கொண்டாக வேண்டும் என்றநிலையில் இது இடம் பெற்றிருந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இதில் கலந்து கொண்டிருந்தார். சுதந்திரக் கட்சியின் சார்பில் சரத் அமுனுகம, அனுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா மற்றும் மகிந்த சமரசிங்க முதலியவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். ஐ.தே.க சார்பில் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, அகிலவிராஜ் காரியவசம், தலதா அத்துக்கோரள மற்றும் கபிர் ஹாசிம் ஆகியவர்கள் காணப்பட்டார்கள். கப்பல்துறைமற்றும்துறைமுகங்கள் பதில் அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகமவும் கலந்து கொண்டிருந்தார்.

அன்றைய கூட்டத்தில் அம்பாந்தோட்டை நகரத் திட்டம் குறித்து ஆராயப்பட்டது. சிறப்புக் கடமைகளுக்காக அமைச்சர் சரத் அமுனுகமவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அமைச்சரவை அறிக்கையும் அவர்களால் பரிசீலிக்கப்பட்டது. அடுத்தசெவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த வாராந்திர அமைச்சர்கள் கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்றுதிங்கட்கிழமைஅறிவிக்கப்பட்டிருந்தது. மொஸ்கோவில் அரசதலைவர் சென்றிறங்கும்போது அங்கு அவரை வரவேற்பதற்காக முன் கூட்டியே அங்கு செல்லவிருந்த அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தமது அந்தப் பயணத்தைத் திட்டத்தை நிறுத்தியி ருந்தார். அதனால் அரசதலைவரின் பரிவாரங்களுடனேயே அவரும்பயணம்மேற்கொள்ளநேர்ந்தது. ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், மீன்பிடித்துறை அமைச்சருமான மகிந்த அமரவீர, அமெரிக்காவில் இருந்தார். குறித்ததிட்டமானது அடுத்தநாளே எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்டு விட வேண்டும்என்பதில் ஐ.தே.க. அமைச்சர்கள் அக்கறையாக இருந்தார்கள்.

இதில்தான் சீன நிறுவனத்திடமிருந்து 1.1 பில்லியன் அமெரிக்க டொலருக்கான நிதி கிடைப்பது தங்கியிருந்தது. கடன் சுமைகளில் ஒரு பகுதியையாகுதல் இதனால் சமாளித்து விடலாம் என்று கருதப்பட்டது. சலுகை ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களில் திருப்தி ஏற்பட்டதன் பேரில் சீன நிறுவனம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குத் தயாராக இருந்தது. அவசரம் காட்டப்பட்டதற்கான இன்னொரு காரணம் என்னவென்றால், இதில் சம்பந்தப்பட்டிருக்கும் சீன மேர்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங் நிறுவனமானது மார்ச்29 ஆம் திகதி தனது பங்குதாரர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை

> சலுகை ஒப்பந்தத்தில் காணப்படும் சில அம்சங்கள் குறித்துக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் கடும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினார்கள். இந்தத் திட் டம் குறித்து அவசரம் காட்டப்படுவதற்கு இப்பொழுது முகம் கொடுக்கவேண்டியிருக்கும் கடும் நிதி நெருக்கடிகளே காரணம் என்பது இந்தக் கூட்டத்தில் வெளிப்படை ஆயிற்று. நிதி ஆதாரங்கள் மிக அவசரமாகத் தேவைப்படுகின்றன. துறைமுகமற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜீண ரணதுங்கவும் அவரது சகோதரரான இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சஞ்சீவ ரணதுங்கவும் தற்போது நாட்டுக்கு வெளியில் இருக்கிறார்கள் என்பதை அரச தலைவர் சிறிசேன சுட்டிக் காட்டினார்.

ஹொங்கொங்கில் நடத்தவிருந்தமையாகும்.


சலுகைஒப்பந்தத்தில்காணப்படும்சில அம்சங்கள் குறித்துக் கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் கடும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினார்கள். இந்தத் திட்டம் குறித்து அவசரம் காட்டப்படுவதற்கு இப்பொழுது முகம் கொடுக்க வேண்டியிருக்கும்கடும்நிதிநெருக்கடிகளே காரணம் என்பது இந்தக் கூட்டத்தில் வெளிப்படை ஆயிற்று. நிதி ஆதாரங்கள் மிக அவசரமாகத் தேவைப்படுகின்றன. துறைமுகமற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுண ரணதுங்கவும்அவரதுசகோதரரான இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தலைவர் சஞ்சீவ ரணதுங்கவும் தற்போது நாட்டுக்கு வெளியில் இருக்கிறார்கள் என்பதை அரசதலைவர் சிறிசேன சுட்டிக் காட்டினார். அம்பாந்தோட்டைத் துறைமுக விடயம் தொடர்பான விவாதம் முடிவுற்றதும், அயலுறவுத்துறை அமைச்சர் சமரவீர, ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நடைபெற்றுவரும் விவாதங்கள் குறித்து விளக்கமொன்றைவழங்கினார்.

செவ்வாய்க்கிழமை அமைச்சர் சரத் அமுனுகம தாக்கல் செய்திருந்த அமைச்சரவை அறிக்கை, அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்டது. பல அமைச்சர்கள் தமது கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டனர். பலரும் பலவிதமானகருத்துக்களைமுன்வைத்தனர். கூட்டம் முடிந்த பின்னர் அமைச்சர் ஒருவர், மற்றொரு அமைச்சருடன் பின்வரும் விதத்தில் தமது கருத்தைப் பகிர்ந்து கொண்டார்.

திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்க தொழில் நிறுவனமொன்றுக்கு விற்பதற்கு அப்போதைய அரசதலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முடிவு செய்திருந்தமை, இந்திய தலைமை அமைச்சர் இந்திராகாந்திக்குப் பிடிக்கவில்லை. அதன் பின்னர், தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்திரா காந்தி ஆதரவு வழங்க ஆரம்பித்தார். அதன் மூலம்தான் குருதிக்களரிக்கு வழிவகுத்த பிரிவினைவாத தீவிரவாதம் தலைதூக்கியது. மற்றொரு மைச்சர், அயலிலுள்ள மாலைதீவு தமது தீவுகளில் ஒன்றைச் சவுதிஅரேபிய அரச குடும்பத்துக்கும், இன்னொருதீவை சீனாவுக்கும்விற்பதற்கு எத்தனித்தபோதுபொதுமக்கள்எதிர்ப்பு வலுவடைந்ததைச் சுட்டிக் காட்டினார். அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும், திட்டத்தை எப்படியும் முன்னெடுப்பது என்றுதீர்மானிக்கப்பட்டது.

அமைச்சரவை முடிவை அறிவித்து வெளியிடப்பட்ட அறிக்கையில், சட்டமா அதிபரினால் தெளிவுபடுத்தப்பட்டதன் பேரில் குறித்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அத்துடன் சிறப்புப் பணிகளுக்கான அமைச்சர் சரத் அமுனுகமவின் தலைமையில் ஒப்பந்தம் செயற்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்வதற்கென அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைத்துறைமுக அபிவிருத்திக்கென அமைச்சரவை உப குழு செயற்திட்டம் ஒன்றை வழங்குவதாக இருக்கும். அத்துடன் ஒப்பந்த அம்சங்களை எவ்வாறு சீன நிறுவனம் செயற்படுத்துகிறது என்பதையும் உப குழு கண்காணிக்கும். குழுவின் ஏனைய உறுப்பினர்கள் சுசில் பிரேமஜயந்த, அர்ஜுண ரணதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மலிக் சமரவிக்கிரம மற்றும் ரவிகருணாநாயக்க ஆகியோராவர். அமைச்சரவையில் இந்த ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தவரான சம்பிக்க ரணவக்க குறித்த உப குழுவிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக அரசதலைவருக்குக் கடிதம் எழுதியிருப்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்தில்; ஒப்பந்தத்தை மிகக் கவனமாக ஆராய்ந்து பார்க்கும்படி அமைச்சர்களை அரச தலைவர் சிறிசேன எச்சரித்திருந்தார். இருந்தபோதிலும்தனிப்பட்டமுறையில்பின்னர் அதற்கு ஆதரவு வழங்கியுள்ளார். இல்லையென்றால் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்க முடியாது என்று கூறியிருக்கிறார். ஆரம்பத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்கு ராஜபக்சவே அங்கீகாரம் அளித்திருந்தவர். அரசுக்குச் சொந்தமானசொத்துக்கள்விற்கப்படுவதைத் தாங்கள் எதிர்ப்பதாகக் கூறியுள்ள ராஜபக்ச, இதில் காணப்படும் அபாயங்களை வெளிப்படுத்தி மக்களை விழிப்புறச் செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.



# வாசகர் திருமுகம்

## நியாயப்படுத்த இயலாத விமலின் உணவு ஒறுப்புப் போராட்டம்

நாட்டு மக்களது பொது நலன் கருதித் தாம் முன்வைக்கும் கோரிக்கையையோ, கோரிக்கைகளையோ நிறைவேற்றுமாறு நாட்டின் அதிகாரத் தரப்பினிடம் கோரி தம்மைத் தாமே வருத்திக் கொள்ளும் சாத்வீக முறையிலான போராட்டமே உணவு ஒறுப்புப் போராட்டமென அடையாளப்படுத்தப்படும்.

இந்திய மக்களது விடிவுக்காக ஆனானப்பட்ட பிரிட்டிஸ் சாம்ராச்சியத்துக்கே சவால் விடுத்து அண்ணல் மகாத்மாகாந்தி பல சந்தர்ப்பங்களில் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டத்தின் முன்னால் எதுவுமே செய்ய இயலாது பிரிட்டிஸ் ஏகாதிபத்தியவாதிகள் நிலை குலைந்தமை வரலாற்றுப் பாடங்கள்.

உணவு ஒறுப்புப் போராட்டத்தின் பலத்தை அனுபவபூர்வமாக உணர்ந்த காந்திதேசம் அதற்கு உரிய கௌரவம் வழங்குமென்ற எதிர்பார்ப்புடன் ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டி தியாகி திலீபன் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டத்தை சிறிதேனும் கணக்கில் எடுக்காது கொச்சைப்படுத்திய காந்தி தேசத்தின் ஆட்சியாளர்களது பிடிவாதம் கடைசியில் திலீபனைத் தியாக தீபமாக ஆக்கிவைத்த அதே சமயம் உலக அரங்கில் காந்தி தேசத்துக்குப் பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தி வைத்தமை வரலாறு.

அதே பாணியில் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தாம் பிணையில் விடுவிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடந்த சில நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது, புனிதமான உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் அவரது வழமையான அரசியல் இலாபநோக்குச் செயற்பாடாகக் கருதத்தக்கது.

காணாமல் போன தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரி உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்த அந்தக் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளது உணர்வுகளுக்கே மதிப்பளிக்காத சிங்கள அரசு, விமல் வீரவன்சவினது அரசியல் நாடகத்தைக் கண்டு அஞ்சவோ மனம் இளகவோ போகப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

அதுவுமன்றி நீதிமன்றத்தால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவின் கோரிக்கை, சட்டதிட்டங்களுக்கு அமைவாக நீதிமன்றத்தினால் அல்லவா பரிசீலிக்கப்பட வேண்டும்?

அந்த வகையில் விமல் வீரவன்சவின் குறித்த உணவு ஒறுப்புப் போராட்டம் எந்த வகையிலும் நியாயப்படுத்த இயலாத ஒன்று என்பதே [illegible]ளிவான உண்மையாகும்.

*[illegible]ா. சிவ[illegible], சுன்னாகம்*

# இலக்கியத்தில் நயமாகும் தூதுப் பண்பு



இரா.நிஷாந்தன்

தமிழ் இலக்கியத்தில் எண்ணற்ற இரசனைகள், சிறப்புக்கள் என்பன நிறைந்து காணப்படுகின்றன. அத்தகைய இலக்கியங்களில் தூதுப் பண்பும் ஒரு முக்கிய சிறப்பம்ச மாக இடம்பெற்றுள்ளது.

96 வகையான சிற்றில்க்கி யங்களில் தூதுப் பிரபந்தம் அதாவது தூது இலக்கியம் ஒரு பிரிவாகக் காணப்படுகின்றது. இலக்கிய இரசனைக்கு தூது எனும் பண்பு அடித்தளமாக அமைகின்றது.

இலக்கியங்களில் பல வகையான தூதுக்கள் உள்ளன. அவை அரசியல் சார்ந்த தூதுகள், காதலுக்காக விடப்படும் தூதுகள் எனக் கருதப்படுகின்றன. குறித்த ஒரு செய்தியை ஒருவர் மற்றொருவருக்கு தெரியப்படுத்தும் பொருட்டு தூது அனுப்பப்படுகிறது. ஒரு தூது எவ்வாறு இருக்க வேண்டும், தூது உரைப்பவரின் தகுதிகள் என்பன பற்றி வள்ளுவர் ஓர் அதிகாரத்தையே திருக்குறளில் வைத்துள்ளார்.

குறிப்பாக அஃறிணைப் பொருள்களையே பெரும்பாலும் தூதுவிடும் பண்பாக அமைந்துள்ளதையும் காணலாம். தூதுக்கு எவற்றை அனுப்பலாம் என்பதை பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது.

இயல்புகின்ற காலத் தெகின
மயில் கிள்ளை
பயன் பெறுமே கம் பூவை பாங்கி
நயத்த குயில்
பேதை நெஞ்சம் தென்றல்
பிரமரம் ஈரைந்தும்
தூதுரைத்து வாங்கும் தொடை

அதாவது எகினம் எனப்படும் அன்னம், மயில், கிளி, மேகம், மைனா எனும் பூவை, கோழி, குயில் உள்ளம் தென்றல், பிரமரம் எனும் வண்டு என்றவாறு பத்தும் தூது அனுப்பப் பயன்படுபவை எனப்பாடல் கூறுகிறது. இவற்றில் தோழி, கிளி என்பவற்றைத் தவிர ஏனைய எட்டும் பேசக்கூடியவை அல்ல. கிளி கூட சொன்னதைத் திருப்பி அப்படியே சொல்லுமே தவிர ஒரு வார்த்தை கூடப் பேசத் தெரியாது.

## அங்கதன் தூது

இராமாயணத்தில் அங்கதன் தூது, மகாபாரத்தில் கிருஷ்ணன் தூது, மேலும் சஞ்சயன் தூது, கந்தபுராணத்தில் வீரபாகுதேவர் தூது என அரசியல் தூதுகள் பல. இவை போருக்கு முன்னர், போரா? சமாதானமா? எனும் நிலையறிய அனுப்பப்பட்ட தூதுக்கள். இராமன் இராவணனிடம் அங்கதனையும், தருமன் கண்ணனை துரியோதனனிடம், திருதராட்டினன், சஞ்சயனை பாண்டவரிடம். முருகன் சூரனிடம் வீரபாகு தேவரையம் தூதுவர்களாக அனுப்புகின்றனர். ஆனால் இவையனைத்தும் இறுதியில் தோல்வியில் முடிகின்றன.

ஆனால் இவற்றைவிட காதலுக்காக விடப்பட்ட தூதுக்களே எம் இலக்கியங்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. காதலன் ஒருவன் தன் காதலிக்கோ அல்லது காதலி ஒருத்தி தன் காதலனுக்கோ தன் மனநிலை பற்றி தூது விடப்பட்டுள்ள காட்சிகளே அதிகம். ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் இரண்டு தூதுக்கள். ஒன்று குயில் விடு தூது மற்றது மேக விடு தூது. இரண்டும் கண்ணனிடம் அனுப்பப்பட்டவை. தன் காதலை, தான் கண்ணன் மீது கொண்ட அன்பை, அவனைபிரிந்திருப்பதன்வேதனையை இந்த இரண்டின் வாயிலாக உரைக்கின்றாள் ஆண்டாள்.

கண்ணன் மீது அளவு கடந்த காதல் கொண்ட ஆண்டாள் தன் உடல் மெலிந்து காதல் நோயால் வருந்துகிறாள். இந்த நிலையில் வானில் செல்லும் மேகங்களை அழைத்து தன் நிலையை கண்ணனிடம் உரைக்குமாறு வேண்டுகின்றாள். மேகத்திடம் குளிர் நீர் கொண்டு மேலே விளங்குகின்ற முகில்களே, நிலத்தை கேட்டுப் பெற்றுக் கொண்டவன் இருக்கின்றேன் திருமலையில் பொழியும் கொண்டலே, நான் கொசுக்கள் உண்ட விளாம்பழம் போல் உடல் மெலியும் படி என்னுள்ளே புகுந்து என் நிறையை அழித்த நாராயணனுக்கு என் காதல் துன்பத்தை தெரிவியுங்கள்.

சலங்கொண்டு கிளர்ந்த எழுந்த
தன் முகில்காள் மாவலியை
நிலங் கொண்டான் வேங்கடத்தே
நிரந்து ஏறிப்பொழிவீர்காள்
உலங்கு உண்ட விளங்கனி போல்
உள் மெலியப் புகுந்து என்னை
நலங் கொண்ட நாரணற்கு என்
நடலை நோய் செப்புமினே

எனும் பாடல் அந்த நிலையைத் தெளிவுறுத்துகிறது. மேலும் திருமலையில் தேன் நிறைந்த மலர்கள் சிதறும்படி திரள் திரளாக வானில் ஏறி மழை பொழியும் முகில்களே. விண்ணில் வளர்ந்து எழுகின்றீர் கூரிய நகத்தினால் இரணியன் உடலை கிழித்துப் போட்டவன் என்னிடம் கொள்ளை கொண்ட கைவளையல்களைத் திருப்பி தருவதானால் என் நிலையை அவனுக்கு சொல்லுங்கள்.

மேகத்திடம் மட்டுமன்றி குயிலிடமும் தன் நிலையை தன் காதல் துன்பத்தை கண்ணனிடம் உரைக்குமாறு வேண்டினாள் ஆண்டாள். குயிலே கண்ணனை நினைத்து என் எலும்புகளும் உருகிப் போயின. இணை வேல் கண்களும் இமை மூடவில்லை. நெடுங்காலமாகப் பிரிவின் துன்பக்கடலிலே அழுந்தி அதில் இருந்து மீள வைகுந்தன் என்ற தோணியைப் பெறாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறேன்.

காதலர்கள் பிரிவுத்துயரை நீயும்
அறிவாயன்றோ?
பொன் மேனியையுடைய கருடக்
கொடியையுடைய கண்ணனை
இங்கே வரும்படி கூவுவாயாக
அன்பு உடையாரை பிரிவு உறு நோயது
நீயும் அறுதி குயிலே பொன் புரை மேனிக்
கருளக் கொடி உடைப் புண்ணியனே
வரக்கூவாய்

என ஆண்டாள் குயிலிடம் வேண்டுகிறாள்.

இது மட்டுமன்றி முன்பு மூன்று உலகங்களையும் அளந்து கொண்டவனை விரும்பி நான் ஆசைப்பட அதற்கு நான் துன்பப்பட்டிருக்கின்ற நேரத்தில் தென்றல் காற்றும், முழுநிலவும் என்னை உள்ளே பிளந்து புகுந்து துன்புறுத்தும் நியாயத்தை அறியவில்லை.

ஓ குயிலே! என்னுடைய நலத்தை விரும்பும் நீயும் இந்தச் சோலையிலே இருந்து ஏற்கனவே மெலிந்திருக்கின்ற என்னை துன்பப்படுத்தாமல் இன்றே நாராயணன் வரும்படி நீ கூவாமல் போனால் இந்தச் சோலையிலிருந்து உன்னைத் துரத்தி விடுவேன் என ஆண்டாள் தன் மன வேதனையை உரைக்கின்றாள். நந்திக்கலம்பகம் எனும் இலக்கியத்தில் தூது சிறப்பான ஓர் அங்கமாக விளங்குகிறது. காதலுக்காக கிளி, மேகம் என்பன தூது விடப்பட்டுள்ளதை காட்டுகிறது.

## நந்திக்கலம்பகம்

நந்திவர்மன் மீது அன்பு செலுத்துகின்றாள் மங்கையொருத்தி. அந்த அன்பு காலப்போக்கில் அதீத காதலாக மாறியது. தன் காதலை அது தரும் துன்பத்தை காதலன் நந்திவர்மனிடம் கிளியை அழைத்துத் தூது விடுகிறாள்.

பொழுது கண்(டு) ஆய் அதிர்கின்றது
போக நம் பொய்யற்கு (எ)ன்றும்
தொழுது கண்டேன் என்று சொல்லு
கண்டாய் தொல்லை நூல் வரம்பு
முழுது கண்டான் நந்திமல்லை அம்
கானல் முதல்வனுக்குப்
பழுது கண்டாய் இதைப் போய்ப் பகர்
வாய் சிறைப் பைங்குருகே

தலைவியானவள் மாலைப்பொழுதில் கண்டு மயங்குகிறாள். அப்போது ஒரு கிளியைக் காண்கிறாள் அந்தக் கிளியிடம், "கிளியே சூரியன் மறைந்து விட்டது நான் நந்திவர்மனிடம் காதல் கொண்டதை என் தாய் அறிந்து கொண்டாள். அந்த நந்திவர்மன் பழமையான நூல்களைக் கற்றவன். அழகிய கடல் துறைக்குத் தலைவன். ஆனால் அவன் பொய் பேசுகின்றவன். ஏனெனில் என்னிடம் வருவேன் எனக்கூறியவன். இன்னும் வரவில்லை எனவே எப்போதும் அவனையே எண்ணி வருந்திக் கொண்டிருக்கும் என் நிலையை அவனிடம் கூறுவாயாக என கிளியிடம் கூறுகிறாள்.

(25 ஆம் பக்கம் பார்க்க)



காதலுக்காக விடப்பட்ட தூதுக்களே எம் இலக்கியங்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. காதலன் ஒருவன் தன் காதலிக்கோ அல்லது காதலி ஒருத்தி தன் காதலனுக்கோ தன் மனநிலை பற்றி தூது விடப்பட்டுள்ள காட்சிகளே அதிகம்.









## 'திருமுறைநெறிச்செல்வர்' பட்டமளிப்பு

திருக்கயிலாயபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனசைவசித்தாந்த – சைவத்திரு முறை நேர்முகப் பயிற்சி மையத்தின் இணுவில் கிளை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்ட 'திருமுறை நெறிச்செல்வர்' பட்டமளிப்பும், `சைவ நீதி' மற்றும் `உண்மை விளக்கக்கதவம்'நூல்கள்அறிமுகவிழாகடந்தஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்றது. இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை கலாசார மண்டபத்தில் பேராசிரியர்க.தேவராசாதலைமையில்இடம்பெற்றஇந்நிகழ்வில்யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நல்லைக்குருமணிஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிகஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பித்த இந்நிகழ்வில், சைவ சித்தாந்த - சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர். பயிற்சி மைய இயக்குநர் சைவப்புலவர் 'சித்தாந்தச்செம்மணி'செல்லையாநவநீதகுமார்பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

'சைவநீதி' (காசி யாத்திரைச் சிறப்பு மலர்) மற்றும் `உண்மை விளக்கக் கதவம்' ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. இந்நூல்களின் அறிமுக உரையை முறையே விரிவுரையாளர் பாலசண்முகனும், சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும் வழங்கினர். (8)




# நயினை மண்ணோடு ஒன்றிய அறச்சிந்தனைச் செயலோன் 90ஆவது அகவையில் அருளோடு நிமிர்ந்து நிற்கின்றான்

**நா.கோபாலகிருஷ்ணன்**

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே" என்ற பாரதியின் உணர்ச்சிக் கவிக்கு உயிர் கொடுத்து இப்படித்தான் மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டும் என்ற உயரிய அறத் தொண்டை, ஆத்மீகத் தொண்டை, தன்னைத்தந்தநயினைமண்ணில்பிறந்தநாள்முதல் 90ஆவது அகவை வரை அக்கரையில் கால் பதிக்காது விக்கினேஸ்வரா வர்த்தகனாய், நயினை செம்மணத்தம்புலம்வீரகத்திவிநாயகனின்அறங்காவலர்சபைத்தலைவனாய், அகில உலக நாயகியாம் அன்னை நாகபூசணியின் அன்னதான அமுதசுரபியின் ஆரம்ப கர்த்தாக்களில்ஒருவனாய், இன்றையஅனைத்துத் தொண்டர்களுக்கும் முதிர்ந்த முதியவனாய் நிமிர்ந்து நின்று வழிகாட்டி வழிநடத்தும்பேரறிவாளன் நயினைநாகமுத்து காரராளபிள்ளை தனது 90ஆவது பிறந்த நாளை 18.03.2017 சனிக்கிழமை நயினைத்தாயின்மண்ணில் கொண்டாடுவது பூர்வீகத் தொண்டின் மகத்துவமேயன்றி வேறில்லை. அருள் தொர்ண்டின் வெளிப்பாடு.

நாகமுத்துத்தயலம்மைதம்பதிகளின்புதல்வர்களில்கடையவனாய்1927.03.18ஆம் திகதிநயினாதீவில்பிறந்து நயினைகணேசாவில் கல்வி பயின்று விக்கினேஸ்வரா வர்த்தகனாய் வடிவாம்பிகை என்ற நல்லாளைக்கரம்பிடித்து நல்மக்கள், மருமக்கள், பேரர், பேர்த்திகள் என சுற்றம் சூழ வாழ்வாங்குவாழ்கின்றஒருவாழ்வுஎப்போமுடிந்த காரியம் என்று சிவயோக சுவாமிகளுக்கு செல்லப்பா சுவாமிகள் உபதேசம் செய்தவாறு "எப்பவோ முடிந்த காரியம்."

"தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே" என்றவாறு ஊர் மக்களோடு வேற்றுமை பாராது ஒன்றி வாழ்கின்ற வாழ்வு அனைவரையும் தன்னுறவாக அன்பால் அரவணைத்துவாழ்கின்றவாழ்வு. இல்வாழ்வான் என்பான் அனைத்து மக்களையும் தன்னுறவாக மதித்து அரவணைத்து வாழ்பவன் இல்லறத்தைநல்லறமாகமாற்றிவிடுகிறான்.

து ற

வறத்தான், சந்நியாசிகள், சாதுக்கள் அனைவரையும்அரவணைத்துஉற்றதுணையாக இல்லறத்தான் வாழ்கின்றான் என்ற வள்ளுவன் குறள்களின் உட் பொருளை தன் வாழ்வில்வெளிப்படுத்திவாழ்கின்ற, வாழ்வாங்கு வாழ்கின்ற ஒரு பெருந்தகையாக நயினை மண்ணில் வாழ்கின்ற பெருந்தொண்டர் நா.காரராளபிள்ளை 90 ஆவது வயதிலும் நெற்றியில் மூன்று திருநீற்றுக் குறியுடன் முகத்தில் அன்பும் அருளும் நிறைந்த புன் சிரிப்பு கூப்பிய கரம் நிமிர்ந்த நடை சைவத் தமிழனின் சால்வை. நயினை மண்ணில் அன்று வாழ்ந்த பூர்வீக குடிமக்கள் எப்படி நயினை மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதற்கு இன்றைய இளஞ் சந்ததியினருக்கு தனது நெற்றியில் திருநீற்றின் ஒளிவிளங்க பவனி வரும் காரராளபிள்ளையின் அருள் தோற்றம் சான்றாக அமைகின்றது. எமது மூதாதையரின் வழிகாட்டல்.

இன்புறும் எந்தை இணை அடி ஏத்துவார் துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே என்ற திருஞானசம்பந்தர் சுவாமிகளின்திருவாக்கிற்கமையசெம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் திருத்தொண்டனாய் என்றும் திகழப் பிரார்த்திப்போமாக.



சிறிலங்கா புத்தகசாலையின் 80ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கலாநிதி பா.தனபாலன் எழுதிய "பல் மட்டப் பரிகாரக் கற்பித்தல்" கல்வியியல் நூல் அண்மையில் (05.03.2017) யாழ்ப்பாணம் சிறிலங்கா புத்தகசாலை வளாகத்தில் வெளியிடப்பட்டது. இந்த நூலின் முதற் பிரதியை புத்தகசாலை உரிமையாளர் கந்தசாமி கஜேந்திரன் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (29)

LG
Life's Good

அறிவித்தல்



எச்சரிக்கையாக இருங்கள்!
LG வழங்கும் செய்தி

**ஆன்லைன் வாயிலாக மற்றும் ஏனைய இடங்களில் வளிச்சீராக்கியை வாங்கும் போது எச்சரிக்கையாக இருக்கவும். வளிச்சீராக்கியின் கண்டென்சர் கொப்பர் அல்லது அலுமினியம் என்பதனை உறுதிசெய்திடவும்.**

குறைந்த ஈரப்பதமுடைய நாடுகளுக்கு அலுமினியம் கண்டென்சர்களைக் கொண்ட LG வளிச்சீராக்கிகளே மிகவும் பொருந்தும். ஆனால் இலங்கையின் காலநிலைகள் அதிக உப்பும், அதிக ஈரப்பதமும் கொண்டவையாகும். அதனால் இலங்கை காலநிலையில் அலுமினியம் கண்டென்சர்கள் குறுகிய காலத்தில் மீளமைக்க முடியாத வகையில் விரைந்தழிந்து போகின்றன.

உள்நாட்டு சந்தைகளில் அதிக விலைகளுக்கு கிடைக்கும் போலி உதிரிப்பாகங்களை மாற்றீடு செய்வதால் உங்கள் வளிச்சீராக்கியின் செயல்திறன் முடக்கப்படுகின்றது.

இலங்கையின் காலநிலைகளுக்கு ஏற்றவகையில் நீடித்துழைக்கும் கொப்பர் கண்டென்சர்களைக் கொண்ட அசல் LG வளிச்சீராக்கிகளை இலங்கையில் LG வளிச்சீராக்கிகளுக்கான அங்கீகாரம் கொண்ட ஒரேயொரு ஏக முகவரான அபான்ஸில் மட்டுமே உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். LG வளிச்சீராக்கிகளுக்கு தேவையான PCB, தெர்மோஸ்டாட்ஸ் மற்றும் கண்டென்சர் உள்ளிட்ட அசல் உதிரிப்பாகங்கள் அபான்ஸில் மட்டுமே கிடைக்கின்றது.

அபான்ஸ் காட்சியறைகளில் அல்லது அபான்ஸ் நிறுவனத்தின் அதிகாரபூர்வ இணையதளமான www.buyabans.com தவிர்ந்த வேறு இடங்களில் கொள்வனவு செய்யும் LG வளிச்சீராக்கிகளுக்கான பழுதுபார்த்தல் மற்றும் கண்டென்சர் மாற்றீடுகளுக்கான பொறுப்பை அபான்ஸ் ஏற்காது.

LG இலெக்ட்ரோனிக். Inc
தென்கொரியா




## கண்டி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா



கண்டித் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா புஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பி.எஸ். சதீஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கண்டி இந்திய உதவி உயர் ஸ்தானிகர் இராதா வெங்கட்ராமனும், சிறப்பு விருந்தினர்களாக மத்திய மாகாணக் கல்வி உதவி செயலாளர் உட்பட கல்வி அதிகாரிகள், கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களும் மற்றும் பெரும் திரளான மாணவர்கள், பெற்றோர்கள், சங்கத்தின் உறுப்பினர்கள், கலந்து கொண்டார்கள். நிகழ்வில் கலாசார ஊர்வலம், இயல் அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்கு, விவாத அரங்கு போன்றன நடைபெற்றதுடன் பாரதியாரின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தல், அதிதிகளின் உரைகள் என்பன இடம்பெற்றன. (10)















## துரைவி 86 ஆவது பிறந்த தின நினைவுப் பேருரையும் விருது வழங்கலும்

துரைவி 86ஆவது பிறந்த தின நினைவுப்பேருரையும் விருது வழங்கலும் விழா கடந்த 04 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. தெளிவத்தை ஜோசப்பின் தலைமையில் நடைபெற்ற, இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான திரு மல்லியப்புசந்தி திலகர் "சமகால அரசியல் குரலாக மலையக இலக்கியம்" எனும் தலைப்பில் துரைவி நினைவுப் பேருரை நிகழ்த்தினார். வரவேற்புரையையும் நிகழ்ச்சித் தொகுப்பையும் மேமன்கவி வழங்கினார். 2016 ஆம் ஆண்டுக்கான மொழிபெயர்ப்பு நூலுக்கான துரைவி விருது, அல்லாமா இக்பாலின் காரவான் கீதங்கள் கவிதைத் தொகுப்பை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளரும் கவிஞருமான பண்ணாமத்துக் கவிராயர் அவர்கள் தலைவர் தெளிவத்தை ஜோசப்பிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கடந்த ஆண்டுக்கான ஆய்வு நூலுக்கான துரைவி விருதை பேராதனைப் பலைகலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன் தனது "திரிலிருந்து தெரிதல்-பண்பாட்டு உரையாடல்" எனும் நூலுக்கு இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். மறைந்த கல்வயல் வே.குமாராசாமி, மற்றும் எழுத்தாளர் பிபிலை ஜெயபாலன், தமிழக பத்திரிகையாளர் சோ. இராமசாமி ஆகியோருக்கு மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வுக்கான நன்றியுரையை ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் நிகழ்த்தினார்.

# தமிழ்ப் புலவர்களின் பாராட்டுக்கவிகள்



இரா. நிஷாந்தன்

தமிழ்புலவர்களின்பாடல்களில் பல அர்த்தங்கள் பொதிந்திருக்கும். அவர்கள் தமிழோடு வாழ்ந்தவர்கள். அவர்கள் வெறுமனேபுகழுக்காகவோ,பொன்னுக்காவோ பாடல்களை பாடவில்லை. மேலும் மன்னர்களை மட்டும் தம் பாடல்களில்பாடவில்லை. சாதாரண மக்களையும் தம் கவிகளால் புகழ்ந்து பாடியுள்ளனர். சிறிய உதவி செய்தாலும், எளிமையான உணவை அளித்தாலும் அதில் மனநிறைவு கண்டு மனம் நெகிழ்ந்து அவர்களைப் பாராட்டிப் பாடியுள்ளனர்.

ஸ்ரீராமன் எனும் சலவைத் தொழிலாளி ஒரு முறை தன்னிடம் பிறர் கொடுத்த ஆடைகளை மிக அருமையாய் பளிச்சிடும்வெண்மைநிறமுடையதாய்வெளுத்துக் கொடுத்தான். அதைப் பார்த்த ஓர் புலவர் அவனது நேர்த்தியான தொழில் திறனைக்கொஞ்சம்அதிகஉயர்வுநவிற்சியுடன் கூடிய ஓர் கவிதையில் வெளிப்படுத்தினார்.

அவ்வாறு அவ் சலவைத் தொழிலாளி வெளுத்த ஆடையைப் பார்த்த சிவபெருமான் உடனே தன் தலையை பார்த்தார். காரணம் தன் தலையில் உள்ள பிறைச் சந்திரன்உள்ளதாஎனஉறுதிப்படுத்தவே. ஏனெனில் அவ் ஆடையின் சலவை வெண்மை பிறைச்சந்திரன் போன்று இருந்ததாம்.

மேலும்பிரம்மதேவர்தம்மனைவிசரஸ்வதி தேவியை நோக்கினார். சரஸ்வதி வெள்ளைச் சேலை அணிந்திருப்பவள். அது மட்டுமன்றி ஸ்படிகம் போன்று வெள்ளைநிறம்படைத்தவள்.ஆகையால் எது அதிக வெண்மை கொண்டது என காணவேபிரம்மதேவர்தன் இல்லாளை நோக்கினார்.

**சலவைத்தொழிலாளிக்குவணக்கம்**

அடுத்து சிவந்த அழகிய கண்களைக் கொண்ட திருமாலும் ஸ்ரீராமன் எனும் சலவைத்தொழிலாளியின்சலவையைக் கண்டதும் உடன் தன் கையிலிருந்த வெண்சங்கினைநோக்கினார். காரணம் அவ் இரண்டில் எது வெண்மையை அதிகம்கொண்டுள்ளதுஎனக்காண்பதற்கே. இப்படி மூம்மூர்த்திகள் மூவரும் வியக்கும் படி மலை போன்ற தோள்களை கொண்ட சலவைத் தொழிலாளி ஸ்ரீராமன் சலவையின் நேர்த்தி இருந்தது.

சிரம் பார்த்தான் ஈசன்
அயன் தேவிதனைப் பார்த்தான்
கரம் பார்த்தான் செங்கமலக் கண்ணன்
உரம் சேர் மலை வெளுத்த திண்புயத்து
வண்ணான் சீராமன் கலை வெளுத்த
நேர்த்தி தனைக் கண்டு.

இது போன்று மற்றுமொரு சாதாரண தொழிலாளி ஒருவன் மற்றுமொரு புலவரின் பாராட்டுதலைப் பெறுகின்றான். மாமூண்டூர் எனும் ஊரில் வாழ்ந்த சிங்கன்எனும்கொல்லன்தன்உலைக்களத்தில் அற்புதமான பொருள்களை வடிவமைப்பதில் சாமர்த்தியவான். அவ்வாறு அவன் ஒரு முறை அழகிய எழுத்தாணி ஒன்றை ஒரு புலவருக்கு செய்து கொடுத்தானாம். அதன்நேர்த்தியைக்கண்டதும் அக் கொல்லனை பாராட்டி ஒரு கவிதை பாடினார் அக் கவி. பாராட்டு கொஞ்சம் அதிகரித்த உயர்ச்சியே.

அக் கொல்லனின் திறனைக் கண்டு மும்மூர்த்திகள் உட்பட கடவுள்கள் எல்லோரும் அவன் உலைக்களத்திற்கு வந்து காத்திருந்தனராம். ஏன் தெரியுமா?

முதலில் மகாவிஷ்ணு அங்கு வந்திருக்கிறார். காரணம் அவரது கையில் உள்ள சுதர்சனம்எனும்சக்கரம்பலயுத்தங்களில் அசுரர்களை வேரறுத்தமையால் அதன் கூர்மை தேய்ந்து போய்விட்டதாம். அடுத்தயுத்தம்ஒன்றுவருவதற்குள்புதிய சக்கரம் ஒன்று செய்தாக வேண்டும். எனவே நல்ல வலுவான இரும்பில் ஒரு சக்கரம் செய்து பெற்றுச் செல்வதற்காக அவர் அச்சிங்கனின் உலைக்களத்திற்கு வந்திருந்தாராம்.

அடுத்து பிரம்மதேவர் அங்கு வருகின்றார். அவர் வரக் காரணம். உலகில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் தலையெழுத்தை எழுதி எழுதி அவரது எழுத்தாணி தேய்ந்து போய்விட்டதாம். இனிபிறப்பவர்களின்தலைவிதியைஎழுதுவதற்கு புதிய எழுத்தாணி தேவைப்படவே உடனே அதற்கு தகுந்த இடம் இதுவே என நான்முகன் அங்கு வந்தராம்.

அச் சமயத்தின் கோழிக் கொடியை உடைய முருகப்பெருமானும் அவ் உலைக்களத்திற்குவந்தாராம். காரணம் தன் கையில் உள்ள வேல் சூரனின் வலிமையான மார்பை பிளந்தமையால் அதன் கூர் மழுங்கி விட்டதாம். எனவே கூரியவேலாயுதம்ஒன்றைசெய்து பெறுவதற்கு அங்கு கந்தனும் வந்தான்.

அச்சமயம் கங்கையை தலையில் சூடிய சிவபெருமானும் அங்கு வந்து சேர்ந்தாராம். தனக்கு ஓர் மழுவாயுதம் தேவைப்படுவதால் அதனை சிங்கனின் கரங்களால் செய்து கொள்ள அங்கு வந்தாராம் ஈசன்.

ஆழியான் ஆழி என்பான் அயன் எழுத்
தாணி என்பார் கோழியான் குன்றெறிய
வேல் என்பான்
பூழியான் அருங்கை மழு என்பான்
அருள் பெரிய மாமண்டூர்ச் சிங்கன்
உலைக் களத்தில் சென்று.

இவ்வாறு தெய்வங்கள் எல்லாம் தாமே நேரில் வந்து தமக்குரிய ஆயுதங்களை செய்யச் சொல்கின்றனர் எனில் சிங்கனின் தொழில்திறன் எவ்வளவு உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

**ஔவையாரின் பசி**

ஔவையார் ஒரு முறை பசியோடு ஓர் குடிசையில்நுழைந்தார். அக்குடிசைபாரி மன்னனின் பிள்ளைகளான அங்கவை, சங்கவைவசிக்கின்றகுடிசை. தந்தையை இழந்தமையால் அவர்கள் மிகுந்த வறுமையில்அக்குடிசையில்வாழ்கின்றனர். தந்தையின் நண்பரான ஔவையைக் கண்டதும் அவர்களுக்கு எல்லையற்ற சந்தோசம். உடனே அவருக்கு விருந்தளிக்க விருப்பம் கொண்டு தமக்காக சமைத்த எளிய உணவை அன்போடு ஔவையாருக்கு அளிக்கின்றனர். அவ் உணவைஉண்டஔவைக்குஅமுதமாகப் பட்டது அது. வயிறும் மனமும் நிறைவடைய பாடல் பாடுகிறார்.

வெய்தாய் நறுவிதாய் வேணளவும் தின்
பதாய்
நெய்தான்அளாவிநிறையிட்டுப்பொய்யே
அடகுஎன்றுசொல்லிஅமுதத்தைஇட்டார்
கடகம் செறியாதோ கைக்கு.

அடடா, என்ன அருமையான உணவு. சூடாக, வேண்டிய வரைக்கும் உண்ணும்படியாகஅதிகநெய்யைவிட்டுகீரை என்று பொய் சொல்லி விட்டு அமுதத்தை அல்லவா உணவாக படைத்திருக்கின்றார்கள், இவ்வாறு உணவு சமைத்த கைகளுக்குஇரத்தினவளையல்கள்அல்லவா செய்து போட வேண்டும் எனப்பாடினார்.

இன்னொரு முறை ஔவையார் புல்வேளூர் எனும் ஊரில் தன் எனும் நாமம் படைத்த ஒருவனின் இல்லத்திற்கு சென்றார். அப்போது அவருடைய பசிக்கு உணவு அளிக்கின்றான் அவன். வரகு அரசியைக் கொண்டு சமைத்த சோறு, கத்தரிக்காய் பொரியல், முரமுரவென புளித்த மோர், இது தான் ஔவைக்கு அளிக்கப்பட்ட உணவு. ஆனால் அதன் சுவைகவிஞருக்குஎல்லாஉலகங்களையும்கொடுத்தாலும்ஈடாகாதுஎனும்எண்ணம் உள்ளத்தில் உதிக்க அதை அப்படியே பாடலாக பாடினார்.

**காளமேகத்துக்கு விருந்து**

காளமேகப்புலவருக்கு தினமும் விருந்து அளித்துமகிழ்ச்சிகொள்பவள்குப்பியாச்சி எனும் கிழவி. அவ்வாறு அவளின் விருந்துஉபசரிப்பைஒருபாடலாகபோற்றிப்பாடுகின்றார் கவி காளமேகம்.

சோற்றை அரசிலைமேல் தூவி வழுது
ணங்காய்க்
கீற்றைஅதன்மேல்கிடத்தியே-ஆற்றிமிக
அப்பச்சிகண்ணேஅரசேஅருந்தென்பன்
குப்பச்சி ஆயி குணம்!'

இவ்வாறு அக் கிழவியைப் பாராட்டிப் பாடியகாளமேகப்புலவர்மற்றொருமுறை ஒரு பெண்ணிடம் அருந்துவதற்கு மோர் கேட்ட போது அதிக நீர் கலந்து மோரைக் கொடுத்த அவ் இடைச்சியை புகழ்ந்தும், இகழ்ந்தும் தம் பாடல் ஒன்றில் பாடினார். வானில் மேகமாக இருந்து மண்ணில் நீராகக் திகழ்ந்து இடைச்சியர் கைப்பட்டதும் அதே நீர் பெயர் மாறி மோர் என அழைக்கப்படுகிறதாம். இப்படி மூன்று பெயர்களையும் பெற்ற பெருமைக்கு இடைச்சி அல்லவா காரணம் எனப் பாடினார் காளமேகம்.

இவ்வாறு தமிழ் செய்த புலவர்கள் தம் பாடல்களில்மற்றவர்களைஅதுவும்சாதாரண மக்களை பாராட்டிப் பாடியுள்ளமை அப்புலவர்கள் இலக்கியங்களில்இன்றும் சிறப்பான இடம் பெறுவதற்கு வழிவகுத்துள்ளன.




## உலக சாதனை முயற்சி நூல் வெளியீட்டு விழா

கடந்த சனிக்கிழமை காரைநகர். கோவளம் ஸ்ரீ புகலி முருகன் ஆலய வளாகத்தில், மரங்கள் நிறைந்த தோப்பில், 'உலக சாதனை முயற்சி' நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

18 ' உயரத்தில் தடிகள், தென்னங் குற்றிகள், பலகைகள், பைப்புகளால் ஆக்கப்பட்ட விழா மேடையில். புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் தி. தவரத்தினத்தின் 'உலக சாதனை முயற்சி' நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது. இயற்கையான வனச்சூழலில் காரை மண் [illegible] டுத்த புதல்வன், தமிழ் அறிஞர், தமிழருவி சிவகுமாரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சாதனை முயற்சியில் நானும் விருந்தினராக கலந்து கொண்டது [illegible] வைத் தருகிறது. முதன்மை விருந்தினராக நம் காரை [illegible] பிரதேச செயலரும், சிறப்புவிருந்தினராக [illegible] பிலனும்கலந்து சிறப்பித்தனர். அந்த உயரத்தில் மேடையில் 16 பேர் இருந்தோம். ஆரம்பத்தில் அச்சம் அ[illegible] மும் இருந்தது. பிறகு மிகவும் இயல்பானோம். [illegible] மகிழ்ச்சி, உலக சாதனை முயற்சி வெற்றிபெற ம[illegible] வாழ்த்துகிறேன்.

ஆ. [illegible] ாகலிங்கம்
அதிபர், யா/ பாலாவோடை [illegible] மி' [illegible] .பாடசாலை



கே.எஸ்.சிவஞானராஜா

# கவலையும் கண்ணீரும் வாழ்க்கையல்ல எல்லோரும் இசைக்கருவிகளே

இலங்கையில் 1960 ஆம் ஆண்டுதொடக்கம்1980ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலே நுண்கலைகள் உன்னதநிலையைஎட்டியிருந்தனஎன்று கூறினால் அதில் தவறில்லை என்பது எனது கருத்தாகும். காரணம் அந்தக் காலப்பகுதியில் எங்கு பார்த்தாலும் ஏதோ ஒருகலைநிகழ்வுநடந்துகொண்டேஇருக்கும். அதில் கர்நாடக சங்கீதக் கச்சேரி, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம், கூத்து, போர்த்தேங்காய், அடி சவாரி, கரகம், காவடி, அரங்கேற்றம், கும்மி ,கோலாட்டம், நாட்டுப்பாடல் ,தவில், நாதஸ்வரக்கச்சேரி, சின்னமேளம், வாணவேடிக்கை, பட்டம் விடுதல் போன்ற இன்னோரன்ன கலைச்செயற்பாடுகளில்கிராமங்கள்ஊறியிருந்தன. கவலையோ, கண்ணீரோ, கடினமோ மக்களை வாட்டவுமில்லை, வருத்தவுமில்லை. அடுத்து வந்த முப்பது வருட காலங்கள் நாட்டில் ஏதோ அசாதாரண சூழ்நிலைஏற்பட்டதன்விளைவாகக் கலைகளின் எதிர்பார்த்த அபார வளர்ச்சி எட்டப்படவில்லை. மாலை ஆறுமணியுடன் ஊர்கள் அடங்கியமையால் கலைகளுக்கான வாய்ப்பு வசதிகள் அற்றுப்போயின என்று துணிந்து கூறலாம். அன்றைய பொழுதில் மாலை வேளைகளில் ஒவ்வொரு பிரதேசங்களில் இசை விழாக்கள் ஒவ்வொரு ஊர்களையும் அழைத்து மகிமைபெறச்செய்தன. மிகவும் பிரபல்யமான இசைக் கலைஞர்களைக் கரங்குவித்து வரவழைத்து மேடையில் கௌரவித்துஆறஅமரஇருந்துஇசையைஆசை தீர அனுபவித்தார்கள். கவலைகள் பறந்தன. கடுமைகள் ஒடுங்கின. கண்ணீர் விலகிற்று. வாழ்க்கையோதெளிவாகிற்று. உலகம்புரிந்தது. கலகம்தணிந்தது. பதவிகள் பேறாகின. காமம், மோகம், வேகம், குரோதம் ,காதல், கவர்தல்யாவுமேவந்த வழியே திரும்பிச் சென்றன. யாருமே அவற்றில் அக்கறைப்படவில்லை. கலைகளே வாழ்க்கையை நெறிப்படுத்தின.

## இப்போது

இப்போது தவிர்க்கப்பட்ட காமம், மோகம், தாகம், குரோதம், காதல், கவர்தல், களவு, பிறர்மனைநாட்டம், பிடிபடுதல், காயப்படுதல், வசீகரப்படுத்தல், இளமையாக்குதல் லஞ்சம், பாலியல் லஞ்சம், கால்பிடித்தல், கதிரைபிடித்தல், குழிபறித்தல், பந்தம்பிடித்தல், பசுத்தோல்போர்த்தல், பழிக்குப் பழி தீர்த்தல், பதவி பறித்தல் என்பன தத்தம் வேலையைக் கச்சிதமாகச் செய்கின்றன போலும். இளைஞர்கள்மட்டுமல்லபெரியவர்களும் ஈடுபடுகின்றார்கள் என்பதை புதினப் பத்திரிகைகளில் படிக்கின்றோம். ஆசைஅறுபது நாள் மட்டுமல்ல மோகம் முப்பதுநாள் மட்டுமல்ல அப்பாலும் என்பதை உலகம் ஊடகவாயிலாக அறிவிக்கிறது. வயது முதிர்ந்தவர் சிறுமியுடன் குடித்தனம். இரவிலே அகப்பட்டார். வாங்கிக் கட்டினார். வகையாக மாட்டினார். எத்தனையோ செய்திகள் மௌனமாக வாழ்கின்றன. வெளிவர நாள்களாகலாம். ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்லதிருமணம் செய்தவர்கள்தப்பித்துக்கொள்ளபிள்ளைகள் அடிவாங்கிய செய்திகள் எமக்குப் பாடமாகஅமைகின்றன. சிலவற்றை ஊடகங்களில் விவரிக்க முடியாத நிலையில் எது சரி? எது பிழை? என்பது காலந்தான் பையப்பையத்தீர்மானிக்கும். இவைஅத்தனைக்கும் ஒவ்வொரு வரும் தாம் தாம் தம்மைஅறியமட்டுமல்லதம்மைத்திருத்திக் கொள்ள ஒரேயொருவழிதான்உண்டு. அதுதான் குரலாலும் விரலாலும் ஒரு தரமாவதுஇறைவனைப்பாசாங்கு செய்யாது, பயபக்தியோடு துதி செய்தலாகும். அதன்போது உன்னைநீமறக்கவேண்டும். உன் ஆணவம் உன்னை விட்டுஅறவேநீங்கவேண்டும். நீ ஒரு சாமான்ய மனிதனாக உன்னைத்தாழ்த்திவிடவேண்டும். உனக்கு எந்தவிதமான அனுசரணையோ ஆலவட்டமோ இருக்கக் கூடாது. நீ தொண்டனாகமாறிவிடவேண்டும். எல்லாமே அவன் என்று உன் ஆத்மா பரம்பொருளாக மாறி விட வேண்டும். இது சாத்தியமெனின் பட்டம் பதவி எல்லாம் பொடிப்பொடியாய்ப்போய் விடும். ஒஸ்கார் விருது கிடைத்தாலென்னநோபல்பரிசுகிடைத்தாலென்ன நானே அவன் அவனே நான் என்பது உள்ளத்தில் தெரிந்து தெளிந்து விட்டால்சமயம் அட்டாங்கமாக வணங்க வைக்கும். எப்போது பலிபீடத்தில் செய்த பாவங்களை ஒவ்வொன்றாகக் கழற்றி, எளிதாக மனிதன் புனிதனாகிறானோ உணர்ந்து திருந்துகின்றானோ அன்று தான் அவனது

கவலையும்தீரும்!
கண்ணீரும்நிற்கும்!
குவலயமும்சோபிக்கும்!
குரலும்இசைபாடும்!
உடலும்இசைக்கருவியாகும்!

இதுதான் இந்த உலகை வெல்வதற்கான ஒரே வழி. இது அமையாவிடின் உலகம் ஒரு வலியாகவேஅமைந்து விடும். பக்தியொன்றினாலே தான் அந்தப் பரம்பொருளை எட்ட முடியும். பக்தி வெறும் போலியாக இருப்பின் பதவிகளே எங்கும் பெயர் சொல்லும். அண்மையில்பதவிகளென்று எவரையும்இயம்பாதஓர் இசைச்சங்கமம் என்று சொல்வதிலும் பார்க்க ஓர் இசையாராதனை 26.02.2017 ஞாயிறன்று காலை மிகவும் பக்திமணங்கமழ அரங்கேறியது. கவலையும் பறந்தது. கண்ணீரும் மறைந்தது.

## சங்கீத சபையில்

1931ஆம் ஆண்டு அமரர்கள் பரம் ,குமாரசாமி ஆகிய பெரியோர்களால்ஸ்தாபிக்கப்பட்ட வடஇலங்கைச் சங்கீத சபை நூற்றாண்டை நோக்கி வீறுநடை போட்டு, பீடு பெறநிற்கும் இந்த வேளையில் இந்த ஆண்டுக்குரியசற்குருஸ்ரீதியாகராஜசுவாமிகளின் பஞ்சரத்தின இசையாராதனையைநடத்திகவலையையும்கண்ணீரையும் துடைத்திருப்பது மட்டுமல்ல எல்லோரையுமே இசைக்கருவிகளாக்கியிருப்பது வட இலங்கை சங்கீத சபைக்கு ஒரு சபாஷ் போடலாம். தற்பரானந்த அரங்கை அமரர் தற்பரானந்தனின் ஆத்மா கண்டு பேரானந்தம் பெற்றிருக்கும். மண்டபம் நிறைந்த இரசிகர்கள் இசையாராதனையோடு ஒன்றித்து மோகன ஸ்ரீராமனை சீதா ராமனாக ஸ்ரீபக்த அனுமான் சமேத ஸ்ரீராமனாக இலட்சுமணன்சமேதராமனாகவணங்கி வாழ்த்திப் போற்றி வரம் பெற்றார்கள். இரசிகர்கள் தாமும் இசைக்கருவிகளானார்கள்.

## முத்து

சத்தான உருப்படிகளை முத்தாக்கியே சொத்தாக்கித் தந்த நாதஸ்வர கானவிருட்சம், நல்லூர் பி.ரஜீந்திரன் குழுவினரது நாமகானம் அபூர்வ ராகங்களின் ஆழக் கடலில் முத்துக்களைஎடுக்கவைத்துவிட்டன. முத்துக்கள் எந்த முத்தாக இருக்கலாம் என்று ஆராய்ந்த இரசிகர்கள் பிந்துமாலினி என்றும்மறக்கா என்றும் கண்டுபிடித்து கரங்களால் பெருமதியாக்கினர். அடேயப்பா இசைக்கு இத்தனை வரமா? கவலையும் கண்ணீரும் தம்மை வாபஸ் பெற்றுக்கொண்டன. மூத்த இசைக்கலைஞர்களும் வளரும்கலைஞர்களுமாக பஞ்சரத்தினஆராதனையைமழையாகப் பொழிந்தார்கள்.

## ஆராதனை

எந்தநாட்டையும்தன்வசமாக்கும்நாட்டை இராகமதில் விளைந்த தியாகராஜசுவாமிகளின் ஜகதானந்த காரகா என்ன கம்பீரம் ஸ்ரீஇராமனைமண்டபத்துக்குஅழைத்து வந்து வணங்க வைத்தது.

நொய்மையானதும் மென்மையானதும் கனிவானதுமான கௌளை இராகத்திலேயமைந்த துடுகுகல என்ற தியாகராஜ சுவாமிகளின்கீர்த்தனையின்சுகம்சௌக்கியம் சௌபாக்கியம் சீத்தா இராமனை கொலுவிருக்கச்செய்தது.மண்டபம்களை கட்டியது.

எல்லோரையும்அபிமானத்துக்குரியதாக அலங்கரிக்கின்ற ஆரபி இராகத்தில் தோய்ந்த ஸாதிஞ்சனே என்ற தியாகப் பிரம்மத்தின் உருப்படிக்கு மண்டபக் கலைஞர்கள் தாமும் தம்மை அலங்கரித்தனர். மேடைக்கலைஞர்களும் சித்திகரமாகப் பாடினர். வராதவர்களையும் வரச்செய்கின்ற அற்புதமான இராகம் வராளி. ஆன்மாவுக்குஏற்படும்ஆன்மிகப் பசியைப் போக்கவல்ல அநாயாசமான இராகம் வராளி. ஸ்ரீராமபிரானின் முகமலர்ச்சிக்கு ஏதுவான இராகம் தியாகராஜ சுவாமிகள் அருளிய நான்காவது பஞ்சரத்தினம்கனகனருசிஎன்றருசிபிரவாகிக்கும் உருப்படியாகும். இது ஓர் அபூர்வஇராகமாகும்.

சீதா இலட்சுமண அனுமான் சமேத ஸ்ரீராமனை முழுமையாக அனுபவிக்கவல்ல இராகம் ஸ்ரீ இராகமாகும். எந்தரோ மகானுபாவுலு என்ற ஐந்தாவது பஞ்சரத்தினம்தியாகராஜசுவாமிகளுக்குச்சரணாகதியைஏற்படுத்திய ஓர்உருப்படியாகும். கலைஞர்களும் இரசிகர்களும் ஐக்கியப்பட்டுப் புளகாங்கிதம் அடையச் செய்யும் இராகம் ஸ்ரீராகமாகும். உருப்படியும் சேர்ந்து விட்டால்நிகரேது?

## சிறப்பு

மாணவர்களும், ஆசிரியர்களும், கலைஞர்களுமென மொத்தம் முந்நூறு பேர் இந்தஆராதனையைச்சிறப்பித்திருந்தார்கள். நல்லூர் சோமராக இசைமன்றம், காரைநகர் இந்துக் கல்லூரி வாழ்வகம், இராமநாதன் கல்லூரி, காரைநகர் கிழவன்காடு கலாமன்றம், சாரங்கா மன்றம் எனப் பலதரப்பட்ட மாணவர்கள் பாரம்பரிய கலாசாரம் உடையுடன் பங்குபற்றிச் சிறப்பித்தமை பாராட்டுதற்குரியது.

## அனுசரணை

யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தின்பெரும்பங்களிப்புடன்இந்தமுறையும் தொடர்ந்தும் கொண்டாடப்படுவதனால் ஆராதனை பேறும் வரமும் கொண்டது எனலாம். தூதுவர்பேச்சும், வரவும், பொலிவும், புன்னகையும்இந்தமண்ணைவாழ்விக்க மிகமிக அவசியமானவையே. ஏ.நடராஜன் தமிழ் மக்களது கலை, கலாசார, பண்பாட்டுவிளையாட்டுஉயர்கல்வி விடயங்களில் அதீத கவனம் செலுத்தி வருவதுவரவேற்கப்படக்கூடியதொன்றாகும். நல்லதோர்சகவாழ்வுக்கும்எல்லோரும் இசைக்கருவிகளாக மிளிர்வதற்கும் அன்னியோன்னியத்துக்கும் தூது வருடைய சகவாசம் பெரிதும் துணைபுரியும் என நம்பலாம். அவரும் ஓர் இசைக்கருவியே.

## மாவை

நாடாளுமன்ற உறுப்பினர் சோ.மாவை சேனாதிராசா தியாகராஜ சுவாமிகளைப் போற்றி வணங்கும் சங்கீத சபைக்கு வேண்டிய உதவிகளை மேன்மேலும் வழங்குவதாகவும், இசை ஓர் அற்புத மருந்து எனவும், இந்த உற்சவம் எமது பண்பாடுகளைச் சுமந்து நிற்பதாகவும் உறுதி தந்து பாராட்டி மகிழ்ந்தார்.

## அம்மா

முன்னாள் தலைவாரான அருளீஸ்வரி வேதநாயகத்தின்கனிவானபேச்சுசங்கீத சபைக்குமிகுந்தஉற்சாகத்தைஅளித்தது. தற்போதைய தலைவரான ந. தெய்வேந்திரராஜாவின் காலமும் ஒரு பொற்காலமாக அமையும் என்பதை அமைக்கப் படும் புதிய மாடிக் கட்டடம் சான்று பகரும் எனப்போற்றி உரையாற்றினார். கவலையும் கண்ணீரும் வாழ்க்கையல்ல என்ற தூதுவரின் மெய்ப்பாடு சங்கீத சபைக்குப் புதிய பரிணாமத்தை வழங்கிற்று.



# அதிர்ஷ்டக் கற்கள்

**எவர் மாணிக்கக்கல் அணியலாம்?**

சூரியனுடைய பிரதிநிதிக் கல்லாக மாணிக்கம் உபயோகப்படுகிறது. சூரியனின் வீடான சிம்ம ராசியில் பிறந்தவர்களும் சூரிய திசை நடப்பில் உள்ளவர்களும், எண் கணிதப்படி 1, 10, 19, 28 ஆம் எண்ணில் பிறந்தவர்களும் மாணிக்கக் கல்லை அணிந்து கொள்வது நல்லது. இதனால் சூரியனுடைய கதிர்கள் ஒழுங்கு செய்யப்பட்டு உடலில் நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்குகின்றது.

**மாணிக்கக் கல்லின் நன்மைகள்:**

மருத்துவரீதியாக உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள், காய்ச்சல், வயிற்றுக்கோளாறு, மூலம், இருதய நோய், தோல்வியாதி, கண்நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மாணிக்கக் கல்லை அணிந்தால் நோய்களின் பிடியிலிருந்து ஓரளவுக்குத் தப்பித்துக் கொள்ளலாம்.

மாணிக்கக் கல்லைத் தங்கத்தில் பதித்து உடலில் படும்படி அணிந்து கொண்டால் நல்ல உடல் நலம், உள்ள உறுதி, நட்பு, காதல் பாசம் போன்றயாவும் சிறப்பாக அமையும். இருதயத்தையும், குருதி ஓட்டத்தையும் வலுவடையச் செய்கிறது. மன அழுத்தம், சோகம், தேவையற்ற புலனின் நாட்டம் போன்றவற்றைக் குறைத்து தைரியத்தையும் வீரத்தையும் தருகிறது.

மாணிக்கம் சூரியனின் ஆதிக்கம் என்பதால் பெயரையும் புகழையும் உயர்த்துவதுடன் சமுதாயத்தில் கௌரவமிக்க பதவிகளை வகிக்கும் ஆற்றலையும் கொடுக்கிறது. மழலைச் செல்வமும் சிறப்பாக அமையும்.

ஒரு சில மாணிக்கங்களை வெட்டிப் பார்த்தால் ஆறு கீற்றுக்கள் உடைய நட்சத்திரத்தைப் பார்க்கலாம். இந்தவகை மாணிக்கக் கல்லை நட்சத்திர மாணிக்கம் என்று அழைக்கிறார்கள்.

மாணிக்கம் ஒரு பிரகாசமான, கடினமான, காலமெல்லாம் நிலைத்திருக்கக்கூடிய, அணியத் தகுந்த ஓர் அபூர்வ இரத்தினமாகும்.

மாணிக்கத்தை தங்கத்தில் பதித்து உடலில் படும்படியாக மோதிர விரலில் அணிந்து கொள்ள வேண்டும். அதன் எடை 3 அல்லது 5 ரத்திகள் இருப்பதே நல்லது. மிக விலை உயர்ந்த மாணிக்கக் கல்லை வாங்க இயலாதவர்கள் அதற்குப் பதிலாக கார்னட் என்ற கல்லை வாங்கி அணியலாம். இந்த கல் சிவப்பு நிறத்தில் பவளத்தைப் போன்று சற்றுக் கூடுதலாக கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். குற்றமில்லாத கார்னட் கற்கள் மாணிக்கத்தை போலவே நற்பலனை அளிக்கும் தன்மைவாய்ந்ததாகும். மாணிக்கக் கல்லை அணியும்போது சூரியனுக்கு உரிய ஞாயிற்றுக் கிழமை களில் சூரிய ஓரையில் அணிந்துகொள்வது நல்லது.



## நாளை

**பங்குனி-17**
வியாழக்கிழமை -30.03.2017
திதி: திருதியை பி.இ.03.02
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப.11.54
சுபநேரம்:07.43-09.13 வரை
ராகுகாலம்:01.43-03.13 வரை
செல்லப்பாசுவாமி குருபூஜை

## வரலாற்றில் இன்றைய தினம்

### 29.03.2017

1549 -பிரேசிலின் முதல் தலைநர் சல்வபோர்டாபஹியா உருவாக்கப்பட்டது.

1632 -ஆங்கிலேயரால் 1629 இல் கைப்பற்றப்பட்ட கியூபெக் ஆனது செயினற் ஜேர்மைன் ஒப்பந்தத்தின் மூலம் பிரான்ஸின் கட்டுப் பாட்டுக்கு கையளிக்கப்பட்டது.

1806 -அமெரிக்காவின் முதலாவது சமஷ்டி நெடுந்தெருவாக கம்பர்லான்ட் வீதி உருவாக்கப்பட்டது.

1849 -பஞ்சாப் ஐக்கிய ராச்சியத்துடன் இணைக்கப்பட்டது.

1886 -அட்லான்டாவில் கொககோலா முதன் முதலாக ஜோன் பெம்பேற்றனால் வடித்து எடுக்கப்பட்டது

1911 -அமெரிக்க இராணுவத்தின் உப ஆயுதமாக M1911 கைத்துப்பாக்கி பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியது.

1942- ஜேர்மன் நகரான லுபெக்மீது விமானக் குண்டுத்தாக்குதல்; ஜேர்மனியருக்கும் ஜேர்மனிய நகர்களுக்கும் எதிரான றோயல் விமானப் படையின் வெற்றிகரமான முதலாவது தாக்குதல்.

1945 -ஜேர்மனியரது நாலாவது படைப்பிரிவு ரஷ்ய செம்படை வீரர்களால் அநேகமாக முற்றாகத் துவம்சம் செய்யப்பட்டது.

1947- மடகஸ்காரில் பிரெஞ் குடியேற்ற ஆதிக்கத்துக்கு எதிராக அந்த மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

1971 - மைலாய் படுகொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட லெப்டினன்ட் வில்லியம் கலிக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

1973 -அமெரிக்காவின் கடைசித் தாக்குதல் படை அணியும் தென் வியட்நாமிலிருந்து மீளப்பெறப்பட்டது.

1974 -மேக்கூரிக்கு செலுத்தப்பட்ட முதல் விண்கலமானது நாஸாவின் மரீனர் 10.

1990- கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்ச்சியின் பின் செக்கஸ்லோவிக் நாடாளுமன்றம் ஒரு தீர்க்கமான முடிவை எட்ட முடியாத நிலையை அடைந்தது.

2000 -36 படையினர் 4 விமானிகளுடன் அநுராதபுரத்துக்குச் சமீபமாக, வீழ்ந்து நொருங்கியது விமானம். விமான இறக்கைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுத் துவாரங்கள் என தகவல்.

2002 -கனேடியக் கூட்டாட்சியே இலங்கைக்குப் பொருந்தும்; அந்த நாட்டு அமைச்சர் வலியுறுத்து.

2004 -பல்கேரியா எஸ்தோனியா, லத்வியா, லுதுவேனியா, றோமேனியா , ஸ்லோவேகிய மற்றும் ஸ்லோவேனிய ாஆகியன நேட்டோ அமைப்பில் முழு அங்கத்துவம் பெற்றன.

2007 -கரவெட்டியில் இருவரைக் காணவில்லையென ஆணைக் குழுவில் முறைப்பாடு.

2008 -வட போர் முனைத் தாக்குதலைக் முன்னகர்த்த மழையே குந்தகம் என கள முனைத் தளபதிகள் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பு

2009 -புதுமாத்தளன் கப்பல் மீது குண்டு விழுந்தமையை உறுதிப்படுத்துகின்றது செஞ்சிலுவைக் குழு

2010 -சனசந்தடி மிக்க வேளையில் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் மொஸ்கோவில் மெட்றோ புகையிரத சேவையைத் தாக்கியதில் 40 பேர் உயிரிழந்தனர்.

2013 -தான்சானியா தருஸலாம் நகரில் 16 மாடி வர்த்தக நிலையக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 36 பேர் உயிரிழந்தனர்

2014 -இங்கிலாந்து மற்றும் வேல்சில் ஒரே பாலாரிடையேயான திருமணம் முதன் முதலாக நடத்தி வைக்கப்பட்டது.



## மட்டுவிலில் பண்டிதமணி நினைவுப் பேருரை

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப் பேருரை இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் க. எழிலழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொதுச்செயலாளரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வருமாகிய ச.லலீசன் 'மட்டுவில் பெற்ற மாமணி' என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வித்துறையின் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் பண்டிதமணியின் உறவினருமாகிய த.சிறிஸ்கந்தராஜா கலந்து கொண்டார். பண்டிதமணியின் நினைவுநாளையொட்டி பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் த. சிறிஸ்கந்தராஜா, சொற்பொழிவாளர் ச.லலீசன், ஓய்வுநிலை ஆசிரியர் ந.அம்பிகைப்பிள்ளை ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மட்டுவிலில் உள்ள பண்டிதமணியின் உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதும் சந்திரமௌலீச வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பதும் பாடசாலையில் அவரது நினைவாக சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன.



தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்ற கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது ஆய்வரங்கு 'மிகைல் சொலக்கோவ் இன் இலக்கியப் படைப்புகள்' என்ற தலைப்பில் அண்மையில் இடம்பெற்றது.

## குணசீலனுக்கு கனடாவில் விருது



கனடா ஸ்காபுரோவில் உள்ள கொன்வன்சன் கலையரங்கில் எதிர்வரும் 02 ஆம் திகதி இடம்பெறவுள்ள, குருவி மற்றும் புதிய வெளிச்ச நிகழ்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பதற்காக பிரபல உயிரியல் ஆசிரியரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மூத்த விரிவுரையாளருமாகிய வி.எஸ்.குணசீலன் தனது துணைவியார் சகிதம் கனடா சென்றுள்ளார். கடந்த முப்பது வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் உயிரியல் கல்வியை உயிர்ப்புடன் ஊட்டிவரும் ஆசிரியர் குணசீலன் இவ்விழாவில் உயர்விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இராசையா ஸ்ரீதரன்

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 35ஆவது ஆண்டு விழா

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகை தெல்லிப்பழை எனும் சிறப்புமிகு பதியிலே ஸ்ரீதுர்க்கை அம்மனாக எழுந்தருளி அருளாட்சி புரிகின்றாள். இந்தப் புனிதமிகு பதியான தெல்லிப்பழை துர்க்காபுரத்திலே ஒரு மகளிர் இல்லம் இயங்கி வருகின்றது. ஈழவள நாட்டிலேயே ஒரு தனித்துவமான சிறப்புடன் விளங்கும் இந்த மகளிர் இல்லமானது கடந்த வாரம் தனது 35 ஆவது அகவையை நிறைவு செய்து மிகச் சிறப்பான முறையில் ஆண்டு விழாக் கொண்டாடியது.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சார்ந்த செல்வி லோஜினி கிருபாகரன் மற்றும் கார்த்திகா கணேசலிங்கம் ஆகியோரது இனிமையான குரலில் அமைந்த இறைவணக்கம் வந்திருந்த அனைவரதும் உள்ளத்தை ஈர்த்தது. அதன் பின்பு ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து கண்காட்சி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.



**விதம் விதமான பொருள்கள்**

இந்தக் கண்காட்சியிலே விதம்விதமான கைவினைப்பொருள்கள், கேக் ஐசிங் முறைகள், ஓவியங்கள் பூக்கள் மற்றும் சோடனைப் பொருள்கள் முதலியன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதையடுத்து ஓர் அழகிய வரவேற்பு நடனம் இடம்பெற்றது. துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் வழங்கிய இந்த நடனம் கண்களுக்கு நல்ல விருந்தாய் அமைந்தது.

இந்த விழாவின் பிரதான முக்கிய நிகழ்ச்சியாக "பல்லியம்" என்ற பெயரில் ஓர் இசை விருந்த ளிக்கப்பட்டது. இந்த நிகழ்விலே இரண்டு வீணைகள் , நான்கு வயலின்கள் இரு மிருதங்கம் என்பன இசைக்கப்பட்டன. புது மாதிரியான நிகழ்ச்சியாக இருந்த இப்பல்லியம் அனைவரதும் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது எனில் மிகையாகாது.

பின்னார்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் திருமதி கலாதேவி பொன்னம்பலத்தின் வரவேற்புரை இடம்பெற்றது. அதனையடுத்து இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனனின் வாழ்த்துரை இடம்பெற்றது. "கல்வியே கருத்தனம்" என்று கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இவருடைய பேச்சிலே ஓர் அழகான கருத்துப் பொருள் விளக்கம்ஆங்காங்கேஇடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த இல்லப் பிள்ளைகளின் மேற்படிப்புக்கும் இந்த மகளிர் இல்லம் உதவுவது சிறப்பம்சம் என்றார்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டு விழா தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்திலே மாலை நிகழ்வாக நடந்தேறியது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

அவர் தமதுரையில்.

**பெண்களின் பங்களிப்பு**

இன்றைய கால கட்டத்தில் எதுவாயிருந்தாலும் பெண்களில்லாமல் அதாவது பெண்களுடைய பங்களிப்பு இன்றி நடைபெறமுடியாது. முக்கியமாகப் பெண்கள் இணைந்தே கருமமாற்ற முற்படின் எல்லாமே செய்ய முடியும் என்பது தெட்டத் தெளிவாக இங்கே புலப்படுகிறது. பெண்கள் ஒன்றுபட்டு முயற்சித்தால் ஆகாதது ஒன்றுமில்லை. பெண்கள்தான் உலகின் கண்கள் என்று மகளிர் மாண்பை எடுத்துரைத்தார்.

விழாத்தலைவர் ஆறு.திருமுருகன் உரையாற்றுகையில், எமது இந்த மகளிர் இல்லமானது 1982 ஆம் ஆண்டு ஒன்பது பிள்ளைகளுடனே ஆரம்பமாயிற்று. காலக்கிரமத்தில் வளர்ச்சியடைந்து இப்போது 130 பிள்ளைகளைக் கொண்ட மகளிர் இல்லமாகப் மிளிர்கின்றது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். இந்த மகளிர் இல்லமானது இன்னும் மேன்மேலும் வளர்ந்து அளப்பரிய சேவையாற்ற வேண்டுமென்று நான் வாழ்த்தி மகிழ்கின்றேன் - என்றார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், இந்த மகளிர் இல்லமானது அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான சகலதையும் செய்து கொடுத்து ஒரு பெண் பிள்ளைக்குப் பெற்றோர் என்னென்ன செய்வார்களோ அதற்கும் மேலாக ஒரு படி ஏறி திருமணம் போன்ற நல்வாழ்வின் ஆதரவு அனைத்தையுமே செய்து கொடுக்கிறது - என்றார்.

அதையடுத்து கௌரவ விருந்தினராக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை உரையாற்றுகையில் :

"பெண்களின் தற்காலத்தேவைகளை உணர்ந்து அவற்றை நல்ல முறையில் நிறைவேற்றி வைக்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களின் முன்னேற்றமே தனது சேவை என்று இயங்கும் ஒரே இல்லம் இந்த மகளிர் இல்லமே என்று பாராட்டிப் பேசினார்.

அதன் பின்னர் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கலை நிகழ்ச்சிகள் வரிசையில் இனி ஒரு விதி செய்வோம், வில்லுப்பாட்டு மிகவும் நன்றாக அமைந்திருந்தது. இதனைத் தயாரித்து வழங்கிய சங்கரப்பிள்ளை கிருபானந்தனும் நெறியாள்கை செய்த திருமதி பகீரதி கணேசதுரை ஆகியோர் மிகுந்த பாராட்டைப் பெற்றனர்.

மேலும் தொடர்ந்து இடம்பெற்ற குழுநடனம் , தனிநடனம், "விநாயக கவுத்துவம்" நிகழ்ச்சியும் சிவ நடனமும் இறுதியாக நடைபெற்ற "நான்போனால்..." என்ற இசை நாடகமும் ஏகோபித்த பாராட்டுக்களையும் நிறைந்த கரகோசத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் தனிவிசேடம் என்னவெனில் பங்குபற்றிய பிள்ளைகள் அனைவருமே எட்டுவயதுக்குட்பட்ட குழந்தைச் செல்வங்கள் என்பதேயாகும்.













## திருகோணமலையில் நடைபெற்ற நூல் வெளியீடு

கவிஞர்,சோதிடர் வி.சிகண்டிதாசனால் ஆக்கப்பட்ட "திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அன்னையின் திருவருட்பாடல்கள்" நூல் வெளியீடு திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெற்றபோது நூலுக்கான நயவுரையினை நிகழ்த்திய வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரனும் நூலாசிரியரும் திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா, வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திரக்குருக்களால் கௌரவிக்கப்பட்டனர்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கம்பன் எனும் பறவை**

இது போலவே, மற்றொரு மங்கை தன் தலைவனின் நினைவுகள் நிழலாட தன உள்ளத்து நினைவுகளை கம்புள் எனும் பறவை மூலம் தூது விடுகின்றாள். யானைத் தீ எனும் கொடிய நோய்க்கு ஆட் படும் விளாம்பழம் வெறும் கூடாவதைப் போல தானும் தன் தலைவனை எண்ணி வெறும் கூடாய் போகும் நிலையையும் மன் மதன் தனக்கு ஏற்படுத்தும் காதல் வேதனை யையும் கம்புள் பறவை வாயிலாக தூதாக உரைக்கின்றாள்.

நந்திவர்மன் நகரில் இருக்கும் தன் காதலிக் கும் தன் நிலையைக் கூற மேகத்தைத் தூது விடுகின்றான் ஒரு தலைவன் .

ஓடுகிற மேகங்கள் ஓடாது தேரில் வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள் _ நாடியே
நந்திச் சீராமனுடை நல்நகரில் நல் நுத
லைச்
சந்துச்சீர் ஆமாகில் தான்

அதாவது ஆகாயத்தில் விரைவாக ஓடுகின்ற மேகங்களே, ஓடும் அளவுக்கு ஆற்றல் இல் லாத தேரிலே காதல் எனும் அன்பை மட்டும் கொண்டு ஓர் உயிரற்ற வெறும் கூடு வரு கின்றது. என நந்திவர்மனுடைய நல் நகரில் வாழும் அழகிய நெற்றியை உடைய என் காதலியிடம் சொல்லுங்கள் என மேகத்தை தூது விடுகின்றான்.

**தத்தைவிடு தூது**

தி_த சரவணமுத்துப்பிள்ளை தத்தை விடு தூது எனும் இலக்கியத்தை பாடியுள்ளார். தத்தை என்பது கிளி. காதலன் ஒருவன் தன்னைக் காதலித்த காதலி தன் பெற்றோர் சொற் கேட்டு தன்னை விட்டுப் பிரிந்து சென் றதையும், அவள் பெற்றோர் செய்து வைக்க விரும்பும் ஆடவனைத் திருமணம் செய்து கொள்ள உடன்பட்டதையும் அறிகின்றான். இந்த நிலையில் தன் காதலியை மறக்க முடியாத தலைவன், தன் காதலியின் நலன் மீது அக்கறை கொண்டு கிளியின் வாயிலாக தன் உள்ளத்து உணர்வுகளையும், காதலி யின் பிரிவால் தான் அடையும் துன்பம் என்பவற்றையும் தூதாக வெளிப்படுத்து கிறான்.


தேன் ஓங்கு பும் பொதும்பர் செறிந்து
பசும் தழைபரப்பி
வான் ஓங்கு தேமாவில் வாழும் பைங்கிளியே
மான் ஓங்கு மைவிழி என்
வஞ்சியிடைப் பைந்தொடிபால்
நான் ஈங்கு புகழும் மொழி
நல்கிளியே கூறாயே
நங்கை அவன்பால் சென்று நலம்பெற நீ கூறாயே

அதாவது தலைவன் "தேன் நிறைந்த பூஞ் சோலையில் பசுமையான கிளிகளை கொண்டிருக்கும் மாமரத்தில் வாழும் பசும் கிளியே. மான் ஏங்கி நிற்கும் மை தீட்டப்ப ட்ட விழிகளையும், வஞ்சிக் கொடி போன்ற இடையினையும் கொண்ட என் காதலியி டம் நான் இங்கு கூறுபவற்றைச் சென்று கூறுவாயாக" என கிளியிடம் வேண்டுகிறான். மேலும் தன் காதலியிடம் தான் கொண்டுள்ள பெரும் காதலை அவள் இல்லாது விடின் தான் இறந்து விடுவேன் எனும் மனநிலை யையும் கிளியிடம் கூறுகிறான். தன் காதலி அன்னம் போன்ற நடையுடையவள், அழ கிய பொன்நிற மலர்க்கொம்பு போன்றவள் தன் இதயத்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள். அவளது தாமரை போன்ற முகம் பார்க்காது, அவளது கரும்பு போன்ற இனிய சொற்களை கேளாது தான் உயிர் வாழ மாட்டேன் என கிளியிடம் இயம் பினான் தலைவன்.

அன்னநடை மை விழியாள்
அம்பெண் மலர்க்கொம்பு அனையாள்
என் இதய தாமரைக்கு ஓர்
இலக்குமியாம் பெண் அரசி
கன்னல் மொழி கேளாது
கஞ்சமுகம் நோக்காது
மன்னிலத்து வாழேன்
மடிந்திடுவன் மங்கையர்க்கு
மற்று இப் பழிசேரும் என
மாழ்குவேன் பைங்கிளியே

மேலும் தலைவன் கிளியிடம், என் காதலி யிடம் பின்வரும் மொழிகளையும் கூறுவாய் "பெண்ணே, உன்னைக் காதலித்தே சோர் வடைகின்றான், மேலும் அவன் மெலிவா னாகில் அவனது உடலில் உயிர் தங்கியி ருக்காது, நான் உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன் என்னிடம் இரக்கம் காட்டுவா யாக?

கொங்கு அலர் பூஞ்சோலை
வளர் மாங்கிளியே கோதையிடம்
நங்காய் நின் காதலித்தே
நலிவான் மெலிவானால்
தங்காது உயிர் என்றாள்
தான் நின் சரண் என்றான்
நங்காய் இரங்காய் எனவே
நவில்வாய் பசுங்கிளியே
நாரியர் பால் என் நிலையை
நவில்வாய் பசுங்கிளியே



என தன் நிலையை கூறுமாறு கிளியிடம் தலைவன் உரைக்கின்றான்.

**தூதாகச் சென்ற அன்னம்**

நளவெண்பாவில் தூதாக அன்னம் அனுப் பப்பட்டுள்ளது. நளனும், தமயந்தியும் தம் காதலுக்காக அன்னத்தையே மாறி மாறி தூதாக அனுப்பியுள்ளனர். மலர்ச்சோலை ஒன்றில் சென்ற நளன் அங்கு ஓர் அன்னத் தைக் கண்டு அதனுடன் உரையாடுகின் றான். அன்னம் உனக்கு தகுந்த மங்கை தமயந்தி என்பதை உரைக்கின்றது. தமயந் தியின் அழகு நலன்களைக் கேட்ட நளன் தமயந்தியின் மீது காதல்வயப்பட்டு தன் உள்ளத்தை அவள் பால் பறி கொடுக்கின் றான். நளனது அந்த நிலையைக் கண்ட அன்னம் நான் உனது காதலை தமயந்தி யிடம் சென்று உரைத்து எப்படியேனும் உன்னை அவளுடன் சேர்த்து வைப்பேன் எனக்கூறி தமயந்தியிடம் பறந்து செல்கிறது. அன்னமானது, தமயந்தியிடம் வந்து நளன் பற்றி உரைத்ததும் தமயந்தியும் நளன் மீது காதல் கொள்கின்றாள். தன் உள்ளம் தன்மை அறியாமலேயே நளனிடத்தில் சென்று விட்டதை உணர்கின்றாள். பின் னர் மனமானது துடிதுடித்து அன்னத்திடம் "இளமை பொருந்திய அழகிய அன்னமே, நீ சென்று தேரையுடைய நள மன்னிடம் என் இயல்புகளைக் கூறுவாயாக, அவ் வாறு நீ உரைத்தால் என் உயிரை எனக்கு விருப்பத்தோடு கொடுத்தாய் ஆவாய்.

வாவி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால் _ காவினி
டைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்று
ரைத்தி என்றுரைத்தாள்
பார் வேந்தன் பாவை பதைத்து
என மொழிந்தாள் தமயந்தி

திருஞானசம்பந்தரும் தன் தேவார திருப்பதிகத்தில் தூது பற்றிப்பாடுகிறார் சிவ பெருமானிடத்தில் அன்பு கொண்டு தன்னை பெண்ணாக பாவித்து சிவபெருமான் மீது காதல் கொண்டதாகவும், அந்தக் காதலால் தான் அடைந்த நிலையை ஒரு கிளியின் வாயிலாக தூதாக உரைக்கின்றார்.

சிறையாரும் மடக்கிளியே
இங்கே வா தேனோடு பால்
முறையாலே உனத்தருவேன்
மொய் பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல் தோணி
புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகால் பேசாயோ

அதாவது, அழகிய சிறகுகளை உடைய இளமையான கிளியே, என்னிடத்தில் வரு வாயாக, நான் உனக்குத் தேனையும், பாலையும் உண்ணத்தருவேன் நீ தோணி புரத்தில் உறையும் இளம்பிறை சூடிய பெரு மானின் திருநாமத்தை ஒரு முறை என் காதுகள் குளிரக் பேசுவாயாக மற்றுமொரு பாடலில், சம்பந்தர் " பால்மணம் கமழும் மலர்களைக் கொண்ட மாமரத்தின் தளிர்க ளைக் கோதி உண்டு, எல்லோர்க்கும் இனி தாகக் கூவும் அழகிய இளமையான குயிலே! தேன் நிறைந்த பொழில்கள் புடை சூழ்ந்து விளங்கும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய தேவர் தலைவனாகிய சிவ பெருமான் என்னி டம் வருமாறு ஒருமு றையேனும் கூவு வாயாக"

இளங்குயிலே
திருத்தோணி புரத்து
அமரர்
கோனாரை என்னி
டைக்கே வர ஒருகால்
கூவாயே

என குயிலைத் தூது விடுகின்றார்.

**மாணிக்க வாசகரின் தூது**

மாணிக்கவாசகர்கூட தன்னைப் பெண் ணாக பாவித்து இறைவனிடம் தூது விடுகின்றார். கிளி ஒன்றை அழைத்து அதனி டம் "அழகு பொருந் திய இளமையான கிளியே! எம்முடைய திருப்பெருந்துறை மன்னனது சிறப்புப் பொருந்திய திருப்பெயரைத் தூய தாமரை மலர் மேலிருக்கும் பிரமன், பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் ஆகியோர் சொல்லுவது போல் திருஆரூரன் சிவந்த மேனியுடையவன் எம்பிரான் தேவர் பெரு மான் என்று ஆராய்ந்து சொல்வாயாக" என உரைக்கின்றார்.

இவற்றின் மேலாக, தமிழைத்தூது விடுவ தற்கு தெரிவு செய்கிறாள் ஒரு தலைவி. சிவபெருமானிடத்தில் தன் காதலை சொல் வதற்கு பல வகையான உயிரினங்களைத் தெரிவு செய்து இறுதியில் தமிழே தூது விடத்தகுந்தது என முடிவு செய்கின்றாள். முதலில் அன்னத்தை தூது விடலாம் என கருதுகின்றார். ஆனால் அது இறைவ னைக் கண்டறியாதே. காரணம் ஏற்க னவே இறைவனின் முடியைத் தேடி அன்ன வடிவில் சென்று காணமுடியாது திரும்பியது. சரி அன்னம் வேண்டாம். வண்டைத் தூதாக அனுப்பினால் சிவபெருமான் அத னிடம் காமதல் செய்யாதே எனக் கூறினால் அது திரும்பிவிடுமே என தலைவி தயங்கு கிறாள் சரி வண்டும் வேண்டாம் மானைத் தூது அனுப்பினால் என்ன? ஆனால் மான் தான் சிவபெருமானின் அருகில் செல்லாதே காரணம் சிவன் புலித்தோலை இடையில் அணிந்துள்ளாரே, சரி மானும் வேண்டாம் கிளியை அனுப்பினாலும் அது இறைவ னின் அருகே இருக்கும் வலியான் எனும் பறவைக்கு அஞ்சி நெருங்காதே, ஆகவே நீ ஒருவனே இறைவனிடம் தூது செல்ல ஏற் றவன் என தமிழைப் பாராட்டி இறைவனி டம் தூது அனுப்புகிறாள். இவைமட்டுமன்றி சீவகசிந்தாமணியில் நாயகியர் எட்டுபே ரில் குணமாலை என்பவள் கிளியை சீவக னுக்கு தூது விடுகின்றாள்.

மேலும் சத்திமுற்றப்புலவர் பசியும், குளிரும் தன்னை வாட்ட நாரையை அழைக்க தன் மனைவியிடம் தூது விட்டமையை அனை வரும் நன்கு அறிவர். சங்க இலக்கியங்க ளான குறுந்தொகை, நற்றிணை, புறநா னூறு முதலானவற்றிலும் தூது பற்றிய செய்தி பேசப்பட்டுள்ளது. இவ்வாறு எண் ணற்ற நம் தமிழ் இலக்கியங்களில் தூதுப் பண்பானது பேசப்பட்டுள்ளது. தமிழ் இலக் கிய உயர்வுக்கும், இரசனைக்கும் தூது என்பது அடித்தளமாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.




**அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்**
**பங்குனித்திங்கள் வேள்வி விழா-2017**

அம்பிகை மெய்யடியார்களே!

நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் பங்குனித் திங்கள் 21ஆம் நாள் (03.04. 2017) திங்கட்கிழமை பகல், இரவு, மறுநாள் அதிகாலை வரை வழமை போல் வேள்வி விழா அதி சிறப்பாக நடைபெற அம்மன் திருவருள் கூடியுள்ளது.

பொங்கல்விழா நிகழ்வுகள்
★ அபிஷேகம், கொடியேற்றுதல் வைபவம், பூசைகள்
★ மகேசுவர பூசை (அன்னதானம்)
★ பகல், இரவு முழு நாளும் காவடி, பாற்செம்பு
★ கற்பூரச்சட்டி நேர்த்திகள், பறவைக் காவடி, சிறப்பு நிகழ்ச்சிகள்
★ இரவு அம்பிகை திருவீதியுலா வருதல்
★ பொங்கல், காவடி, தீ மிதிப்பு
★ அதிகாலை விசேட பூசை
★ நீர்ச்சோறு வழங்கல்

மெய்யடியார்களே!

வேள்வி விழாவுக்குத் தேவையான பால், தயிர், இளநீர், கரும்பு, பூக்கள், பூமாலைகள் போன்றவற்றையும், அன்னதானத்திற்கு தேவையான அரிசி, மரக்கறி வகைகள், தேங்காய், வாழையிலை போன்ற பொருள்களையும் ஆலயத்தில் கொடுத்துதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

★ அடியார்கள் திங்கட்கிழமை பகல், இரவு முழுநாளும் காவடி பாற்செம்பு, கற்பூரச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திகள், அர்ச்சனைகள் செய்து கொள்ளலாம்.
★ அன்னதானப் பொருள்கள், பூசைப்பொருள்கள், திருப்பணி நிதி போன்றவற்றை ஆலய அறங்காவலரிடம் மட்டும் கொடுத்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். வேறு எவருக்கும் நிதி, பொருள்கள் சேகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை.
★ அர்ச்சனைப் பொருள்கள் ஆலய வளர்ச்சி கருதி அறங்காவலர் அவையினரால் விற்பனை செய்யப்படும்.
★ வணிக நிறுவனங்கள் (கடை) அமைப்பதற்கான ஏலம் 30.03.2017 வியாழக் கிழமை, 31.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நடைபெறும்.
★ பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
★ அனைத்து இடங்களிலிருந்தும் போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பு:** அடியார்கள் அனைவரும் வேள்வி தினத்தில் ஆலய தரிசனம் செய்து அம்பிகை அருள்பெற்றேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குஞ்சுப்பரந்தன். ஆலய அறங்காவலர் அவையினர்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## வேலையாள்கள் தேவை


யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஐஸ்கிறீம் கடைக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் தேவை.

* ஐஸ்கிறீம் பரிமாறுபவர்

ஐஸ்கிறீம் வேலை தெரிந்தவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

தொடர்பு - 077 9798 053, 021 221 7885

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
30.03.1948

இறப்பு
08.04.2016

அமரர்
**வைரமுத்து நடராசா**

திதி - பிரதமை துதியை (29.03.2017)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினிலே எம்மை பரிதவிக்கவிட்டுச் சென்றாலும்
என்றும் விடிவெள்ளியாய் வழி நடத்தும் எங்கள் அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்........

குடும்பத்தினர்.
மகள், மருமகன் ,பேரப்பிள்ளைகள்
(பிரான்ஸ்)

## காணி விற்பனைக்கு

இல.833 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள காணி 2 பரப்பும் 3.75 குளியும் விற்பனைக்குண்டு.

071 411 5004

## வேலையாள் தேவை

யாழ். நகரில் அலுவலகம் ஒன்றிற்கு உதவியாளர், கணக்கு பதிவாளர், கணினி இயக்குநர், விற்பனையாளர், தேவை.
தொடர்புகளுக்கு - 077 516 4928

## யாழ்ப்பாணத்தில் வீடு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் திருநெல்வேலிச்சந்தியிலிருந்து, கொக்குவில் சந்திக்குப் போகும் ஆடிய பாதம் வீதியில் மருத்துவபீடத்துக்கு அருகில் வீடு, கிணறு, நாற்பக்கமும் மதிலுடன் 2 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 8993 859

## வீடு வாடகைக்குத் தேவை

3 அறைகளுக்கு குறையாத Attached bathroom உடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு - Dr. B. தீபின்
077 328 7207

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.

**A/L 2019**

கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்

பிரிவு-11 ஆரம்பம்
01-04-2017
சனி
8.00 மணி

---

இம்முறை கனயோகம உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.03.2017 | 2114 | நீலம் |

மகரம் — வெற்றி இலக்கங்கள்: 09 32 49 50

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 1, 50, 76, 069/=

2017.03.31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

கோடீபதி

சீட்டிழுப்பு வாரம்: 118
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.03.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 81,106,416/-

T 09 23 62 66

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

சீட்டிழுப்பு வாரம்: 552 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 28.03.2017

வெற்றி இலக்கங்கள்: 01 12 36 40 C

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 24,777,203/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்**

க.பொ.த (சாதாரணப்) பரீட்சைப் பெறுபேறு - 2016

| | | |
|---|---|---|
| 01. யோ. சங்கீதா | - | 4A, 2B, C,S |
| 02. க. சஞ்சிதா | - | 2A, 5B, C |
| 03. சு. நிக்சன் றொபர்ட் | - | A, 2B, 2C, 2S |
| 04. த. யாழினி | - | 3B, 2C, 3S |
| 05. இ. கிருசாந்தன் | - | B,C,4S |
| 06. வ. பிரகாஸ் | - | C,5S |

இவ்வருடம் எமது பாடசாலையின் கல்வி கற்ற அனைத்து மாணவர்களும்சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சித்தியடைந்த மாணவர்களையும், எமது கல்லூரி அதிபரையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

Best Wishes

பாடசாலைச்சமூகம், பாடசாலை பழைய மாணவர் சங்கம்,
யா/ குப்பிழான் விக்கினேஸ்வரா ம.வி

---



**World Class British Degree @ICBT Jaffna Campus**

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

# ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

* All HND's are equal to NVQ Level 06
* All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

# BSc (Hons) Quantity Surveying

RICS Accredited

» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC

Week End Part Time Classes

» Duration: 1 Year

Progression Route to RICS: BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நூற்றாண்டுவிழாக்காலமான இவ்வருடத்தில் 2016 க.பொ.த (சா.தர) பரீட்சையில் சிறந்தபெறுபேற்றை பெற்ற கீழ்வரும் மாணவர்களையும் ஏனைய சித்திபெற்ற மாணவர்களையும் பாராட்டிவாழ்த்துகின்றோம்.


கெங்காதரன் ரகுராஜ்
9A


குலரத்தினம் நிமல்ராஜ்
8A C


கிரிதரன் தேசிகன்
8A S


கந்தசாமி யதிசன்
6A2B C


ரவிப்பிரகாஸ் விதுசனன்
6A3B


சந்திரகுமார் சாய்குமார்
4A3B C S


சிவரஞ்சன் கோகுலன்
4A 2B 2C

*Congratulations*

பாடசாலைச் சமூகம்
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

## காணி விடுவிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. புதிய அரசமைப்புத் தொடர்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே அரச தலைவர் செயலகத்தில் நேற்று முன் தினம் இரவு சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, தனியாகச் சந்தித்துப் பேச வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரியுள்ளார்.

இதற்கமைவாக தனியான சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"கேப்பாபிலவு, வலி.வடக்கு உள்ளிட்ட இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், அதற்கான நியாயப்பாடுகளையும் இரா.சம்பந்தன் அரச தலைவரிடம் முன்வைத்தார். கேப்பாபிலவு காணி தொடர்பில் இராணுவத் தளபதியுடன் உடனடியாகவே அரச தலைவர் பேசினார். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும். அதனை எப்போது எந்த அளவில் விடுவிப்பது என்பதிலேயே பிரச்சினை இருப்பதாக அரச தலைவர் பதிலளித்தார்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (வ-5)

### மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து லோகேஸ்வரன்



கொக்குவில் பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பாரதிபுலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து லோகேஸ்வரன் 28.03.2017 கிறிஸ்துவுக்குள் துயில் கொண்டு விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - மேரிமனோன்மணி தம்பதியரின் அன்புப்புதல்வனும் மனோறஞ்சிதமலரின் அன்புக்கணவரும் வைரமுத்து - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் பிறோன்சிகா, சிலீஸ்ராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் பிலோமினா, யேசுராசா, றீற்ரா, புளோறா, பிரபா ஆகியோரின் சகோதரரும் சற்குணம் (ஜேர்மனி), தருமகுலநாயகம், சறோஜாதேவி (செல்லம்), தவம், குணபாலசிங்கம், ஜெகதீஸ்வரன், சதீஸ்குமார் காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மைத்தனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கட்டைக்காடு கோண்டாவில் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இம்மானுவேல் அன்ரன் (தவம்)

**(முன்னாள் ஊழியர் லங்கா சீமெந்து லிமிட்டட் காங்கேசன்துறை )**



பிராயடி மயிலிட்டியைப் பிறப்பிட மாகவும், உயரப்புலம் ஆனைக் கோட்டையை வசிப்பிட மாகவும்கொண்ட இம்மானுவேல் அன்ரன் (தவம்) கடந்த (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல்- இராக்கினி அம்மாதம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான றிச்சேட் - எலிசபெத் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பற்றீசியா சிறிமாவதியின் (ஓய்வு பெற்ற ஊழியர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) அன்புக்கணவரும் சுகந்தினி (பிரான்ஸ்), சுகந்தன், நிலோஜினி, கஜனி (பிரான்ஸ்), றஜேந்திரன் (றஜி) ஆகியோரின் அன்புத்தந்தையும் றெஜினோல்ட் (பிரான்ஸ்), சாந்தி, லெஸ்லி, அச்சுதன் (பிரான்ஸ்), மயூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மேரிலின்வின் (மலர்) காலஞ்சென்றவர்களான யோகா, ஜெயா ஆகியோரின் அன்புச்சகோதரனும் லிற்றன், சந்திராவதி, பத்மாவதி, திலகேந்திரன், விமலகுலேந்திரன், தனேந்திரன், இன்பவதி ஆகியோரின் அன்புமைத்துனரும் சாம்சன், சானுஜா, டினோசன், தரணிகா, கேதாரணி, சாள்ஸ், டொறின், ஜெறோம், செறின், கரிசன், சர்மினி, நிவேதினி, சாருயன், தஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (30.03.2017) வியாழக்கிழமை அடைக்கலநாயகி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனைகள் நடைபெற்றுபின்னர் அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 4502 218, 077 844 3590,
021 221 3394
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

### கண்ணீர் அஞ்சலி



எமது வைத்திய
சாலையில் மருத்துவ
உத்தியோகத்தராக
கடமைபுரியும் டாக்டர்
திருமதி அன்பரசி
கேதீஸ்வரன் அவர்களின்
அன்புத்தந்தையார்

## சின்னப்பு நவரட்ணம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிசங்கம்,**
**அரசினர் ஆயுள் வேதவைத்தியசாலை கைதடி.**

### மரண அறிவித்தல்கள்

## தெய்வேந்திரம் குணம் (தேவர்)



கோண்டாவில் வடக்கு, வகீஸ்வரி வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் குணம் (தேவர்) 27.03.2017 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று(29.03.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கோண்டாவில் தில்லையம்பதி. குடும்பத்தினர்.**

## திருமதி சிவஞானம் அம்பலவாணர்



காங்கேசன்துறை, குரு வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் அம்பலவாணர் கடந்த (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும் அப்புத்துரையின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தையிட்டி பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வைரமுத்து செங்கமலம் (மாமி)
077 9122 657

## சேனாதிராசா திருவெண்காடர்



பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா திருவெண்காடர் நேற்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - அன்னரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ் சென்றவர்களான கந்தையா - ஞானாமிர்தம் தம்பதியரின் அன்பு மருமகனும் குணேஸ்வரியின் அன்புக்கணவரும் ரங்கநாதன் (கண்ணன் - சுவிஸ்), பகீரதன் (ஜேர்மனி) ஆகி யோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் வைகுந்தநாதர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரம்படி, வைகுந்தநாதர் (சகோதரர்)
கொக்குவில். 021 205 2385

### மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி கந்தசாமி



பிறப்பு 09.07.1944 இறப்பு 25.03.2017

யாழ். திருநெல்வேலி கலாசாலை வீதி, முத்துத்தம்பி பாடசாலை, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி கந்தசாமி (25.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் கலியுகனின் அன்புத்தாயும் காலஞ் சென்ற குருநாதன் மற்றும் சிவலிங்கம், முத்துலிங்கம், யோகம்மா, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரிசினியின் பாசமிகு மாமியும் சின்னத்துரை, கணேசலிங்கம், தங்கம்மா, மகேஸ்வரி, விஜயகுமாரி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜிதன், மேகனா, கேசிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2017) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விஜைந்தன் +41 789748423 (சுவிஸ்)
கலியுகன் +41 779102535 (சுவிஸ்)
குடும்பத்தினர்.

## அப்பாக்குட்டி தங்கராசா



புதியசெம்மணிவீதி, வேளாதோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி தங்கராசா 26.03.2017 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானத்தின் (முன்னாள் தாதி, இணுவில் வைத்தியசாலை) அன்புக் கணவரும் மகித்தன் (மஜிக்ஸ் வீடியோ கல்வியங்காடு), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (சாந்தி மெடிக் கிளினிக், யாழ்ப்பாணம்), ராஜகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் கபிலன், டிசான், அபிராஜ், அபிராமி ஆகியோரின் அன்புப்பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.03.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு.
குடும்பத்தினர்.

## தங்கராசா சிவராசா



தோற்றம் 05.06.1946 மறைவு 28.03.2017

பருத்தித்துறை ஓடக்கரையைப் பிறப்பிடமாகவும் நாகலிங்கமுதலியார் வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சிவராசா (ஓய்வுபெற்ற் தபால் ஊழியர்) நேற்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா வள்ளியம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கலாவதியின் பாசமிகு கணவரும் திருமதி பாமதி ஜெயரூபனின் (யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெயராசா, சௌந்தரராசா, ஈஸ்வரிஅம்மாள், காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் லோகநாதன் கலாதேவி, இராஜேஸ்வரி, செல்வதி, காலஞ்சென்ற லீலாவதி, விமலநாதன், காலஞ்சென்ற கமலநாதன், ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்ஜெயரூபன்,விஷ்வநாதன்(வடமாகாண சபை), ரதிதேவி (கனடா), விஜிதா (ஆஸ்திரேலியா), சுகந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும் ரம்யா (லண்டன்), ஜனஞ்சன் (ஜெயராசா படமாடம், பருத்தித்துறை), யாழினி (மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை), மாதவன் (அக்கராயன் மகா வித்தியாலயம்), வாமினி, தமிழினி ஆகியோரின் பெரிய தந்தையும் கபிகிருஷ்ணா, லக்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.03.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

N.M. Lane,
Pointpedro.
T.P. No. 077 188 1578
தகவல்:
சி.ஜெயரூபன் (ரூபன்)

## அச்சுவேலி...

மேல் நீதிமன்றில் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந் முன்னிலையானார். எதிரி தரப்பில் சட்டத்தரணிகளான திருக்குமரன், ரஞ்சித்குமார் ஆகியோரும் பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்பில் சட்டத்தரணிகளான கௌதமன், பார்த்தீபன் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

8ஆம் சாட்சியான உபபொலிஸ் பரிசோதகர் சாட்சிமளித்ததாவது:

அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திலிருந்து தொலைபேசியூடாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வந்தது. அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடத்தில் கொலைச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. சம்பவ இடத்தைப் பரிசோதிக்க வரும் படி அந்த அழைப்பில் அறிவிக்கப்பட்டது.

நான் காலை 6.50 மணிக்கு குற்றச் சம்பவ இடத்துக்குச் சென்றேன். அந்தப் பகுதி ஆள் நடமாட்டம் அதிகரித்த பகுதியாக இருந்தது. சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட இடம் மஞ்சள் தாளினால் சுற்றிக்கட்டப்பட்டு பாதுகாப்பாக இருந்தது. அந்த இடத்தில் அச்சுவேலிப் பொலிஸாரும் குற்றப்பிரிவு அதிகாரிகளும் நின்றார்கள். பொலிஸ் குழுவினர் நின்றார்கள். சம்பவம் நடந்த வீட்டில் சூழவுள்ள பகுதிகளில் உடலிலில் இருந்து வழிந்தோடிய குருதிப் படிவுகளும் தலைமுடியின் ஒரு பாகமும் இருந்தன. வீட்டுக்குள் இருந்த பாத்திரங்கள் வீசப்பட்ட நிலையில் இருந்தன.

வீட்டின் முற்றத்தில் இருந்த குருதி மாதிரியும் வீட்டு முன்பக்க கோலில் இருந்த குருதி மாதிரியும் வீட்டின் அறைகளில் இருந்த குருதி மாதிரிகளும் பெறப்பட்டன.

இரண்டு இடங்களிலும் இருந்த தலைமுடிகளும் எம்மால் பெறப்பட்டன. நைலோன் நூல் ஒன்றும் பெறப்பட்டது. சான்றுப் பொருள்கள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு முன்பாக இறந்தவர்களின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட குருதி மாதிரி என்பன சேகரிக்கப்பட்டன. சம்பவ இடத்திலிருந்து கத்தி ஒன்று மீட்கப்பட்டது. அதிலிருந்த குருதி மாதிரியும் சேகரிக்கப்பட்டது.

மேலதிக விசாரணையின்போது கைது செய்யப்பட்டவரின் குருதி மாதிரிகளும் எடுக்கப்பட்டன. அவற்றை ஒப்பிட்டு மரபணு பரிசோதனையை நடத்துவதற்காக இராசயனத் திணைக்களத்துக்கு கொண்டு செல்வதற்குரிய கட்டளை ராஜபக்ச என்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது என்று பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியமளித்தார்.

தொடர்ந்து சாட்சிமளித்த 9ஆம் சாட்சியான பொலிஸ் உத்தியோகத்தர் ராஜபக்ச,

"சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கரவண்டி அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிற்பதாகவும் அதைப் பரிசோதிக்கச் செல்லுமாறும் "அச்சுவேலிப் பொலிஸார் அறிவித்தனர்.

நான் சம்பவ இடத்துக்குச் சென்றேன். என்.பி.ஏ.ஏ.எம் 0484 இலக்கம் கொண்ட ரிவிஎஸ் வகையான வெள்ளை நிற முச்சக்கரவண்டி அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. அந்த முச்சக்கரவண்டி கந்தர்மடத்தைச் சேர்ந்தவருடையது என்று உரிமையாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்த முச்சக்கரவண்டியைச் சோதனை செய்திருந்தேன்.

ஆட்டோவில் நுணுக்குக் கண்ணாடி வைத்துப் பார்த்தேன். லைற் அடித்துப் பார்த்தேன். அங்கு குருதிக் கறைகள் இருந்தன. பின்பக்க ஆசனத்தில் 25 சென்ரி மீற்றர் மற்றும் ஆசனத்தில் சாயும் போது சீற்றில் 25 சென்ரிமீற்றர் தூரத்துக்கு குருதி போன்ற கறை இருந்தது. குருதிப் படிவுகள்இரண்டையும்இலக்கமிட்டேன். அந்தச் சான்றுப்பொருள் பொலிஸ் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டு, குருதி மாதிரிகளை குளிர் சாதனப் பெட்டிக்குள் சேகரித்தேன். அவை என்னுடைய பாதுகாப்பில்தான் இருந்தன. பரிசோதனைக்கு உட்படுத்தி 2014ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி அன்று இராசயனப்பகுப்பாய்வுக்கு அனுப்பினேன்" என்றார்.

தடயப்பொருள்களை இனங்காட்டுவதற்காக சாட்சிகளான தனஞ்செயன் தர்விகா, தங்கவேல் யசோதரன் மன்றில் இன்று முன்னிலையாகுவார்கள். ஏனைய சாட்சிகளின் சாட்சியங்களும் இன்று நடைபெறும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் அறிவித்தது. (வ-ரி)

## ஆட்சி...

போம் என்றும் அவர் கூறினார்.

"ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம். நடைமுறைப்படுத்த முற்பட்டால், முன்னாள் படையினரை ஒன்றிணைத்து அதைத் தடுப்போம்" என்றும் அவர் சூளுரைத்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரை சுவிஸ் தலைநகரான ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத் தொடரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்க் குற்றங்கள் குறித்த அறிக்கையுடன் சரத் வீரசேகரவும் களமிறங்கியிருந்தார்.

ஜெனிவாவுக்குச் சென்றிருந்த தமிழர் பிரதிநிதிகளுடன் அவர் கடுமையான வாய்த் தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்தார். இந்திய அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஊடாகவே சரத் வீரசேகர ஜெனிவாவுக்குள் நுழைந்திருந்தார். கூட்டத் தொடர் நிகழ்வுகளுக்காக அங்கு சென்றிருந்த தமிழர்களை அவர் ஒளிப்படம் எடுத்தார் என்கிற குற்றச் சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்குள் ஒளிப்படம் எடுப்பது தடுக்கப்பட்டுள்ள நிலையிலும் அவர் அவ்வாறு நடந்துகொண்டது தமிழர் பிரதிநிதி களை அச்சுறுத்தும் போக்கிலேயே என்று மனித உரிமை ஆர்வலர்கள் கடிந்து கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் தனது ஜெனிவாப் பயணத்தை முடித்துக் கொண்டு லண்டன் சென்றுள்ளார் சரத் வீரசேகர. அங்கிருந்தவாறு தொலைபேசி மூலம் உதயன் செய்தியாளருக்கு அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதைப் பெரியதொரு இராஜதந்திர வெற்றியென மக்கள் மத்தியில் காண்பிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. இது வெற்றி அல்ல. இலங்கை மீது விரிக்கப்பட்டுள்ள வலைக்கு அரசும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

படையினர் குற்றமிழைக்கவில்லை என்று நாம் திட்டவட்டமாகக் கூறிவரும் நிலையில், தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி, போர்க்குற்றம் நடந்துள்ளதாக அரசே மறைமுக ஒப்புதலை வழங்கியுள்ளது. இதை எப்படி இராஜதந்திர வெற்றி என்று கூறமுடியும்?

ஜெனிவாவில் முகாமிட்டிருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் என்னுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். ஆனாலும் நான் ஓயவில்லை. சிறந்த முறையில் பதிலடி வழங்கினேன். அனந்தி, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார், பாக்கியசோதி சரவணமுத்து, நிமல்கா பெர்னான்டோ ஆகியோர் இலங்கைக்கு எதிராகப் பரப்புரைகளை முன்னெடுத்தனர். இது தேச விரோதம். எமது ஆட்சி வந்த பின்னர் இவ்வாறானவர்களை சிறையில் அடைப்போம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை இனிமேல் இலங்கை மீது தீவிரப் பார்வையைச் செலுத்தும். அதன் அறிக்கையாளர்கள் நாட்டுக்கு அடிக்கடி வரும் சூழ்நிலை உருவாகும். உண்மையைக் கண்டறியும் குழுவை அமைக்குமாறு வலியுறுத்தப்படும். படையினரைத் தண்டிக்குமாறு கோரப்படும். பழைய சம்பவங்களைக் கிளறுவதால் மீண்டும் கசப்புணர்வுதான் ஏற்படும். உண்மைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்க இடமளிக்கமாட்டோம் என்றார். (உ-5)

## யாழ். இந்து...

மூலத்தில் முதலாம் இடத்தையும் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் அருளானந்தம் அபிநந்தன் சாதனை படைத்துள்ளார்.

உயிரியல் விஞ்ஞானத்துறை அல்லது மருத்துவத் துறையில் நோய்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபடுவதே தனது இலக்கு என்று அவர் தெரிவித்தார்.

இவர் இந்தியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகளவிலான கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் இடைநிலைப் பிரிவுப் போட்டியில் பங்கு பற்றி சாதனை படைத்து வெற்றிவாகை சூடியவர்.

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று அதிகாலை வெளியிடப்பட்டன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் அருளானந்தம் அபிநந்தன் 9ஏ சித்தியைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் முதலிடத்தைப் பெற்றார்.

மாணவன் அருளானந்தம் அபிநந்தன் சிறந்த பெறுபேறு தொடர்பில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் சிறாம்பியடியை வசிப்பிடமாகக் கொண்ட நான் குடும்ப சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் இந்த வெற்றியைப் பெற்றுள்ளேன். இருப்பினும் எனது உயர் கல்வியில் சிறப்பு இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலே இருந்தது. சாதாரண தரத்தில் இந்த வெற்றி கிடைத்தது மகிழ்ச்சியைத் தருகிறது. சாதாரண தரம் என்பது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பரீட்சை அல்ல . உயர்தரமே அதனைத் தீர்மானிக்கும்.

எனது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் அத்தை ஆகியோரின் ஊக்கமளிப்பில்தான் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டேன். எனது வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றிகள். இவ்வாறான சாதனைகளைப் படைக்க சகல மாணவர்களும் முனைய வேண்டும்.

உயிரியல் விஞ்ஞானத் துறையில் தொடர்ந்து கல்வி கற்பதற்கு விரும்புகின்றேன். அது தவறினால் நோய்கள் தொடர்பான ஆய்வுத்துறையில் கல்வியைக் கற்கவே விரும்புகின்றேன்.

இவ்வாறு சாதனை படைப்பதற்காக நான் அரும்பாடுபட்டு இரவு பகலாகப் படித்தேன் என்று பொய்கூற விரும்பவில்லை. படிக்கும் இடத்திலும் படிக்கும் நேரத்திலும் கவனத்தோடு கற்று பிற செயற்பாடுகளிலும் ஈடுபட்டே நான் இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டேன் என்றார். (வ-4- 101)

## போரின் போது...

அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட்டால் நாட்டில் மீண்டும் போர் ஏற்படும் என்று கூட்டு அரசின் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில் அதே சாரப்பட, முன்னாள் பாதுகாப்புச் செயலரும் கருத்து வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தின் பத்திரிகையாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே, முன்னாள் பாதுகாப்புச் செயலர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசாரணைகளையும், வெளிநாட்டு நீதிபதிகளையும் ஒரே நேரத்தில் கொண்டு வருவதன் மூலம், இந்தச் சமூகங்களை இணைக்க முடியும் என்று எவ்வாறு கூற முடியும்? அவ்வாறு செய்ய நினைத்தால், அனைவருக்குமான நல்லிணக்கம் இருக்காது.

போருக்குப் பின்னர், எம்மால் என்ன செய்ய முடியும்? பின்னால் சென்று, இந்த விடயங்கள் பற்றிப் பேசினால், சமூகங்கள் ஒன்றுபடாது. அது இடைவெளியைத் தான் அதிகப்படுத்தும். தமிழர்கள் போர்க்குற்ற விசாரணை பற்றிப் பேசும்போது, பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள், பௌத்த மதகுருமார் மற்றும் பொலிஸாரின் படுகொலைகள், போரின்போது தாம் எதிர்கொண்ட கொடூரங்கள் பற்றிப் பேசுவார்கள். அது போருக்குப் பிந்திய குணமாக்கல் செயற்பாடுகளின் வேகத்தைக் குறைக்கும்.

இலங்கையின் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அரசியலில் நுழைவதற்கு விரும்பாவிடினும், நாட்டுக்குச் சேவையாற்றும் வாய்ப்பை நிராகரிக்க மாட்டேன். நான் ஒரு நல்ல அரசியல்வாதியாக இருப்பேன் என்பது நிச்சயமில்லை. ஆனால், அரசியலை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று மகிந்த ராஜபக்ச எப்போதும் கூறுவார். எனது கொள்கைக்கு இணக்கமான ஒரு தலைவரை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன்.

அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பின் அரசியல் பிரவேசத்தை ஒரு உதாரணமாக எடுத்து, அவரது முறைமைகளை ஆராய்ந்து வருகிறேன். போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்குப் புதிய விசாரணைப் பொறிமுறைகள் தேவையில்லை. தற்போதுள்ள நீதிப் பொறிமுறைகளே போதுமானவை.

போரின்போது தனித்தனியான சில குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றன என்பதை நான் நிராகரிக்கவில்லை. ஆனால், முழு இராணுவத்தையும் குற்றம்சாட்டுவது நியாயமானதல்ல. எனது கட்டுப்பாட்டில் இருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்று ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்த குற்றச்சாட்டு தவறானது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அவ்வாறு செயற்பட்டிருந்தால், அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவே அதற்கு பொறுப்பேற்கவேண்டும். இராணுவப் புலனாய்வுப் பிரிவு தனது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என்று அவரால் எப்படிக் கூற முடியும்? இது ஒரு நகைச் சுவை என்றார். (த-5)

## வேம்படி...

பட்ட பாடசாலைகளில், வவுனியா ரம்பைக்குளம் மகளிர் பாடசாலையில் 18 மாணவிகள் 9ஏ சித்தியை பெற்று வவுனியா மாவட்டத்தில் முன்னிலை பெற்றுள்ளனர்.

தென்மராட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 10 மாணவர்கள் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். வடமராட்சி மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையில் 7 மாணவிகள் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிகளில் தலா 5 மாணவிகள் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி என்பனவற்றில் தலா 4 மாணவர்கள் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். நெல்லியடி மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிகளில் தலா 3 பேர் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர்.

வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயத்தில் 10 மாணவர்கள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். வவுனியா சைவப்பிரகாச மகளிர் பாடசாலையில் 3 மாணவிகள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 4 பேர் 9ஏ பெறுபேறு பெற்றுள்ளனர்.

(வ4, 9, 108, 173, 402)

## யாழ். மாவட்டத்துக்கு...

கிடைக்கப் பெற்றுள்ளது.

கொழும்பு அரசின் மீள்குடியேற்ற அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கடந்த ஆண்டு அதிகளவு உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. 8 லட்சம் ரூபா பெறுமதியான கல் வீடுகள் 3 ஆயிரம் யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கிடைக்கப் பெற்றிருந்தன.

இந்த ஆண்டு கல் வீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தலைமை அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனையடுத்து தலைமை அமைச்சர் அலுவலகத்தினால், யாழ்ப்பாண மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட சகல திட்டங்களையும் இந்த ஆண்டும் அதே அளவில் வழங்குவதற்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்குத் தற்போது ஆயிரம் கல் வீடுகள் அமைப்பதற்கான அனுமதியே வழங்கப்பட்டுள்ளது. (த-5-101)

## கொழும்பு...

மாத்தறை ராகுல் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஆகிய இரண்டுபேரும் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

ஜீ.சீ.ஈ. காதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று அதிகாலை வெளியாகின. இந்தப் பெறுபேறுகளை www.doenets.lk அல்லது www.exams.gov.lk ஆகிய இணைய முகவரிகள் ஊடாகப் பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

பரீட்சைப்பெறுபெறுகளைப்பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் தபால் மூலமாக அனுப்பப்படவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற இந்தச் சாதாரண தரப் பரீட்சையில் 5 இலட்சத்து 51 ஆயிரத்து 340 மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார். (வ-4)

## காணி...

படிப்படியாக விடுவிக்கப்படும். இவ்வாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி விடுவிப்புக் கோரிய போராட்டங்கள் தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படையினரின் கையிருப்பில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரச தலைவர் செயலணியே பிரதான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார். (த-5)






நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று உலகுக்கு தெரிவிக்கும் கட்டாயத்தில் ஆண்கள் தான் செல்பி எடுப்பார்கள்.. இங்கே என் கணவர் எனக்கு மட்டும் தான் என்று பெருமைப்பட்டு இந்த மூதாட்டி எடுக்கும் படம் அருமை...




வெளியில ஒ ரே வெயில்... நடமாடவே முடியலையடா சாமி...!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | | 4 | | | | | 2 |
| | 6 | | | 2 | 8 | | | |
| | | | | 3 | | | 5 | |
| 8 | | 7 | | | | 1 | 2 | |
| | | | | | | | | |
| | 4 | 2 | | | | 3 | | 5 |
| | 7 | | | 6 | | | | |
| | | | 2 | 1 | | | 8 | |
| 2 | | | | | 3 | | 9 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1- | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 5 | 1 | 9 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 8 | 9 | 6 | 4 | 7 | 5 |
| 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள்என்றும்அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும்1-9வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல்ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

மாறு வேட போட்டியில் முதல் பரிசு வென்ற மாணவன்




**கோழியின் கிறுக்கல்!!!**

ஏன் பிறந்தோம் ? என்று சில நாள்கள் வேதனை படவும், இதற்குத் தான் பிறந்தோம் என்று சில நாள்கள் கர்வப்படவும் வைத்து விடுகின்றன...!

# ஓ போடு.... பாணியில் இன்னொரு பாட்டு


ஐ படத்துக்கு பிறகு விக்ரமுக்கு அடுத்தடுத்த படங்கள் தோல்வியாகவே அமைந்தன..இருமுகன்ஓரளவுக்குவசூலைப்பார்த்தாலும் கூட, இன்னும் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விக்ரம் தயாராகி வருகிறார். விக்ரம்தற்போது வாலு விஜய்சுந்தர்இயக்கத்தில் நடிக்கும் படத்தின் கதை அவ்வாறான வாய்ப்பை வழங்கும் என எதிர் பார்க்கிறார்..வடசென்னைபின்புலத்தில் நடக்கும் இந்தப் படத்தின் கதைக்கு ஸ்கெட்ச் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

தூள், சாமி, ஜெமினி என்று தனக்கு இருந்த மதிப்பை மீளப் பெறுவதற்கு இந்தப் படத்தை தானே நேரடி கண்காணிப்பில் இருந்து கவனிக்கிறாராம் விக்ரம்.

அதில் முக்கியமாக 'ஓ போடு...' அளவுக்கு ஒரு பாடல் வேண்டுமென கேட்டிருக்கிறாராம். புதிய வார்த்தைகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள் இசையமைப்பாளரும், பாடலாசிரியரும். விரைவில் அவ்வாறானபாடல் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.


**இடபம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச்சமாளிக்கமுடியாமல்திணறுவர்.. பெண்கள், குடும்பநலனுக்காகப்பாடுபடுவர்.


**மிதுனம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரவளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை பெற்று மகிழ்வர். பெண்கள், கலையம்சம் நிறைந்த பொருளை வாங்குவர்.


**கடகம்:** லட்சிய நோககத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம்தேவைப்படும். லாபம்சீராகஇருக்கும். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடிப்பர்.


**சிங்கம்:** பேச்சு, செயலில் நிதானத்தைப் பின்பற்றுவது அவசியம். தொழிலில், விடாமுயற்சிதேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.


**கன்னி:** நல்லவர்களின் அறிமுகமும் உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.


**துலாம்:** திறமையை வெளிப்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.


**விருச்சிகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.


**தனுசு:** அவசரப்பணியால், சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள், பணிவிடயமாகவெளியூர்செல்வர்.


**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாகஇருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவர்.


**கும்பம்:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம்சீராக இருக்கும். பணியாளர்கள், நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவர். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்கவேண்டாம்.


**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்ததைவிட லாபம் அதிக[illegible]க்கும். பணியாளர்கள், பணியை விரை[illegible]து முடிப்பர். உறவினர்மத்தியில்செல்வா[illegible]டன்திகழ்வர்.

## மன்னார் பிரதேச செயலகம்

# இரு பிரிவிலும் அசத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 29
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள், பெண்கள் என இருபாலார் பிரிவிலும் மன்னார் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில், ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 3:2 என்ற செற் கணக்கில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் மன்னார் பிரதேச செயலகம் சம்பியனானது. (ம-23)





# வலைப்பந்தாட்டத் தொடர்; விம்ஸ்ரார் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 29
அரியாலையின் 98ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டுவடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் அரியாலை விம்ஸ்ரார் அணி சம்பியனானது. அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையமைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் விம்ஸ்ரார் அணியை எதிர்த்து தெல்லிப்பழையூனியன்கல்லூரி அணி மோதியது. இதில் விம்ஸ்ரார் அணி 23:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச்சுவீகரித்தது. (ம-422-23)

## தேசியமட்ட மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 29
இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்து கொள்ள விரும்பும் யாழ்ப்பாணம் மாவட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் எஸ்.திருமாறன் அறிவித்துள்ளார். (ம-422)



## யாழ்ப்பாண பல்கலை அணி வென்றது வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
பேராதனை பல்கலைக்கழகத்தால் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கலப்பு வலைப்பந்தாட்டத் தொடரில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

பேராதனைப் பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் 9:9 என்று சமநிலையில் இருந்தன. இரண்டாம் பாதியில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி சிறிது ஆதிக்கம் செலுத்தியது. முடிவில் அந்த அணி 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்ற யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணிக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. (ம-422)

# நீக்கிலஸ், பாடும்மீன், பிறிலியன்ட் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தின

யாழ்ப்பாணம், மார்ச் 29
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். நீக்கிலஸ், குருநகர் பாடும்மீன், கல்முனை பிறிலியன்ட் அணிகள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற்றன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுமைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வென்னப்புவ அல் ஹார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதே மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொழும்பு யுப்பிற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்முனை பிறிலியன்ட் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கல்முனை பிறிலியன்ட் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையில் இரு பிரிவாக நடைபெற்று வரும் கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி 8.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக பி அணியுடன் மோதும். இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் குரு நாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும். (ம-23)

## வென்றது ஏபி

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் ஏபி அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் புற்றளை மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புற்றளை இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் ஏபி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புற்றளை இளைஞர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

61 ஓட்டங்களைஇலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கொக்குவில் ஏ பி அணி 6.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக உத்தமன் 37 ஓட்டங்களைப் பெற்றார். (ம-108)

## கலைமகள் காலிறுதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 29
அரியாலையின் 98 ஆவது சுதேசியத் திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகம் காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகமும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக பி அணியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 25:10, 25:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது கலைமகள் விளையாட்டுக் கழகம்.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 25:20, 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 நேர் செற்றில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம். (ம-422-23-108)




# சொந்த மண்ணில் இந்தியா சம்பியன்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்திய அணி.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வென்றது. மூன்றாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை உருவானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிமித் 111 ஓட்டங்களையும், வேட் 57 ஓட்டங்களையும், வோர்ணர் 56 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், அஸ்வின், ஜடேயா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 332 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஜடேயா 63 ஓட்டங்களையும், ராகுல் 60 ஓட்டங்களையும், புஜாரா 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லையன் 5 இலக்குகளையும், கும்மின்ஸ் 3 இலக்குகளையும், ஹசில்வூட், கெபி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வெறும் 137 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியவரிசையில் மக்ஸ்வெல் பெற்ற 45 ஓட்டங்களே அதிகபட்சம். வேட் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உமேஸ் யாதவ், ஜடேயா, அஸ்வின் மூவரும் தலா மூன்று இலக்குகளையும், புவனேஸ்வர் குமார் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

106 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ராகுல், விஜய் இருவரும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முரளி விஜய். ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ரண்அவுட் ஆனார் புஜாரா. சிறிது பதற்றம் உணரப்பட்டது. எனினும், ராகுல் - ரகானே இணை தொடர்ந்தும் நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தது. ராகுல் அரைச் சதம் கடந்தார்.

ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயா தெரிவுசெய்யப்பட்டார். (ம)

## தஸ்கின் அகமட் ஹற்றிக் படைப்பு

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமட் ஹற்றிக் படைத்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணித்தலைவர் தரங்க, முன்வரிசை வீரர் குசல் மெண்டிஸ் இருவரினதும் சிறந்த ஆட்டத்தால் இலங்கை அணி ஓட்டக்குவிப்பில் மும்முரமாக ஈடுபட்டது. குசல் மெண்டிஸ் சதம் கடந்தார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தின் மூன்றாம், நான்காம் மற்றும் 5 ஆம் பந்துகளில் முறையே குணரத்ன, லக்மல், பிரதீப் ஆகியோரை வீழ்த்தி ஹற்றிக் படைத்தார் அகமட். முடிவில் 311 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் அகமட் 4 இலக்குகளையும், மோர்ரசா, மிராஸ், ரகுமான் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பங்களாதேஷின் இன்னிங்ஸ் ஆரம்பமாகும் முன்பாக மழை குறுக்கிட்டது. மழை அளவுக்கு அதிகமாக ஆதிக்கம் செலுத்த ஆட்டம் கைவிடப்பட்டது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வென்றது. இரண்டாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இதனால் குறைந்தபட்சம் தொடரை சமன்செய்ய அடுத்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நெருக்கடி இலங்கைக்கு உள்ளது. (ம)



## தீவுகளுக்குச் சிக்கல்

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இதனால் நாளை நடைபெறும் ஆட்டத்திலும் பாகிஸ்தான் வெற்றிபெற்றால் தீவுகள் கிண்ணத்தைக் கைப்பற்றுவது சிக்கலுக்குள்ளாகும். எனவே கிண்ணக் கனவைத் தக்கவைக்க நாளைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு இருக்கவே செய்கிறது. (ம)



## தனது அடைவில் ஜடேயா திருப்தி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி தொடராட்ட நாயகன் விருது வென்றமைக்கு திருப்தி தெரிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயா.

ஒருநாள் ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய போதிலும் டெஸ்ட் ஆட்டங்களில் தொடராட்ட நாயகன் விருது என்னால் வெல்லமுடியாமல் இருந்தது. ஆஸ்திரேலியத் தொடரில் தற்போது அதைச் சாதித்துள்ளேன். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்று துறைகளிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியமை திருப்தி தருகிறது. தர்மசாலா போன்ற ஆடுகளங்களில் அரைச்சதம் பதிவுசெய்வதென்பதே மிகவும் கடினம் என்று ஜடேயா மேலும் தெரிவித்தார். (ம)

# நியூசியின் கட்டுப்பாட்டில் தென்னாபிரிக்கா தொடரைச் சமப்படுத்தக் கடும் போராட்டம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 1:1 என்று சமனிலை செய்ய நியூசிலாந்து அணி கடும் முனைப்புக் காட்டிவருகிறது.

வெலிங்டனில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 314 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 90 ஓட்டங்களையும், பிளாசிஸ் 53 ஓட்டங்களையும், அம்லா 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹென்றி 4 இலக்குகளையும், வாக்நெர் 3 இலக்குகளையும், கிரான்ட்ஹோம் 2 இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வில்லியம்சன் 148 ஓட்டங்களுடனும் சான்நர் 13 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 176 ஓட்டங்களுடன் வில்லியம்சனை வீழ்த்தினார் மோர்கல். 41 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் சான்நெர். பின்வரிசையில் களமிறங்கி அரைச்சதம் கடந்தார் கிரான்ட்ஹோம். இந்த அரைச்சதமே தென்னாபிரிக்காவுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தியது. கிரான்ட்ஹோம் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 489 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து.

பந்துவீச்சில் மோர்கல், ரபாடா இருவரும் தலா 4 இலக்குகளையும்,



மகாராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

175 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி முன்வரிசையை மிக விரைவாக இழந்தது. நாள் முடிவில் அந்த அணி 80-5 என்றுள்ளது. (ம)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

ஆரம்பம் - 01.04.2017 சனிக்கிழமை
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
16 வயதிற்க மேற்பட்டோர், பல்கலை மாணவர்கள்,தொழில் தேடுவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்-01.04.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
1. திங்கள், புதன் பிரிவுகள் காலை 10-12 மாலை 3-4.30
2. செவ்வாய்,வியாழன் பிரிவுகள் காலை 10-12 மாலை 3-4.30
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486


வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் நியூமைதிலி ஜுவலர்ஸில்
உடனடி வேலைவாய்ப்பு. (ஆண்/பெண்) இருபாலாரும்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
குறிப்பு: தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண்களும் தேவை. (சகல வசதிகளும் செய்து தரப்படும்.)
ஆர்வமுள்ளவர்கள் எமது ஜுவலர்ஸுக்கு நேரில் வரவும்.
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல.38-40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பயிற்சி + வேலைவாய்ப்பு
அரிய தோர் வாய்ப்பு
உலகளாவிய ரீதியில் அங்கீகரிப்பட்ட எமது Import, Export Everest நிறுவனமானது 10 இற்கு மேற்பட்ட புதிய கிளைகளை மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கவுள்ளது. அக் கிளைகளிற்குரிய 28 இற்கு மேற்பட்ட அலுவலக ரீதியான பதவி வெற்றிடங்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளது.
(தகைமையற்றவர்கள் 03 மாதகால தகுந்த பயிற்சியின் பின் திறமைக்கேற்ப பதவியினை பெற்றுக்கொள்ளமுடியும்)
தகைமை - ( O/L, A/L படித்தவர்கள்)
(2016 இல் O/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் பங்கு பற்ற முடியும்)
சம்பளம் - பயிற்சியின் போது - 15 000
பயிற்சியின் பின் - 45 000 - 75 000
தொடர்பு: 077 2986 763. 077 0064 030. 077 077 1377

வேலைவாய்ப்பு
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த க.பொ.த சாதாரண பரீட்சையில் குறைந்த தகைமை பெற்றவர்களுக்கான 3 பதவி வெற்றிடங்கள்.
01. வெளிக்கள உத்தியோகஸ்தர் 02. மேற்பார்வையாளர்
03. அலுவலகப் பெண்
வயதெல்லை 18 - 38
தூர இடங்களில் இருந்து வருவோருக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.
பயிற்சியளித்து உள்வாங்கப்படுவதோடு, பயிற்சிக் காலத்தில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு: 077 998 7699/ 077 884 8188
129, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் நாகமுத்து செல்லத்துரை (நவாலியூரான்)



நவாலியூரைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடம், ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கண்டி திரித்துவக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியருமான கலாபூஷணம் நாகமுத்து செல்லத்துரை (நவாலியூரான்) கடந்த (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.03.2017) புதன்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, நல்லூர் பரி.யாக்கோப்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

தகவல்
குடும்பத்தினர்.

# இந்திய அணி முதலிடம் ஒரு மில். டொலர் பரிசு

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்தப் பருவகாலத்துக்கான தொடரில் இந்திய அணி முதலிடம் பிடித்து அதற்குரிய ஒரு மில்லியன் டொலர்களை தட்டிச் சென்றது. ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடர் ஆரம்பமாகும் முன்னரே இந்திய அணி முதலிடத்தில்தான் இருந்தது. எனினும் இந்திய அணியை 3:0 என்று வீழ்த்தினால் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடிக்கும் என்ற நிலையும், ஆஸ்திரேலிய அணியை ஓர் ஆட்டத்தில் வீழ்த்தினால் இந்திய அணி தனது இடத்தைத் தக்கவைக்கும் என்ற நிலையும் இருந்தது. தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து இந்தியா இந்தப் பருவகாலத்துக்கான டெஸ்ட் ஆட்டங்களில் சம்பியனாக தெரிவாகியுள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கெதிராக நேற்றுக் கிடைத்த வெற்றியை அடுத்து தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு நிகழ் வில் இந்திய அணிக்கான சம்பியன் கோலும் ஒரு மில்லியன் டொலரும் பரிசாக வழங்கப்பட்டது. தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்று வரும் தொடர் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைத் தீர்மானிக்க வல்ல தொடராக அமைந்துள்ளது. இரண்டாம் இடத்துக்கு வரும் அணிக்கு 5 லட்சம் டொலர்கள் பரிசாக வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:25)

## முதலாம் ஆண்டு நிறைவும் நன்றி ஆராதனையும்

மண்ணில் 13.11.1993
விண்ணில் 25.03.2016



கடந்த 25.03.2016 கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்பு மகன்

### நகுலேஸ்வரன் ரஜீந்திரன் (பர்ணபா - ரஜீ)

அவர்களுடைய கடந்த கால வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (29.03.2016) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக....

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

IIS இன் 22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்
MBA
Master of Business Administration
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கற்கைநெறி
Specialization
- General
- Finance
- Information Technology
- Marketing
- Human Resource Management



விரிவுரை நேரங்கள்:
வார நாட்கள்
- மாலைநேர வகுப்புக்கள் (6.30–9.30)
வார இறுதிநாட்கள்
- ஞாயிறு (பகல் 10.00–4.00)
கல்வியாண்டு 2017 / 18
சித்திரை மாதத்திற்கான பதிவுகள் ஆரம்பம் 15.04.2017
கற்கைநெறியின் தனித்துவம் .......
- 1 வருடகால கற்கைநெறி
- இலகு தவணைமுறைக்கட்டணம்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த செலவு
- நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய விரிவுரை நேரங்கள்
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
iis@iis.edu.lk , info@iis.edu.lk
Hotline: 071 777 5666
info@iis.edu.lk

Bcom
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழகத்தினால் மேற்படி கற்கை நெறிக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம் - 01.04.2017 காலை 8மணி
குறிப்பு: B.A இற்கான விரிவுரைத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
விவரங்களுக்கு : S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர்கல்லூரி
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

முகாமையாளர் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான Digital Printer இற்கு குறிப்பிட்ட துறையில் அனுபவமுள்ள முகாமையாளர் தேவை.
ஆர்வம் உள்ளோர் சுயவிவரக்கோவையை பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல: 5529, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கணக்காளர் சேவை
போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்கு மாலை நேரம் ஆரம்பமாகின்றது.
ஆரம்பம் - வியாழன் (30.03)
5.00 - 7.00
தினமும் பி.ப. 5 தொடக்கம் 7 மணி வரை 20 ஆம் திகதி வரை நடைபெறும்.
தொடர்புகளுக்கு -
076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கிஅருகில் )

CHEMISTRY CENTRE-INUVIL
(பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு)
அசேதன இரசாயனம்
(Short Notes with Pastpaper Questions)
2018 A/L பிரிவுகள்
ஆரம்பம் : 29.03.2017 மாலை 6.30 PM
(20 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்)
(திங்கள், புதன் மாலை 6.30-8.00 PM வகுப்புகள் நடைபெறும்)
By, Mr. K.T.Shivakumar B.Sc. PGDE
Contact No. 077 929 7344

IELTS Life skills UK
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655
www.itdmi.com/english

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.